ரூபா 20.00


கொள்வனவு
பக்கம் 8


வெடிக்குமா? பதற்றம்
பக்கம் 9


வெள்ளப் பெருக்கு
பக்கம் 10


ராஜதந்திரிகள்
பக்கம் 12


பக்கங்கள் : 26

★ **உதயன்**

சுடர் 27
கதிர் 170

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 1 திங்கட்கிழமை (14/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


www.onlineuthayan.com

### வெற்றி விழா காலியில்

தமிழீழ விடுதலைப் புலிகளு டனான போரில் வெற்றியீட்டிய 3ஆவது ஆண்டு நிறைவைப் பிரதிபலிக்கும் வெற்றிவிழா எதிர் வரும் 18ஆம் திகதி காலி முகத் திடலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறவுள்ளது என்று இரா ணுவப் பேச்சாளர் பிரிகேடி யர் ருவான் வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

# உதவிகளைப் பெறுவதில் உள்ள அக்கறை இனப் பிரச்சினைக்கான தீர்விலும் தேவை


## அமெரிக்க தூதரக அதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 14

வெளிநாட்டு உதவிகள் மூலம் பொருளாதார அபி விருத்திக்கு அக்கறை காட்டி வரும் இலங்கை அரசு, அதே அக்கறையோடு போர் ஏற்படு வதற்கு அடிப்படைக் காரண மான அரசியல் பிரச்சி னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று அமெரிக்கா கருதுகிறது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக் கைகள் மற்றும் ஜெனிவா தீர் மானம் தொடர்பான செயல் திட்டங்கள் பற்றி வெளி விவகார அமைச்சர் பேராசிரி யர் ஜி.எல்.பீரிஸிடம் அமெ ரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் கேள்வி எழுப்பவுள்ளார். இந்த மாத இறுதியில் அமெரிக்கா செல்ல வுள்ள அமைச்சர் பீரிஸ் இவற் றுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடத்திய 04↘


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடத்திய அரசியல் மாநாட்டின் போது.

### மத ரீதியான ஆக்கிரமிப்பு இந்து மா மன்றத்திடம் முறையீடு

கொழும்பு, மே 14

தமிழர் தாயக பூமியில் திட்டமிட்டு அரங்கேற்றப்ப டும் மத ஆக்கிரமிப்பு நட வடிக்கைகள் குறித்து வடக்கு, கிழக்கு இந்து அமைப்புகள் அகில இலங்கை இந்து மா மன்றத்தின் அவசர கவனத் துக்குகொண்டுவந்துள்ளன.

ஆலயச் சூழலில் படைத் தரப்பின் ஆக்கிரமிப்பு செயற் பாடுகள், பாதுகாப்புக் கெடு பிடிகள் உட்பட்ட அத்துமீறி நடக்கும் சம்பவங்கள் குறித் தும் அந்த அமைப்புகள் இந்து மா மன்றத்திடம் முறையிட் டுள்ளன.

இந்து மக்களின் பிரச்சினை கள் குறித்து ஆராயும் அவசர கூட்டமொன்று நேற்று கொழும் பில் நடைபெற்றது. அகில இலங்கை இந்து மா மன்றத்தின் தலைமையகத்தில் நடை பெற்ற இந்தக் கூட்டத்தில் நாட்டின் பல பாகங்களிலு முள்ள இந்து அமைப்புகள் கலந்துகொண்டன. (ங-சி)

# தமிழீழத்தைத் தீர்வாக தமிழர்கள் கேட்கவில்லை

## உறுதியாகக் கூறுகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், மே 14

"தமிழ் மக்கள் தமது பிரச்சினைக்குத் தீர்வா கத்தமிழீழம்தான் வேண் டும் என்று கேட்க வில்லை. எனவேதமிழ்த் தேசியக் கூட்டமைப் பும் தமிழீழம் கேட் காது" என்று தெரிவித் தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

ஜனநாயகஅடிப்படை யில் அரசியல் சமூக உரிமைகளை வென் றெடுப்பதற்கான விழிப் புணர்வுக் கருத்தரங்கு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மண்ட பத்தில் நடைபெற்றது.

அங்கு 'அதிகாரப்பர வலாக்கல் மூலம் தேசி யப்பிரச்சினைக்குதீர்வு' என்ற கருப்பொருளில் அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி 04↘

## நிபந்தனையுடனேயே தெரிவுக்குழுவுக்கு

### கூட்டமைப்பின் நிலைப்பாடு

யாழ்ப்பாணம், மே 14

நிபந்தனையின்பேரில் இலங்கை அரசின் தெரிவுக் குழுவில் பங்கேற்க கூட்டமைப்பு தயாராகவே உள் ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்துவ தற்கு கூட்டமைப்பு எப்போதும் இதயசுத்தியுடன் செயற்படுவதை இதன்மூலம் சர்வதேசத்துக்கு வெளிப் படுத்த முடியும்.

இவ்வாறு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்ட பத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவுக்குழு தொடர் பான கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளிப் படுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் 04↘

## ஆணைக்குழுவின் அறிக்கை முஸ்லிம்களுக்கு தீர்வாகாது

### முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கை

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையையோ அல்லது அதன் சிபாரிசுகளையோ முஸ்லிம் மக்களின் முழுமையான பிரச்சினைகளுக்குரிய தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பிலான ஆளுங்கட்சி யிலுள்ள பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாட்டை விளக்கு மாறு கடந்த வாரம் அரசு கேட்டுக்கொண்டது. இதற்கமைய கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் இன்று விசேட அறிக்கையொன்றை 04↘

## முதல்வர் பதவி தராவிட்டால் அரசிலிருந்து வெளியேறுவோம்

### மாகாண சபை கலைப்புக்கு முன்னர் வாக்குறுதி வேண்டும் என்கிறது மு.கா.

கொழும்பு, மே 14

"கிழக்கு மாகாண முதல மைச்சர் பதவி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வழங்கப்படும் என மாகாண சபையைக் கலைப்பதற்கு முன் ஜனாதிபதி வாக்குறுதி வழங்கவேண்டும். இல்லை யேல், முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து விலகி தனித்து அல்லது எதிர்க்கட்சி களுடன் இணைந்து போட்டி யிடும்."

இதுவே முஸ்லிம் காங் கிரஸின் நிலைப்பாடு என அக்கட்சி வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

கிழக்கு மாகாண 04↘

## லண்டன் செல்லும் மஹிந்த பாதுகாப்புக் கோருகிறார்

### அதிகாரிகளுடன் இலங்கை தூதரகம் பேச்சு

கொழும்பு, மே 14

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபெத் அரியாசனத்தில் அமர்ந்து 60 ஆண்டுகள் நிறைவடை வதை முன்னிட்டு நடை பெறும் வைரவிழா நிகழ்வு களில் பங்கேற்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண் டன் செல்லவுள்ளார்.

இந்த நிகழ்வில் பங் கேற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை அடுத்து அவர் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 4 நாள்கள் பிரிட்டனுக்கான 04↘

## மத அழிப்புத் தொடர்ந்தால் மீண்டும் தமிழர்கள் ஆயுதப் போரில் குதிப்பர்

### எதிர்வு கூறுகிறார் விக்கிரமபாகு கருணாரத்ன

கொழும்பு, மே 14

தமிழ் மக்களின் பாரம் பரிய சின்னங்களை அழிக்கும் நடவடிக்கையில் இந்தப் பேரினவாத அரசு தொடர்ந் தும் ஈடுபடுமானால் தமது இனத்தின் அடையாளங் களைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் தமிழர்கள் ஆயுதப் புரட்சியை அணுக வேண்டிய நிலைக்குத் தள் ளப்படுவர் என்று நவசமச மாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரட்ன தெரிவித் தார்.

இலங்கையில் ஆரம்ப காலத்தில் இந்து மதமே இருந்தது என்ற வரலாற் றைப் பேரினவாத 04↘

### மக்களிடம் செல்லுங்கள்

#### ஐ.தே.க.வுக்கு மஹிந்த அறிவுரை

கொழும்பு, மே 14

அரசைத் தோற்கடித்து அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விரும்பினால், குறை கூறுவதை நிறுத்தி மக் களின் நம்பிக்கை 04↘

## வடக்கில் தேர்தலை நடத்த இலங்கை அரசுக்கு அச்சம்

### ஜே.வி.பி. கிண்டல்

கொழும்பு, மே 14

தோல்விப் பீதியாலேயே அரசு வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி., ஒரே தடவையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப் படவேண்டும் என்றும் வலி யுறுத்தியுள்ளது.

சுயாதீன தேர்தல் குழுவை அமைத்து ஜன நாயக முறைப்படி 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மஹிந்தவே தெய்வம்' குழப்ப முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், மே 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற செயலமர்வில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்ற நபர் ஒருவரின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

ஜனநாயக அடிப்படையில் அரசியல் சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கையே அந்த நபர் குழப்ப முயன்றார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், கட்சி ஆதரவாளர்கள் ஆகியோரால் நிறைந்திருந்த மண்டபத்தில் அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் கலாநிதி போல் காட்டர் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேசுவதன் முக்கியத்துவத்தை அவர் தனது உரையில் வெளிப்படுத்தினார். நிகழ்வின் ஆரம்பத்தில் மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்வின்போது தூதரக அதிகாரி தனது பாரியார் சகிதம் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினார்.

இவற்றை அவதானித்துவிட்டு மண்டபத்தின் மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்த அந்த நபர் சடுதியாக எழுந்தார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ எங்கள் கடவுள், அவரைப் பற்றி விமர்சிக்க எவருக்கும் அருகதை கிடையாது. வெள்ளையனே வெளியேறு எனக் கூறி அவர்களிடமிருந்து இலங்கை நாட்டைக் காப்பாற்றி இருக்கின்றோம். நீங்கள் என்னவென்றால் வெள்ளையனை மேடையில் அமர்த்திவைத்து கொண்டாடுகிறீர்கள்'' என மூச்சு வாங்கிய நிலையில் அந்த நபர் கூறிமுடித்தார்.

**குறித்த நபரை ஏதோ ஒரு தரப்பு திட்டமிட்ட முறையில் நிகழ்வை குழப்புவதற்காக அனுப்பி வைத்துள்ளது.**

இதனால் மண்டபத்தில் தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள் அந்த நபரை நோக்கி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எனினும் நிகழ்வை ஏற்பாடுசெய்தவர்கள் அமைதி காக்கும்படி வேண்டிக் கொண்டனர். அதனை அடுத்து அங்கு அமைதி ஏற்பட்டது. குழப்பம் விளைவிக்க முயன்ற நபர் அங்கிருந்து வெளியேறி விட்டார்.

''குறித்த நபரை ஏதோ ஒரு தரப்பு திட்டமிட்ட முறையில் நிகழ்வைக் குழப்புவதற்காக அனுப்பி வைத்துள்ளது என்றும் ஆயினும் அவர்கள் நோக்கம் நிறைவேறவில்லை'' என கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர் கூறினார்.

குறித்த அந்த நபர் வைத்தியசாலை ஒன்றில் சிற்றூழியராகப் பணி புரிபவர் என்று தெரியவந்தது. (ங-3)

# உலகின் சக்திமிக்க பெண்மணி ஹிலாரி

உலகின் அதி சக்திபடைத்த 'முதல் அன்னையாக' அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உலகின் அதி சக்தி படைத்த 100 பெண்களின் வருடாந்தப் பட்டியலை போர்பஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. இதில் முதல் இடத்தை ஹிலாரி கிளின்டன் வகிக்கிறார்.

அமெரிக்க அரசியல் வாழ்க்கையில் அதி தீவிரமாகப் பங்கெடுத்துவரும் ஹிலாரி கிளின்டன் தனது புதல்வி செல்சியாவையும் நன்கு பராமரித்து வருகின்றார் என ரியா ஜொவொஸ்ட்டி சஞ்சிகை புகழாரம் சூட்டியுள்ளது.

போர்பஸ் மகளிர் சஞ்சிகை உலகின் அதி சக்திபடைத்த 100 பெண்களின் விவரப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அரசியலில் ஈடுபட்டுள்ள அதே சமயத்தில், தனது புதல்வியையும் பேரனையும் சீராகப் பேணிவரும் பிரேஸிலின் ஜனாதிபதி தில்மா ரூசெல் இரண்டாவது இடத்தை வகிக்கிறார்.




# அமெரிக்காவுக்காகவே பந்தாடப்பட்டார் தமரா

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே 14

அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பணியாற்றிய தமரா குணநாயகம் ஜெனிவாவில் இருந்து கியூபாவுக்கு பந்தாடப்பட்டார். அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதன் மூலம் மனித உரிமை விவகாரங்களிலிருந்து தப்பிக்க இலங்கை அரசு முனைகின்றது என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான தமரா குணநாயகத்தை கியூபாவுக்கு இடமாற்றியமை தொடர்பாக ஜே.வி.பி. அரசியல் அதிகார மட்டத்தில் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க,

''மே 18ஆம் திகதி காலிமுகத்திடலில் இலங்கை அரசு இராணுவ வெற்றியைக் கொண்டாடும் அதே வேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சர், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனைச் சந்தித்து இரகசியமாக இலங்கை அரசின் செயற்திட்டம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

இது இலங்கை அரசின் இரட்டை வேடத்தைத் தெளிவாக காண்பிக்கின்றது. தம்மிடம் காண்பிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தை முதலில் மக்களுக்குக் காண்பிக்குமாறு இலங்கை அரசிடம் அமெரிக்காகேட்டுக்கொண்டது.

இருப்பினும் இந்தச் செயற்திட்டத்தை முதலில் மக்களிடம் காண்பிக்க இலங்கை அரசு தயக்கம் காட்டுகின்றது.

அமெரிக்காவை திருப்திப்படுத்துவதற்காகவே ஜெனீவாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியாகப் பணியாற்றிய தமரா குணநாயகம் பதவி விலக்கப்பட்டார்.

அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதன் மூலம் மனிதஉரிமை விவகாரங்களிலிருந்து தப்பிக்க இலங்கை அரசு முயல்கிறது என்றார்.

இதன்போது ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்ததாவது,

இலங்கை அரசு தொடர்ச்சியாக மக்கள் மீது அழுத்தத்தை வழங்கிவருகின்றது. எனினும் அரசின் கீழ்த்தரமான நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்த்து மக்கள் ஓரிடத்தில் இன்னமும் அணிதிரளவில்லை. இதனால் மக்களை ஒன்று திரட்டுவதற்கு எமது கட்சியின் மாவட்ட மற்றும் தேர்தல் தொகுதி ஒழுங்கமைப்பாளர்களை உடனடியாகப் பலப்படுத்த வேண்டும்- என்றார். (ங)

# புத்தர் சிலையை அகற்ற மேல் மாகாண சபையில் தீர்மானம்

கொழும்பு, மே 14

திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுமாறு வலியுறுத்தி மேல் மாகாணசபையில் பிரேரணையொன்றை சமர்ப்பிப்பதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஜூன் மாதம் முதலாம் வாரத்தில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்படும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குருபரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆலய வளாகத்தில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளதை அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

திருக்கேதீஸ்வர ஆலய விவ்காரத்தைக் கையாள்வதற்கு ரஜீவ விஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை பெயரளவில் மட்டுமே. இதனால், நடக்கப்போவது ஒன்றுமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# 'கோத்தாவின் போர்' இன்று வெளியீடு

கொழும்பு, மே 14

''இலங்கையில் தமிழ்ப் புலித் தீவிரவாதத்தை நசுக்கிய கோத்தாவின் போர்'' என்ற நூல் இன்று கொழும்பில் வெளியிடப்படவுள்ளது.

ஐலன்ட் ஊடகவியலாளர் சந்திரப்பெரும எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழா பத்தரமுல்ல வோட்டர் எட்ஜ் விடுதியில் நடைபெறவுள்ளது.

1956ஆம் ஆண்டில் இருந்து மோதல்கள் முழுவதையும் ஆய்வு செய்யும் விதத்தில் - அரசியல் மற்றும் இராணுவ விடயங்களை உள்ளடக்கியதாக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சிறுவனைக் கடத்திய நால்வர் கைதாகினர்

கொழும்பு, மே 14

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட சச்சியார் வீதியில் சிறுவனொருவனை நேற்று கடத்த முற்பட்டதாகக் கூறப்படும் 4 பேர் வாழைச்சேனை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிலாபத்தைச் சேர்ந்த இருவரும் வாழைச்சேனையைச் சேர்ந்த இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவனை மேற்குறித்த நால்வரும் வாகனம் ஒன்றில் ஏற்றியதை அவதானித்த உறவினர்கள் வாகனத்தைப் பின்தொடர்ந்தனர். அத்துடன் கடத்தல் சம்பவம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்தனர். பின்னர் கடத்தல் வாகனத்தை மடக்கிய பொலிஸார் கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட நால்வரையும் கைது செய்துள்ளனர்.

நேற்றுக் காலை கல்குடாவில் சிறுமியொருவரைக் கடத்த முயன்று முடியாதுபோன நிலையில் பின்னர் இந்தச் சிறுவனைக் கடத்த முயன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# சர்வதேச நெருக்குதல்களைத் தவிர்க்க அரசு நடவடிக்கை

## ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு,மே 14

ஜெனிவாவில் மனித உரிமை சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் காணப்படும் அம்சங்களின் படி நடந்துகொள்ளாது போனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் குறித்து அரசாங்கம் இப்பொழுது உணர்ந்து கொண்டுள்ளது. அதனால் அமெரிக்காவின் கரிசனைக்கு ஏற்ற முறையில் காரியங்களை முன்நகர்த்துவதற்கு அரசு இப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இவ்வாறு சண்டே ரைம்ஸ் பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அரச பிரசுர நிறுவனத்தில் அதன் பிரதிகள் கிடைப்பதாக இல்லை. அரசு வெளியிட்ட ஒரு சுருக்கப் பிரதியைத் தவிர தமிழ் சிங்களப் பிரதிகளும் கிடைப்பதாக இல்லை.

வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்திக்கும் போது ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் பற்றி மட்டுமல்ல அந்தக் குழுவினால் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாத பொறுப்புக் கூறும் விடயமும் ஹிலாரி கிளின்டனால் எழுப்பப்படும் என எதிர்பார்க்கலாம் .

இராணுவ விசாரணைகள் நடத்தப்படுவது குறித்து அமெரிக்கா அதிக கரிசனை கொள்ளவில்லை. விசாரணைகள் நம்பகத்தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும் என்றே அமெரிக்கா கருதுகின்றது. இது ஒரு மத்திய பொறிமுறையினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா கூறும் அதேவேளை இந்தப் பொறிமுறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி விளக்கியிருக்கவில்லை. அதே போல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பதை அமெரிக்கா ஆதரித்தாலும் இழப்பீடு என்று அதனை அழைக்கவிரும்பவில்லை.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பரிந்துரைகளிலிருந்து தெரிவு செய்து வழங்குவதற்காக நியமிக்கப்படவுள்ள வீரதுங்க தலைமையிலான அதிகாரபூர்வ குழுவானது கட்சிகளுடன் ஒருமித்த கருத்து உருவாக்கப்பட்டுள்ள விடயங்களை ஒவ்வொன்றாக நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளும் என்றும் அப்படியான ஒன்றுதான் இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்துவது என்று நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. மற்றொன்று தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும் ஒரே மெட்டில் பாடும் பழைய நடைமுறையைத் தொடர்ந்து வைத்திருப்பதாகும். மோதலுக்குப் பின்னரான காலப் பகுதியில் இதை மாற்றுவதானது பெரிதாக குரோத உணர்வுகளைத் தூண்டுவதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. இப்போதுள்ள நடைமுறையை எல்.எல்.ஆர்.சி. யும் பரிந்துரைத்துள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிதண்ணீருக்குள் டீசல் ஊற்றிய விஷமிகள்

யாழ்ப்பாணம், மே 14

நெடுந்தீவு மேற்கு சாரப்பிட்டியில் உள்ள குடிதண்ணீர் கிணற்றுக்குள் விஷமிகள் டீசலை ஊற்றியுள்ளனர். இதனால் இந்தக் கிணற்றில் இருந்து பௌசர் மூலம் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7)

# 4 வருட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் தயாரிப்பு

### கரவெட்டிப் பிரதேச சபை இன்று முதல் நடவடிக்கை

வடமராட்சி, மே 14

*கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையில் மக்கள் பங்கேற்புடன் 4 வருடங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்படவுள்ளன. எதிர் காலத்தில் கிடைக்கும் அரச, அரச சார்பற்ற நிதி மூலம் 4 ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பங்களிப்புடன் நிறைவேற்றவே இந்தத் திட்டங்கள் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்க பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.*

பிரதேசசபை எல்லைக்குள் 35 கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வியாழக்கிழமைவரை முன்மொழிவுகளை ஏற்கும் கூட்டங்கள் நடைபெறும். இந்தக் கூட்டங்களில் கிராம அலுவலர்கள், தேர்வு செய்யப்பட்ட இலகுபடுத்துநர்கள், அந்தந்தப் பகுதிகளுக்கான பிரதேச சபை உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்வர்.

மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்துக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் கூட்டங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரணவாய் விபுலானந்தர் சனசமூக நிலையம், கரணவாய் மேற்கு சோளங்கன் சனசமூக நிலையம், கரணவாய் மத்தி பொன்னம்பலம் வித்தியாலயம், கரவெட்டி மேற்கு ஸ்ரீ நாரதா வித்தியாலயம், கரவெட்டி திருஇருதயக் கல்லூரி ஆகிய இடங்களிலும்-

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா வித்தியாலயம், கரவெட்டி தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம், மத்தொனி நவசக்தி சனசமூகநிலையம், கரவெட்டி மத்தி கிராம சேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுப்பிட்டி இராஜசிங்கம் முன்பள்ளி, உடுப்பிட்டி வடக்கு கலைவாணி சனசமூகநிலையம், கரவெட்டி கிழக்கு, கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், கட்டைவேலி நாமகள் சனசமூக நிலையம், துன்னாலை தெற்கு கிராமசேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும்-

18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுப்பிட்டி பொது நோக்கு மண்டபம், வல்வெட்டி சனசமூகநிலையம், துன்னாலை கிழக்கு ஆட்டுப்பட்டி பொது மண்டபம், துன்னாலை அல்லையம்பதி முன்பள்ளி, துன்னாலை மத்தி கோவிற் கடவை சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும்-

22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இமையாணன் கிராம சேவையாளர் அலுவலகம், இமையாணன் மேற்கு பொது நோக்கு மண்டபம், நெல்லியடி கிழக்கு கிராம சேவையாளர் அலுவலகம், அல்வாய் தெற்கு வதிரி தமிழ் மன்றம் ஆகிய இடங்களிலும்-

24 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரணவாய் வடக்கு பொது நோக்கு மண்டபம், கரணவாய் வடமேற்கு தாமோதரா வித்தியாலயம், அல்வாய் கிழக்கு சின்னத்தம்பி வித்தியாலயம் அத்தாய் விநாயகர் சனசமூக நிலையம், கப்பூது கிராமசேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளன.

பிரதேச மக்கள் தத்தம் கிராமங்களின் அபிவிருத்தியில் பங்கெடுத்து அபிவிருத்திகளை முதன்மைப்படுத்தி திட்ட முன்மொழிவுகளை வழங்குமாறு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தெரிவித்துள்ளார். (ம-8)

## கொலை வழக்கு தீர்ப்புக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 14

2002 மார்ச் மாதம் கரணவாயில் வைத்து மாணிக்கம் நவராஜா என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டு சம்பந்தமான வழக்குத் தீர்ப்புக்காக எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு யாழ்.மேல் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொலைக் குற்றச்சாட்டு அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் சுவேந்திரன், சண்முகம் சதீஸ்கரன் ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பிரகாரம் இறந்தவரது உடலில் 16 காயங்கள் இருந்துள்ளன என்றும் அவற்றில் 2 பெரிய காயங்கள் காரணமாகவே அவர் இறந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் விசாரணையின் போது மீட்கப்பட்ட கத்தி, வாள் என்பன சான்றுப் பொருள்களாக மன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

முதலாம் எதிரியால் அப்போதைய பருத்தித்துறை நீதிவானாக இருந்த அ.பிறேம்சங்கர் முன்னிலையில் வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமும் மன்றில் சான்றுப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

நேரில் கண்ட சாட்சிகள் இல்லாத நிலையில் வழக்கு விசாரணையில் முன்வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியமும் திருப்திகரமானதாக இல்லை எனவும் எதிர்தரப்பு சட்டத்தரணி தமது தொகுப்புரையில் தெரிவித்தார். இந்த நிலையில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-4)

# அதிகாலையில் ஆஸ்பத்திரியில் சேர்ந்த திருடர்கள் காலையில் தப்பியோட்டம்

தென்மராட்சி, மே 14

அதிகாலையில் அடிகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்ந்த இருவர் விடிந்த பின் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நுணாவில் மேற்கு மணங்குணாய் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தின் போது தாக்கப்பட்டுக் காயமடைந்தவர்களே இவ்வாறு தப்பியோடியுள்ளனர்.

நேற்று நள்ளிரவு வேளையில் நுணாவில் மேற்கு மணங்குணாய் பகுதியில் உள்ள வீடொன்றின் மின் விளக்குகளை அணைத்துவிட்டு திருட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேளையில் வீட்டில் இருந்த பெண் கூக்குரலிட்டுள்ளார்.

அருகில் ஆலயமொன்றில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த இவரது இரண்டு மகன்களும் ஓடி வந்தபோது கையில் அகப்பட்ட பொருள்களுடன் திருடர் ஓடித் தப்பினர்.

அங்கு வந்த இருவரும் மின் விளக்குகளை இயக்கிவிட்டு தேடிப் பார்த்துவிட்டு மீண்டும் வேலைக்குச் சென்றனர்.

திரும்பவும் மின் விளக்குகள் அணைந்ததை அவதானித்து மகன்மார் இருவரும் ஓடி வந்தபோது இருவர் ஓடியதை அவதானித்து அவர்களைத் துரத்திச் சென்று பிடித்துத் தாக்கியுள்ளனர். பின்னர் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் வராததால் ஏ-9 வீதியூடாக அவர்களை அழைத்துச் சென்றனர். அந்தவழியில் உள்ள காவலரணில் இருந்து வந்த படையினர் என்ன நடந்தது என விசாரித்தபோது குறித்த திருடர்கள் இருவரும் சிங்களத்தில் ஏதோ சொல்ல படையினர் மற்றைய இருவரையும் தாக்கியுள்ளனர்.

காயமடைந்த சகோதரர்கள் நுணாவிலில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சம்பவத்தைக் கூறியபோது வைத்தியசாலைக்குச் சென்று முறைப்பாடு தெரிவிக்குமாறு கூறியுள்ளனர்.

இதனையடுத்து கந்தசாமி மகிழ்ராஜ்- (வயது-21) என்பவர் வைத்தியசாலைக்கு அதிகாலை 1.05 மணிக்கு சென்றார். மற்றவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

திருடர்கள் எனச் சந்தேகிக்கப்படும் எம்.பி.பிரதீப் ருந்துகுமார (வயது-23) ரூபன் நந்தன (வயது-20) ஆகிய இருவரும் அதிகாலை 1.30 மணிக்கு வைத்தியசாலையில் சேர்ந்தனர்.

இந்த இருவருமே காலையில் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## பாஷையூர் இறங்குதுறைக்கு கட்டுமானப் பணி விரைவில்

யாழ்ப்பாணம், மே 14

பாஷையூர் இறங்குதுறைக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இறங்குதுறை மற்றும் கடலோர பாதுகாப்பு அணை என்பன ஐ.ஓ.எம். நிறுவனத்தின் உதவியுடன் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன. இந்த இறங்குதுறைக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்குக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பே தெற்கில் இருந்து பெரும் கற்கள் எடுத்துவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் நீண்ட காலமாகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாமலேயே இருந்தன. தற்போது இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக பாஷையூரில் இறங்குதுறை வசதி இன்மையால் மீனவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர். மீனவர்கள் தமது மீன்பிடி தொழிலை மேற்கொள்வதற்கு கரையில் இருந்து நீண்ட தூரம் கடலில் நடந்து சென்றே வள்ளங்களில் செல்கின்றனர்.

அத்துடன் தமது மீன்பிடி உபகரணங்களையும் சிரமப்பட்டே காவிச் சென்று வள்ளங்களில் ஏற்றி வருகின்றனர்.

இங்கு இறங்குதுறை ஒன்று அமைப்பதன் மூலம் மீனவர்கள் தமது வள்ளங்களை கரையில் விட்டு சிரமம் இன்றித் தமது தொழிலை மேற்கொள்ள முடியும் என்றும் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## விடுதிகளில் தங்கியிருப்போர் விவரங்கள் பார்வைக்கு

### சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைமுறைக்கு வந்தது

தென்மராட்சி, மே 14

இலங்கை வைத்தியசாலை வரலாற்றில் முதன்முறையாக விடுதிகளில் தங்கியிருப்போரின் பெயர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இந்த நடைமுறை முதல் தடவையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் தூர இடங்களிலிருந்து வரும் பார்வையாளர்களின் நலன்கருதி விடுதியில் தங்கியுள்ளோரின் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களின் பெயர்களும் தனியாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு விடுதியில் உள்ளவர்களின் பெயர்கள் வெளிநோயாளர் பிரிவில் காட்சிப்படுத்தப்படுவது தமக்கு அலைச்சலை ஏற்படுத்தாது என்று பார்வையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (ம-9)

## குடிதண்ணீர் விநியோகத் திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 14

வட்டு.கலட்டி வீதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

வட்டு. பத்திரகாளி அம்மன் வீதி கிணற்றில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் முன்மொழியப்பட்டு பணிகள் இடம்பெற்றன. குறிப்பிட்ட பணியில் பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தின் உடைவு காரணமாகத் திட்டம் கைவிடப்பட்டது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர், மாவட்ட முகாமையாளர் ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின் தேவை குறித்து வலி.மேற்கு பிரதேச சபை சம்பந்தப்பட்டவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

எனினும் திட்டம் முழுமை பெறாததால் இந்த வீதியில் உள்ள மக்கள் குடிதண்ணீருக்காக பல மைல் தூரம் செல்ல வேண்டிய நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி திட்டத்தைத் துரிதப்படுத்த அந்தப்பகுதி மக்கள் கையெழுத்திட்ட மனு ஒன்றை மீளவும் யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் ஒப்படைக்கவுள்ளதை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரயில் நிலையங்களின் திருத்தப் பணிகள் துரிதம்

வட பகுதியில் உள்ள ரயில் நிலையங்களை விரைவில் புனரமைப்புச் செய்வதற்கு மத்திய ரயில்வேத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து தெல்லிப்பழைவரையுமாக உள்ள சிறிய ரயில் நிலையங்களை ரயில்வேத் திணைக்களத்தின் உதவியுடன் புனரமைப்பு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். ரயில் நிலையம் இலங்கை வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் நாவற்குழி ரயில் நிலையமும் சாலை வசதியுடனும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த ரயில் நிலையத்தில் இருந்து வெளியிடங்களுக்கான உணவுப் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளது.

நாவற்குழியில் அரச உணவு களஞ்சியம் மற்றும் கடலுணவு பதப்படுத்தும் உற்பத்தி நிலையம் போன்றவை உள்ளன. இதனை அடுத்து இந்த ரயில் நிலையம் உணவுப் பொருள்களை ஏற்றி இறக்கும் தளமாகவும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ரயில் நிலையம் சாலைவசதிகளையும்கொண்ட நிலையமாகவும் மாற்றியமைக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் தேர்தலை நடத்த இலங்கை அரசுக்கு அச்சம்

01 தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாரா என்றும் ஜே.வி.பி. சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. யின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி. தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஒரு போதும் அஞ்சாது. அரசுதான் பயத்தில் நடுங்குகின்றது. அதனால்தான் தனக்குத் தேவையான - தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் அரசு கட்டங் கட்டமாகத் தேர்தல்களை நடத்துகின்றது.

சுயாதீன தேர்தல் குழுவை அமைத்து, அரச வளங்களைப் பயன்படுத்தாமல் அரசு தேர்தலில் மோதுமானால் நிச்சயம் அதைத் தோற்கடிப்போம்.

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தினால்தான் அரசு அங்கு தேர்தலை நடத்துவதற்குப் பின்னடிக்கின்றது. வடக்கு மாகாண சபைக்குத்தான் இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. எனவே, அங்கு தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் - என்றார்.

## வவுனியாவில் திடீர் சோதனை

வவுனியா தோணிக்கல் தேக்கவத்தைப் பிரதேசங்களில்இராணுவத்தினரும்பொலிஸாரும் இணைந்து நேற்று அதிகாலை 4 மணியில் இருந்து வீடு வீடாகச் சென்று திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரில் விடுதலைப் புலிகளுக்குச் சார்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இறுதிப் போரின் நினைவு நிகழ்வும் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக செய்திகள் பரவியுள்ள நிலையில் இராணுவத்தினர் மக்களின் வீடுகளுக்குச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (10-400-402)

## மக்களிடம் செல்லுங்கள்

01 தற்கு மக்களிடம் செல்லவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

'மக்கள் எம்முடன் இருக்கும்வரை நாம் தேர்தல்களில் வெற்றி பெறுவோம். எனவே தேர்தல் எதையும் நடத்துவதற்கு நாம் அஞ்சவில்லை. ஆனால் பிரதான எதிர்க்கட்சி தேர்தல்களுக்கு அஞ்சுகிறது. எப்போது நாம் தேர்தல் நடத்த முற்பட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியானது நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தல் நடத்துவதற்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பெறுகிறது' எனவும் அவர் தெரிவித்தார்.

## ஆணைக்குழுவின் அறிக்கை முஸ்லிம்களுக்கு தீர்வாகாது

01 ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் கையளிக்கவுள்ளது. காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி இதனைக் கையளிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் இந்த அறிக்கையில் கருத்து வெளியிட்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், "முஸ்லிம் சமூகத்தின் முழுமையான பிரச்சினைகளுக்கு இந்த ஆணைக்குழு தீர்வைத் தரவில்லை. இது தீர்வாகவும் அமையாது'' என்று சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவானது யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் குறித்தும் போர்க்குற்றங்கள் என்பன பற்றியுமே ஆராய்ந்துள்ளன. ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தோர் கூட ஆங்காங்கே சில விடயங்களை தொட்டுச் சென்றுள்ளனர். எனவே, முஸ்லிம்களின் பிரச்சினை பற்றி ஆணைக்குழு முழுமையாக ஆராயவில்லை. எனவே, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக நல்லிணக்க ஆணைக்குழுவை அல்லது அதன் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ளமுடியாது' என்றும் முஸ்லிம் காங்கிரஸ் இன்று சமர்ப்பிக்கவுள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுலுக்கு வரவேண்டியுள்ளதன் தேவையையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

## முதல்வர் பதவி தராவிட்டால் அரசிலிருந்து வெளியேறுவோம்

01 சபைத் தேர்தல் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படாத போதிலும், இத்தேர்தலை எதிர்கொள்வதற்கான பணிகளில் கட்சிகள் களமிறங்கியுள்ளன.தாம் விரும்பும் கட்சியில் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

அரசுடன் இணைந்து போட்டியிட்டாலும், எதிர்த்தரப்பில் நின்று போட்டியிட்டாலும் தாமே பெரும்பான்மையைக் கைப்பற்றும் பலத்தைக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரம், அரசுடன் இணைந்து போட்டியிட்டால் முஸ்லிம் காங்கிரஸுக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி சபையைக் கலைப்பதற்கு முன் தமக்கு உறுதியளிக்கவேண்டும். இல்லையேல், தனித்து அல்லது இதே நிபந்தனையின் அடிப்படையில் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவோம் என்று கூறியுள்ளது.

## உதவிகளைப் பெறுவதில் உள்ள அக்கறை இனப்பிரச்சினைக்கான தீர்விலும் தேவை

01 கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் கலாநிதி போல் காட்டர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமெரிக்க தூதரக அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் அது பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பாக இருக்கும் என்பது நிபுணர்களின் கருத்து. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த போதிய கால அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

எனினும் கால அவகாசம் போதாது என இலங்கை அரசு கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகள் தேவைகள் நிவர்த்தி செய்யத் தவறியமையே இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு வழி வகுத்துள்ளதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நல்லிணக்கம் ஏற்படுவதாக அமையும். எனினும் இந்த அறிக்கையில் பொறுப்புக் கூறல், சர்வதேச மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணை தொடர்பாக போதியளவாக இல்லை என்பது எமது கருத்து.

ஆணைக்குழுவின் சிபார்சுகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்த தவறியதன் காரணமாகத்தான் அமெரிக்கா உள்ளிட்ட 39 நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தீர்மானத்தை நிறைவேற்றின. இந்த விடயம் தொடர்பாக சில ஊடகங்களும் சிலரும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வந்தனர். இந்தப் பிரேரணையில் மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன. அதில் ஒன்று ஆணைக்குழுவின் சிபாரிசுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தல், இரண்டாவது, விசாரணைகள் மேற்கொள்ளும் செயல்திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும், மூன்றாவது, ஐக்கிய நாடுகள் நவநீதம்பிள்ளை இலங்கை அரசுடன் கலந்துரையாடி தொழில் நுட்ப உதவிகளை வழங்குதல் என்பனவாகும்.

இந்த விடயங்கள் தொடர்பாக 2013இல் இடம்பெறும் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும். இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான இருதரப்புபேச்சுவார்த்தை தடைப்பட்டதற்கு நாம் வருந்துகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனைகளுடன் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபற்ற முடியும் என்று கூறியுள்ளது. இதனை நாம் வரவேற்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசித் தான் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகும். அரசியல் தீர்வைப் பெற எமது உதவிகளை வழங்குவோம். -என்றார். (ங-3)

## மத அழிப்புத் தொடர்ந்தால் மீண்டும் தமிழர்கள் ஆயுதப் போரில் குதிப்பர்

01 என்றும் அவர் கேள்வி எழுப்பினார். இலங்கை அரசின் மத ஆக்கிரமிப்பு நடவடிக்கை நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்றும் கலாநிதி விக்கிரமபாகு எச்சரித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் என சர்வதேசத்திடம் உறுதியளிக்கும் மஹிந்த அரசு, இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் நாட்டில் இனவாதத்தைத் தூண்டிவிடுகின்றது.

அத்துடன், தமிழர்களின் பாரம்பரிய சின்னங்களை அழித்து அவர்களின் அடையாளங்களை இல்லாதொழித்து பௌத்த மேலாதிக்கத்தை நாட்டில் நிலை நாட்டுவதற்குமுயற்சிக்கின்றது.

தமிழர்களின் பாரம்பரிய சின்னங்களை அழிக்கும் கொடுங்கோல் செயல்களை மஹிந்த அரசு தொடர்ந்தும் முன்னெடுக்குமானால் தமது இனத்தின் அடையாளங்களைப் பாதுகாப்பதற்காகத் தமிழர்கள் ஆயுதப் புரட்சியை நாடவேண்டிய நிலைக்கு மீண்டும் தள்ளப்படுவர்.

இலங்கையில் ஆரம்பத்தில் இந்து மதம்தான் இருந்தது. அதன் பின்னர்தான் பௌத்தமதம் வந்தது. மஹிந்த தேரர்தான் பௌத்த மதத்தை இலங்கைக்கு கொண்டுவந்தார். இதுதான் வரலாறும்கூட.

இலங்கையை ஆண்ட அசோக மன்னன் கூட பௌத்தத்தைப் பரப்புவதற்கு இவ்வாறான நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை. பௌத்த சமயத்தில் கூட குறிப்பிடப்படாத விடயங்களையே மஹிந்த அரசு முன்னெடுக்கின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தை மீறிச் செயற்படுகின்றனர்.

விகாரைகள் உடைக்கப்பட்டே கோவில்கள் கட்டப்பட்டன என ஒருசிலர் பேரினவாதப் போக்கில் வரலாறு பேசுகின்றனர். உண்மையில் கோவில்களை இடித்தே விகாரைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதனை வரலாற்றை திரித்துக் கூறுவோர் கவனத்தில் எடுக்க வேண்டும். சிங்கள மக்களின் மூதாதை எனக் கருதப்படும் விஜயன் கூட இந்துவாகவே இருந்தான் என்பதே வரலாற்று உண்மை- என்றார்.

# தமிழீழத்தைத் தீர்வாக தமிழர்கள் கேட்கவில்லை

01 வித்ததாவது:

"நான் யதார்த்தமாகப் பேச விரும்புகின்றேன். மக்களின் கைதட்டல்களுக்காக நடக்க முடியாதவற்றைப் பற்றிப் பேசுகின்றவன் நான் அல்ல. தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக் கோரிக்கையை இலங்கை அரசு மறுதலிக்குமானால் நாளை நிலைமை மாறும். சர்வதேசம் எமக்கான தீர்வை பெற்றுத் தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எமக்கு சர்வதேச பலம் கிடைத்திருக்கின்றது என்பதை ஜெனிவா தீர்மானம் உறுதிப்படுத்தியிருக்கிறது. நாங்கள் சுயநிர்ணய உரித்துடைய மக்கள் என்பதையும் தேசிய இனம் என்பதையும் இன்று உலகம் உணர்ந்துள்ளது.

வடக்கு, கிழக்கில் சுயாட்சியை ஏற்படுத்துவதற்கு சர்வதேசத்தின் பங்களிப்பு முக்கியமாகத் தேவை. சர்வதேசத்திற்கு எமது சுயாட்சியைப் பற்றிய நியாயப்பாடுகள் தெளிவாகத் தெரியும். சர்வதேச தேசிய இனத்தினுடைய நிலப்பரப்பில் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு அரசு முயல்கிறது. இது தடுக்கப்பட வேண்டியதொன்று.

தமிழ் மக்கள் தமது பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழீழம் தான் வேண்டும் என்று கேட்கவில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழீழம் கேட்காது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கடந்த நாடாளுமன்ற விஞ்ஞாபனத்தில் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. இருந்தும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து ஆணை வழங்கியுள்ளனர்."- என்றார்.

இதேவேளை, எமது மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்கான அமெரிக்காவினால் முடியும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இந்தக் கருத்தரங்கில் தலைமை உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய பிரச்சினைக்கான தீர்வை கேட்டு நிற்கின்றோம். எமது பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்காக நாங்கள் ஆயுத ரீதியில் போராடினோம். அது உலகத்தின் சூழ்ச்சிகளினால் அழிக்கப்பட்டுள்ளது.

உலகத்தின் ஓட்டத்தில் ஜனநாயக ரீதியாக எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு பயணத்தை ஆரம்பித்துள்ளோம். இளைய சமுதாயத்தை அரசியல் மயப்படுத்தி எமது உரிமைகளை வென்றெடுக்க முயன்று வருகின்றோம்

வடக்கு மற்றும் கிழக்கு என்பது எமது தாயக பூர்வீக பூமி. அந்த பூமியில் எங்களை நாங்கள் ஆளக்கூடிய சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தான தீர்வை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த எமது உறவுகளை நினைவுகூர முடியாத நிலையில் இன்று இருக்கின்றோம். எமது உணர்வுகளுக்கு இரும்பு வேலி போடப்பட்டுள்ளது. என்றாவது ஒரு நாள் எமக்கான தீர்வு கிடைக்கும். அது சர்வதேசத்தின் கைகளில் தான் தங்கியிருக்கிறது'' என்றார். (ங-3)

## லண்டன் செல்லும் மஹிந்த பாதுகாப்புக் கோருகிறார்

01 பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். ஜனாதிபதியின் இந்தப் பயணத்தை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால், இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த பிரிட்டிஷ் அரச அதிகாரிகள் எவரையாவது சந்திப்பாரா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும், இது ஓர் அரசு முறைப்பயணம் அல்ல என்று பிரிட்டிஷ் தூதரக அதிகாரி தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்ஸ்போர்ட் பல்கலையில் உரையாற்றுவதற்காகச் சென்றிருந்தபோது, அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்த புலம்பெயர் தமிழர்கள் திட்டமிட்டிருந்தனர். அத்துடன் ஜனாதிபதியுடன் சென்றிருந்த, அவரது பாதுகாப்புப் பிரிவுக்கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு எதிராக போர்க் குற்ற வழக்கும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதையடுத்து ஜனாதிபதி மஹிந்தவின் உரையை ஒக்ஸ்போர்ட் பல்கலை நிர்வாகம் நீக்கம் செய்தது. நிலைமைகள் சிக்கலடைந்ததால், மஹிந்த ராஜபக்ஷ அவசரமாக கொழும்பு திரும்பியிருந்தார். இதனாலேயே இந்த முறை ஜனாதிபதிக்கு விசேட பாதுகாப்பு பிரிட்டனிடம் கோரப்பட்டுள்ளது.

## நிபந்தனையுடனேயே தெரிவுக்குழுவுக்கு

01 திரன். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கம் மூலம் தீர்வு காண்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின் றோம் என்பதை சர்வதேசத்திற்கு சொல்லிவைக்க விரும்புகின்றோம். ஜனநாயக நாடுகள் தான் எமக்கு ஆதரவாக இருக்கின்றன. நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு நாங்கள் செல்ல வேண்டும் என்றால் வெற்றுத்தாளுடன் நாங்கள் செல்ல முடியாது. நிபந்தனையுடன் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ங-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்தே இன்றைய காலகட்டத்தில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மட்டுமல்ல சர்வதேச அரங்குகளிலும் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

ஆணைக்குழுவின் அறிக்கையானது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் முக்கிய அம்சங்கள் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டு சில மாதங்கள் ஆகின்றன. அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்களும் வெளிவந்துள்ளன. ஆனால் ஏறத்தாழ நானூறு பக்கங்களைக் கொண்டதாகக் கருதப்படும் அறிக்கை இன்னமும் முழுமையாக வெளியிடப்படவில்லை.

அறிக்கையை இந்த நாட்டு மக்கள் அறிந்துகொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் வகை செய்யும் வகையில் அது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு பகிரங்கப்படுத்தப்படுவது அவசியம் என்று பலரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

ஜெனிவா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கையின் போர்க் குற்றங்கள் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்திலும் கூட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் படியாகவே வலியுறுத்தப்பட்டது.

ஜெனிவா மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கை சார்பில் பேசிய ஜி.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த சமரசிங்க ஆகிய அமைச்சர்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கு அவகாசம் தேவையென்றுதான் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இலங்கையின் இந்தக் கோரிக்கையை ஏற்று மேற்படி சபை அதற்கு ஒருவருட அவகாசமும் வழங்கியது. இந்தக் கோரிக்கையின் நிமித்தமே இலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவும் அமெரிக்க தீர்மானத்துக்கு எதிராகவும் ஒருசில நாடுகள் வாக்களித்திருந்தன.

மாநாட்டில் இலங்கை அமைச்சர்கள் வழங்கிய வாக்குறுதிகளை ஆதரித்த நாடுகளுக்கே ஏமாற்றம் அளிக்கும் விதத்தில் சில அமைச்சர்கள் இங்கு கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். அறிக்கையின் பரிந்துரைகள் அனைத்தையுமே நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை. ஒருசிலவற்றை செயல்படுத்தலாம் என்பது போல் அவர்களின் கருத்துக்கள் அமைந்திருந்தன. ஆணைக்குழு அறிக்கை தயாரிப்புக்காக செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கூட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில் பின் நிற்கப் போவதில்லை என்றவாறு பல சந்தர்ப்பங்களிலும் கூறியிருந்தார்.

ஆனால் அறிக்கை கையளிக்கப்பட்டதன் பின்னர் அரசு தரப்பிலிருந்து வந்த பிரதிபலிப்புக்கள் ஊக்கம் தருபவையாக இருக்கவில்லை. அரசின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களும் பிரமுகர்களும் அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு விருப்பமின்மையை வெளிப்படுத்தியிருந்த அதேசமயம் அரசில் அங்கம் வகிக்கும் வேறு சில கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களும் பிரமுகர்களும் அறிக்கையை முழுமையாகவே எதிர்த்து கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனதார எண்ணங்கொண்டிருந்தாரோ இல்லையோ தமது அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையிலேயே இவ்வாறான முரண்பாடுகள் தோன்றியிருப்பது அவருக்குப் பெரும் சங்கடத்தையே கொடுத்திருக்கும்.

ஏறுமாறான கொள்கை கோட்பாடுகளைக் கொண்ட அரசியல் கட்சிகளை அணைத்துக்கொண்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பலத்துடன் ஆட்சிபுரியும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியானவருக்கு ஒருவேளை இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது பரிந்துரைகளை ஓரங்கட்டுவதற்கும் காலம் தாழ்த்துவதற்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு சமாதானம் கூறிக் கொள்வதற்கும் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் இந்தவிடயத்தில் சர்வதேசம் மிகவும் உன்னிப்பாகவே கவனம் செலுத்தி வருகின்றது. அதனைப் புறந்தள்ளிவிட முடியாத நிலையிருப்பதனால்தான் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தமது பரிவாரங்களுடன் வொஷிங் ரனுக்குச் சென்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனுக்கு விளக்கமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவது தொடர்பான செயல்திட்டமொன்றை அமெரிக்க அமைச்சரிடம் கையளிப்பதற்காக பீரிஸ் தயாரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்தச் செயல்திட்டமானது பீரிஸ் அமெரிக்கா செல்லும்முன்பே இங்கு வெளியிடப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தரப்பில் கோரப்பட்டிருந்தாலும் அது நிபந்தனையாக முன் வைக்கப்படவில்லை.

என்றாலும் செயல் திட்டமானது இங்கேயே - இலங்கையிலேயே நடைமுறைப்படுத்தப்படுவதாக இருக்கும் என்பதால் இந்த நாட்டு மக்கள் அது பற்றி அறிந்து கொள்ள உரிமை உடையவர்கள். அதனால்தான் இந்தச் செயல்திட்டம் குறித்து முதலில் எதிர்க்கட்சியினருடன் கலந்தாலோசிக்கப்படுவது அவசியம் என்று ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரியிருக்கிறார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த அரசு தவறுமானால் அடுத்த ஆண்டில் சர்வதேச விசாரணையொன்றுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதையும் அவர் இடித்துக் கூறியிருக்கிறார்.

## சாவகச்சேரி சுகாதாரப் பிரிவில் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்

தென்மராட்சி, மே 14

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் இன்று தொடக்கம் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று சாவகச்சேரி நகர சபை பகுதியிலும் நாளை மட்டுவில் பகுதியிலும் 16 ஆம் திகதி கைதடிப் பகுதியிலும் 17 ஆம் திகதி கொடிகாமம் நகரப் பகுதியிலும் 18 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பகுதியிலும் 19 ஆம் திகதி வரணிப் பிரதேசத்திலும் 20 ஆம் திகதி மீசாலைப் பகுதியிலும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

குறித்த தினங்களில் சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், படையினர், உள்ளூராட்சி சபையினர் ஆகியோர் இணைந்து வீடு வீடாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு பகுதியிலும் அனைத்து வீடுகளும் வர்த்தக நிலையங்களும் பார்வையிடப்படவுள்ளதால் அன்றைய தினம் குடியிருப்பாளர்கள் தமது காணிகளில் சேர்ந்துள்ள குப்பைகள், பாவிக்க முடியாத பிளாஸ்டிக் பொருள்கள், தகரங்கள் போன்றவற்றை உரப்பைகளில் போட்டு வீதியோரங்களில் வைக்குமாறும் அவை அன்றையதினம் உள்ளூராட்சி சபைகளின் வாகனங்கள் மூலம் அகற்றப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசோதனையின்போது சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் மலகூட குழிகளில் வெடிப்புகள் காணப்படின் அந்த வீட்டுக்காரர் மீது வழக்குத் தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாரத்தில் பொது இடங்களில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளதாகவும் பொது அமைப்புக்கள் சிரமதானப் பணிகளுக்கான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறும் வீடு வீடாக வரும் நுளம்புக் கட்டுப்பாட்டு பரிசோதனைக் குழுக்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சமுர்த்தி அலுவலருக்கும் உள்ளக இடமாற்றம்

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடமை புரியும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் கடந்த 2 ஆம் திகதியில் இருந்து உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் செய்யப்பட்ட சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் அவர்கள் புதிதாகக் கடமை மேற்கொண்ட பிரிவுகளின் விவரம் வருமாறு:-

இருபாலை தெற்கு - ஜே/257- சி.சிவநேசன், இருபாலை கிழக்கு - ஜே/258 - திருமதி யோ.கலைவாணி- பதில் கடமை ஜே/ 259 கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு- ஜே/ 260 - திருமதி ம.குமுதினி- பதில் கடமை ஜே/261, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு- ஜே/ 262- திருமதி க.கல்பனா, உரும்பிராய் மேற்கு- ஜே/263- த.கோகிலானந்தன், உரும்பிராய் வடக்கு- ஜே/ 264- கு.சிவகுமார், உரும்பிராய் தெற்கு - ஜே/265 - த.கோகிலானந்தன், உரும்பிராய் கிழக்கு- ஜே/266- கு.சிவகுமார், ஊரெழு- ஜே/267- ப.சேவற்கொடியோன், நீர்வேலி தெற்கு - ஜே/ 268- திருமதி க.கல்பனா, நீர்வேலி வடக்கு- ஜே/269- ப.சேவற்கொடியோன், நீர்வேலி மேற்கு- ஜே/270- அ.ஜெயசிங்கம், சிறுப்பிட்டி கிழக்கு- ஜே/ 271- ச.கருணாகரன்- பதில் கடமை ஜே/ 272 சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு - ஜே/273 - செ.சிவகுமார்- பதில் கடமை ஜே/274 புத்தூர் வடக்கு, நவக்கிரி - ஜே/275 - மு.பத்மநாதன், ஆவரங்கால் கிழக்கு - ஜே/ 276- சி.கேதீஸ்வரன்- பதில் கடமை ஜே/277 ஆவரங்கால் மேற்கு, புத்தூர் கிழக்கு- ஜே/278- ஆ.வதனராசா, அச்செழு- ஜே/279 - அ.ஜெயசிங்கம், வாதரவத்தை - ஜே/ 280- ம.சுதர்சன், பத்தமேனி- ஜே/281- த.ஜெயக்குமார்- பதில் கடமை ஜே/ 282 தம்பாலை கதிரிப்பாய், இடைக்காடு- ஜே/ 283- செ.பிறேமதாஸ்- பதில் கடமை ஜே/284 வளலாய், அச்சுவேலி வடக்கு- ஜே/285- ம.சுதர்சன், அச்சுவேலி தெற்கு- ஜே/286 -மா. சந்திரசேகரம்- பதில் கடமை ஜே/287 அச்சுவேலி மேற்கு.

உள்ளக இடமாற்றம் செய்யப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் தமது கடமைகளைப் புதிய பிரிவுகளில் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார். (ம-11 )

### ஆவரங்கால் சிவன் கோயில் வடக்கிலுள்ள

## கேணியை மூடும் செயற்பாட்டுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் மக்கள்

அச்சுவேலி, மே 14

ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள கேணியைத் தூர்த்து அதனைப் தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

ஆங்கிலேயர் காலத்தில் பொது நிலைப்படுத்தப்பட்ட வகையில் பிரதான வீதிகள் அமைக்கப்பட்டபோது பயணம் செய்வோர் தங்கிச் செல்வதற்கு மடம், நீர் அருந்தக் கிணறு, கால்நடைகள் நீர்குடிக்க கேணி, குளம், பாரம் சுமப்பவர்கள், சுமையாற சுமைதாங்கி என்பன வீதியோரங்களில் குறிப்பிட்ட தூர இடைவெளியில் அமைக்கப்பட்டிருந்தன. இதில் 75 வீதமானவை வீதி அகலிப்பு என்ற வகையில் அழிக்கப்பட்டுவிட்டன.

வீதி விஸ்தரிப்பில் தப்பிய நிலையில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியில் காணப்படும் கேணிகளில் ஆவரங்கால் கேணியும் ஒன்று. இது ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு வடக்குப் பக்கத்தில் பிரதான வீதிக்குக் கிழக்குக் கரையில் உள்ளது.

**கேணியை மூடுவதற்கு டெங்கு ஒழிப்பு, சுகாதார குறைபாடு என்று காரணம் கூறப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இதனை மூடுவதற்கு டெங்கு ஒழிப்பு, சுகாதாரக் குறைபாடு என்று காரணம் கூறப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களின் அடையாளமாக எஞ்சியிருப்பதையும் மறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் வலி.கிழக்குப் பிரதேச சபைக் கேணியை உரிய முறையில் பராமரிப்பதைக் கைவிட்டு மூடுவதை அனுமதிக்க முடியாது என்றும் பொதுமக்கள் மற்றும் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (ம-11)

## கல்வி நிர்வாக சேவை இறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 14

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு (திறந்த நிலை) போட்டிப் பரீட்சையின் இறுதி முடிவுகள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐந்து தமிழர்கள் இதில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

கே.அபிராமி, எம்.பிரதீப், பி.கப்தீபன், ஜி.ஆதவன், எஸ்.கிருஷ்ணவாணி.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு ( திறந்த நிலையில்) தெரிவு செய்வதற்கு முதலாவது போட்டிப் பரீட்சையில் 13 தமிழர்களும் 3 முஸ்லிம்களும் 158 சிங்களவர்களுமாக 174 பேர் சித்தியடைந்திருந்தனர். இவர்களுக்கு இரண்டாவது போட்டிப் பரீட்சை ( இறுதி நிலை) ஏப்ரல் மாதம் [illegible] ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இறுதி நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களும் இரண்டு பரீட்சையிலும் பாட ரீதியில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரம், தேசிய அடையாள அட்டை இலக்கம், பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தரநிலை என்பன போன்ற விவரங்களுடன் இலங்கை பரீட்சைத் திணைக்கள 'இணையத் தளத்தில்' வெளியிடப்பட்டுள்ளது.

மொழி மற்றும் இன ரீதியில் இல்லாமல் தேசிய ரீதியில் வெளியிடப்பட்டுள்ளது.

இறுதிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பொது மற்றும் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சங்கீதம் (கீழைத்தேசம், சங்கீதம் மேலைத்தேசம்), நடனம், விவசாயம், வர்த்தகம், விசேட தேவை, திட்டமிடல், தகவல் தொழில்நுட்பம் என்ற வகையில் பாடரீதியிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சையை அடுத்து ஆறு மாதங்கள் விரிவுரை மற்றும் களநிலை என்ற வகையில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்கள், ஆசிரியர் மற்றும் சேவையில் உள்ளவர்கள் (மட்டுப்படுத்தப்பட்டது) மற்றும் திறந்த நிலை என்ற வகையில் மூன்று வகையான ஆள்கள் தெரிவு செய்யப்பட்டு மூன்று சாராருக்கும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் கல்வி நிர்வாக சேவைகள் ஆள் தெரிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அதிபர் சேவையில் இருந்து 35 வீதத்தினரும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் 40 வீதத்தினரும் திறந்த நிலையில் இருந்து 25 வீதத்தினரும் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற வர்த்தகர்கள் மீது வவுனியாவில் அதிரடி நடவடிக்கை

## பலர் சிக்கினர்; 30 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்

வவுனியா,மே 14

வவுனியா பாவனையாளர் கட்டுப்பாட்டு அதிகார சபை உத்தியோகத்தர்கள் பொருள்களின் விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாத மற்றும் பொருள்களின் விலைகளைக் கூட்டி விற்பனை செய்த வர்த்தகர்கள் மீது அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பை அடுத்து வவுனியா மாவட்டத்திலுள்ள பல வர்த்தகர்கள் பொருள்களின் விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாமல் தாம் நினைத்த விலைகளுக்குப் பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பாவனையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து வவுனியா மாவட்டப் பாவனையாளர் கட்டுப்பாட்டு அதிகார சபை அதிகாரிகள் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

**வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாமை.**

புடைவை வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையின் போது புடைவைத் தினிசுகளுக்கான விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, உயர்ந்த விலைக்குப் பொருள்களை விற்பனை செய்தமை தொடர்பாகவும்-

அதேகாலப் பகுதியில் வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாமை மற்றும் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாகப் பொருள்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 12 வர்த்தகர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இதனையடுத்து அவர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை ஆராய்ந்த வவுனியா மாவட்ட நீதிவான் அலெக்ஸ்ராஜா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களைத் தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இதன் பிரகாரம் 12 வர்த்தகர்களிடமிருந்தும் 30 ஆயிரம் ரூபா தண்டமாகப் பெறப்பட்டதாகப் பாவனையாளர் அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-400)

# மன்னாரில் பரவிவரும் ஒருவித தொற்றுநோய்

## அச்சத்தில் மக்கள்

மன்னார்,மே 14

மன்னார் மக்களிடையே ஒருவித தொற்று நோய் பரவி வருவதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக இங்குள்ள மக்கள் வயிற்றோட்டம், வாந்தி, மயக்கம், திடீர்க் காய்ச்சல் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தாம் நீரை அருந்திய பின்னரே தமக்குச் சுகவீனம் ஏற்பட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இங்குள்ள மக்கள் தேசிய நீர் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்படும் குழாய் நீரையே அருந்தி வருகின்றனர். இந்த நீரின் தூய்மையற்ற தன்மையால் தமக்குச் சுகவீனங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களில் பலர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மன்னார் சுகாதாரத் திணைக்களத்தினர் குடிதண்ணீரின் மாதிரியை எடுத்துப் பரிசோதனைக்கென அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை நீரைக் கொதிக்கவைத்து அருந்துமாறு சுகாதாரப் பிரிவினர் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மக்கள் ஒருவித நோயால் பீடிக்கப்பட்டுள்ளதைத் தாம் அறிந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-12)

# ஆலயம் அமைப்பதற்கு தடை

## மக்களிடையே பதற்றம், கவலை

முள்ளியவளை,மே 14

முள்ளியவளையிலுள்ள சந்தி அம்மன் ஆலயத்தைத் தற்போதுள்ள இடத்திலிருந்து அகற்றி வேறொரு இடத்தில் அமைப்பதற்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் தடையாக நிற்பதால் இந்தப் பகுதி மக்களிடையே பதற்ற நிலை தோன்றியுள்ளது.

முல்லைத்தீவு - மாங்குளம் வீதியில் முள்ளியவளைச் சந்தைக்கு அருகில் வற்றாப்பளை செல்லும் சந்தியில் சந்தி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

வற்றாப்பளை அம்மன் ஆலயம் போர்ச் சூனியப் பிரதேசமாக இருந்த போது மக்கள் அங்கு செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இதனால் இந்த ஆலயத்திலேயே பெருமெடுப்பில் பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றன.

தற்போது மாங்குளம் - முல்லைத்தீவு வீதி புதிதாக அமைக்கப்படுவதால் வீதி எல்லைக்குள் இந்த ஆலயம் வந்து விட்டது. இதனால் இந்த ஆலயத்தை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் மக்களும், ஊரில் உள்ள பெரியவர்களும், அரச அதிகாரிகளும் இணைந்து இவ்வாலயத்தின் முன்பகுதியில் வீதிக்கு சற்றுத் தூரத்திலுள்ள காணியில் ஆலயத்தை அமைப்பதற்கு தீர்மானித்தனர்.

தீர்மானித்தபடி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது அதனை நிறுத்துமாறு இராணுவத் தரப்பாலும், பொலிஸ் தரப்பாலும் அறிவித்தல் விடப்பட்டுள்ளது. இதனால் மக்கள் இடையே பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

தற்போது ஆலயம் அமையவுள்ள இடத்தின் பின்புறமாக உள்ள காணியின் சொந்தக்காரர் வெளிநாடு ஒன்றில் வசித்து வருவதாக அறியப்படுகின்றது.

இந்தக் காணியைத் தற்போது பராமரித்து வருபவரே இராணுவத்துடனும், பொலிஸாருடனும் தொடர்பு கொண்டு ஆலயம் அமைவதைத் தடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

எனினும் அந்தக் காணி எல்லைக்குள் இந்த ஆலயம் அமைக்கப்படாதமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் ஆலயம் அமைவதில் ஏற்பட்டுள்ள தடையால் இப்பகுதி மக்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். (க-433)

# வெளிமாவட்ட வியாபாரிகள் போன்று எமக்கும் தினச்சந்தையில் இடம்

## மன்னார் நடைபாதை வியாபாரிகள் கோரிக்கை

மன்னார்,மே 14

மன்னார் தினச்சந்தை வியாபார நிலையத்தில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளுக்கு வியாபார நிலையங்கள் ஒதுக்கியது போன்று தமக்கும் ஒதுக்கித் தருமாறு மன்னார் நடைபாதை வியாபாரிகள் நகர சபையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மன்னாரில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றும் பணியை மன்னார் நகர சபையும், மன்னார் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக் காலமாக மன்னார் பஸார் பகுதி உள்ளிட்ட மன்னார் நகர சபைக்குச் சொந்தமான பகுதிகளில் வியாபாரத்தை மேற்கொண்டு வந்த நடைபாதை வியாபாரிகளை நீண்ட நாள்களாகவே அவ்விடத்தை விட்டுச் செல்லும்படி நகரசபையினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் அவர்களது உத்தரவையும் மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நடை பாதை வியாபார நிலையங்களைக் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பொலிஸாரின் உதவியுடன் மன்னார் நகர சபைப் பணியாளர்கள் அகற்றியுள்ளனர்.

குறித்த பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் குறித்த நடை பாதை வியாபாரிகளில் அதிகமானோர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

தமக்கு மன்னார் தினச்சந்தை வியாபார நிலையத்தில் வியாபாரம் செய்யத் தற்காலிகமாக இடம் தருமாறு பாதிக்கப்பட்ட வியாபாரிகள் மன்னார் நகர சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேசமயம் மன்னார் தினச்சந்தை வியாபார நிலையத்தில் மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய பிற மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளே அதிகம் வியாபாரம் செய்து வருவதாகவும், அவர்களுக்கு வர்த்தக நிலையங்கள் ஒதுக்கிக்கொடுக்கப்பட்டது போன்று தமக்கும் அவ்விடத்தில் ஒதுக்கித்தருமாறும் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் மன்னார் நகர சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

# வவுனியா குடும்பநல உத்தியோகத்தர்களை தினமும் சந்திப்பதற்கான ஒழுங்குகள்

வவுனியா,மே14

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்களைத் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை சந்திக்க முடியும் என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

**குடும்ப நல உத்தியோகத்தர்களை தினமும் பிற்பகல் 3 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை சந்திக்க முடியும் என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.**

அதன் பிரகாரம் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள குடும்ப நல உத்தியோகத்தர்களை அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணிமனைகளில் சந்திக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பூங்கா வீதியில் அமைந்துள்ள இந்து மாமன்றத்திலும், மூன்று முறிப்பைச் சேர்ந்தவர்கள் மூன்றுமுறிப்பு சிகிச்சை நிலையத்திலும், வெளிக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெற்கிலுப்பைக்குளம் 6 ஆம் ஒழுங்கையிலுள்ள சனசமூக நிலையத்திலும்-

சமணங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் அப்பகுதியிலுள்ள சிகிச்சை நிலையத்திலும், கோவில் குளத்தைச் சேர்ந்தவர்கள் கோவில் புதுக்குளம் சிகிச்சை நிலையத்திலும், கோமரசங்குளம் பகுதி மக்கள் பெரியகோமரசன்குளம் மாதர் சங்கத்திலும், தம்பனைச் சோலை மக்கள் அப்பகுதியிலுள்ள மீளக் குடியமர்வுக் கட்டடத்திலும் பூந்தோட்ட மக்கள் பூந்தோட்டச் சிகிச்சை நிலையத்திலும்-

தாண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் தாண்டிக்குளம் சிகிச்சை நிலையத்திலும், பண்டாரிக்குளம், மாங்குளம், நெளுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், இராசேந்திரகுளம் பட்டாணிச்சூர், இறம்பைக்குளம், தவசிக்குளம், தோணிக்கல், ஈச்சங்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள சிகிச்சை நிலையங்களிலும்-

ஆசிக்குளத்தைச் சேர்ந்தவர்கள் சிதம்பரபுரம் வைத்தியசாலையிலும், உக்கிளாங்குளப் பகுதியைச் சேர்ந்தவர்கள் உக்கிளாங்குளம் கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத்திலும் சேமமடுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சேமமடு தபால் நிலையத்திலும் கொக்கட்டிப்புலவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சிவபுரம் சிகிச்சை நிலயத்திலும், மரக்காரம்பளை கணேசபுரம் சிகிச்சை நிலையத்திலும், குருமன்காடு மக்கள் கலைமகள் நிலையத்திலும் திருநாவற்குள மக்கள் திருநாவற்குள கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலும் தரணிக்குளத்தைச் சேர்ந்தவர்கள் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலும் குடும்ப நல உத்தியோகத்தர்களைச் சந்திக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

## அவலத்தின் மேல் அவலம்



கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் பகுதியில் வெள்ள நீர் நிறைந்த வீதி ஒன்றைக் கடந்து செல்வதற்கு முயற்சிக்கும் பாடசாலை மாணவர்கள். (18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சபை ஊழியருக்கு சீரான முறையில் கொடுப்பனவுகள்

### வட பிராந்திய இ.போ.சபை முகாமையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 14
இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் சீரான முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வட பிராந்திய பிரதம முகாமையாளர் எஸ்.அஸ்ஹர் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் டிப்போ சாரதிகள் காப்பாளர்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் யாழ். பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான்காம் மாதத்துக்கு உரிய சம்பளம் எதிர்வரும் 20 ஆம் திகதி முழுமையாக சாரதி, காப்பாளர், பொறியியலாளர்களுக்கு வழங்கப்படும். 3 ஆம் மாதத்துக்குரிய சம்பளம் பகுதி பகுதியாக கொடுக்கப்படும்.

மேலும் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக சம்பளம் வழங்கப்படும்.

அதைவிட மேலும் புதிய பஸ்கள் இந்தச் சேவைகளில் இணைக்கப்படும். பழுதடைந்து காணப்படும் பஸ்கள் சிலவற்றை திருத்தியமைத்து அடுத்த மாதங்களில் 48 சாரதிகளையும் இந்தச் சேவைக்கு எடுத்து யாழ். மாவட்டத்திலும் வட மாகாணத்திலும் சிறப்பான சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**புதிய பஸ்கள் இந்தச் சேவைகளில் இணைக்கப்படும். பழுதடைந்து காணப்படும் பஸ்கள் சிலவற்றை திருத்தியமைத்து அடுத்த மாதங்களில் 48 சாரதிகளையும் சேவைக்கு எடுத்து யாழ். மாவட்டத்திலும் வட மாகாணத்திலும் சிறப்பான சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இலங்கையிலேயே கோண்டாவில் சாலையைச் சிறந்த சாலையாக மாற்றுவதற்கு சாரதி, காப்பாளர்கள், பொறியியலாளர்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பலாப்பழ சீசன் ஆரம்பம்

தென்மராட்சி, மே 14
தென்மராட்சிப் பிரதேசத்தில் பலாப்பழம், மாம்பழம் ஆகியவற்றின் சீஸன் ஆரம்பமானதையடுத்துச் சந்தைகளுக்கு இவற்றின் வரவு அதிகரித்துள்ளது.

இதனால் பலாப்பழம், மாம்பழம் ஆகியவற்றின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தினமும் பெரும் எண்ணிக்கையில் பலாப்பழங்களும் மாம்பழங்களும் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய சந்தைகளுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இதன் விலைகள் மேலும் வீழ்ச்சியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தென் பருவக் காற்று ஆரம்பித்துள்ளதையடுத்து வாழைப் பழங்களின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வாரம் விற்பனை விலையுடன் ஒப்பிடுகையில் ஒரு கிலோ பத்து ரூபா தொடக்கம் முப்பது ரூபா வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

காற்று பலமாக வீசுவதால் வாழைகள் பெருமளவு முறிந்து வீழ்வதால் வாழைப் பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-9)

## வடக்கின் வசந்தம் வீசவில்லை சந்தைக்கு

தென்மராட்சி, மே 14
வடக்கின்வசந்தம்வேலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தைக் கட்டடம் மற்றும் கடைத் தொகுதிகள் ஆகியவற்றின் வேலைகள் மந்த கதியில் உள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அந்தப்பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களால் பயிரிடப்பட்ட உப உணவுப் பயிர்களின் அறுவடைகள் ஆரம்பித்துள்ள போதிலும் சந்தை வசதி இல்லாததால் சிரமங்களின் மத்தியில் கொடிகாமம் சந்தைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் சந்தையுடன் இணைந்து நிர்மாணிக்கப்பட்டு வரும் கடைத் தொகுதி கட்டட வேலைகளும் மந்த நிலையில் உள்ளதால் சிறு பொருள் வாங்குவதாயினும் கொடிகாமம் செல்ல வேண்டிய நிலையில் மீளக் குடியமர்ந்த மக்கள் தெரிவித்தனர். (ம-9)

## எழுதுமட்டுவாழில் தற்காலிக பஸ் நிலையம்

தென்மராட்சி, மே 14
அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப்பிரிவு மக்களின்நலன் கருதி சாவகச்சேரி பிரதேச சபையினர் எழுதுமட்டுவாழ் சந்தியின் இரு பக்கங்களிலும் தற்காலிக பஸ் தரிப்பிடங்களைஅமைத்துக் கொடுக்கவுள்ளனர். அத்துடன் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் பொதுச் சந்தை வளாகத்தைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கவுள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட மனுவை பார்வையிட்ட சபையினர் இந்த இரண்டு வேலைகளையும் சபை நிதியிலிருந்து செய்து முடிப்பதென தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)



நெடுந்தீவு மகேஷ் எழுதிய "தாரணி ஒரு ஆச்சரியக்குறி" சிறுகதைத் தொகுதி கடந்த சனிக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. ஆறுதல் நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், யாழ்.கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் க.லலீசன், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் தாட்சாயினி ஆகியோர் உரையாற்றினர். நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் செ.மகேஷிடம் இருந்து செயலாளர் இளங்கோவன் பெற்றுக் கொண்டார். ஏற்புரையை நூலாசிரியர் வழங்கினார். (ம-7)

## சுகாதார வசதிகளை மேற்கொள்ள சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அறிவுறுத்து

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் வாகனங்கள் கழுவும் நிலையங்கள் எதிர்வரும் ஜூன் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அடிப்படை சுகாதார வசதிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

* வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் வியாபாரப் பெயர்ப் பதிவு செய்யப்படல் வேண்டும்.
* நிலையத்தின் பெயர்ப் பலகை நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
* மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் பாதுகாப்பு உரிமம்பெறப்படல்வேண்டும்.
* அந்தந்த உள்ளூராட்சி சபையில் வருடாந்த வியாபார உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
* எண்ணெய், உராய்வு நீக்கியை வேறுபடுத்த பொறிமுறை ஏற்படுத்த வேண்டும்.
* கழிவு நீர் சேகரிக்கப்பட கழிவு நீர் உறிஞ்சுகுழி அமைக்கப்பட வேண்டும்.
* சுற்றாடல் சுத்தமாக பராமரிக்கப்படவேண்டும்.
* திண்மக் கழிவு அகற்றுவதற்கான குப்பைக் கூடைகள் வைக்கப்படுவதுடன் பொருத்தமான முறையில் இறுதியகற்றல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
* கழிவுநீர் சுற்றாடலில் நேரடியாகத் திறந்துவிடக் கூடாது.
* முதலுதவிப் பெட்டி எப்போதும் பாவிக்கக் கூடிய நிலையில் பேணப்படல் வேண்டும்.
* தொழிலாளர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய காரணிகளை வாகன சுத்திகரிப்பு நிலைய வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். வாகனங்கள் சுத்திகரிக்கப்படும் போது விசிறப்படும் நீர் வெளிச் செல்லாதவாறு அடைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் கடமை நேரத்தில் பாதுகாப்பு அங்கி அணிந்திருத்தல் வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஒரு மாத காலத்தினுள் பூர்த்தி செய்யாத வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உள்ளூராட்சிச் சபை சட்டத்தின் பிரிவுகளுக்கமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வடமராட்சி கிழக்கில் வைத்திய சேவை சீரில்லை

### செஞ்சிலுவைச் சங்க சேவை நீடிப்பு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வைத்திய சேவை இன்னும் சீராக்கப்படாமையால் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையால் அந்தப் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் நடமாடும் வைத்தியசேவை தொடர்ந்தும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் வைத்தியசேவையை இந்த மாதத்துடன் இடைநிறுத்த செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை ஏலவே தீர்மானித்திருந்தது.

எனினும் அரச வைத்திய சேவைகள் சீரடையாததால் இந்தப் பிரதேச மக்களுக்கு வைத்திய வசதிகள் இல்லாது போய்விடுமோ என்ற காரணத்தால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை இலவச நடமாடும் வைத்திய சேவையை நீடித்து வழங்க செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை முன்வந்துள்ளது.

இந்தப் பிரதேச மக்களுக்கான மருதங்கேணி கிராமிய அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர்சிகிச்சைப் பிரிவு கட்டடப் பணி முடிவடைந்துள்ளது. ஏனைய கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை. அங்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் தங்கியிருந்து சிகிச்சைகளை வழங்க முடியாத நிலையும் உள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இந்த நடமாடும் சேவையை நீடித்துள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை தெரிவித்துள்ளது. (ம-8)

## யாழ்.மாவட்டத்துக்கு அக்குபஞ்சர் வைத்தியர்

யாழ்ப்பாணம், மே 14
கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சை முறையைக் கற்றுத் தேர்ந்த 36 ஆயுள்வேத வைத்தியர்கள் யாழ்.மாவட்டத்துக்கான சேவையை வழங்குவதற்கு அந்தந்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி மருத்துவர் திருமதி அருந்தவராணி கிருஷ்ணானந்தம் இதனை தெரிவித்துள்ளார்.

ஆங்கிலவைத்தியம்,ஆயுள்வேத வைத்திய என அக்குபஞ்சர் சிகிச்சை முறையும் ஒரு தனி சிகிச்சை முறையாகும். தீராத நோய்களால் அவதிப்படும் நோயாளர்களுக்கு உரிய மருத்துவ முறையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனும் ஏனைய மக்களின் மருத்துவத் தேவையை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனும் இந்த அக்குபஞ்சர் சிகிச்சை முறையை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்த சிகிச்சையை வழங்கக் கூடியதாக 36 ஆயுள்வேத வைத்தியர்களுக்குக் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் ஒரு வருட கால பயிற்சி நெறி வழங்கப்பட்டுள்ளது. அக்குபஞ்சர் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள விரும்பும் நோயாளர்கள் இது தொடர்பான மேலதிகதகவல்களை அருகில் உள்ள ஆயுள்வேத வைத்திய சாலைகளில் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

## இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளை தெரிவு செய்யக் கலந்துரையாடல்

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டத்துக்குப் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல்கள் இன்று தொடக்கம் அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நடத்தப்படவுள்ளன.

ஏற்கனவே இந்த வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களையும்திட்டத்தில்இணைய தகைமையுள்ள பயனாளிகளையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் பாதுகாப்பு கருதி தமது அலுவலகங்களைப் பிரதேச செயலகத்துக்கு மாற்றியுள்ளதால் அந்தந்தப் பிரிவில் உள்ள பொது அமைப்புக்களின் கட்டடங்களில் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

## காலபோகச் செய்கைக்கு விவசாயக் கடன் உதவி

தென்மராட்சி, மே 14
எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்த வருட காலபோக நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை ஆகியவற்றில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடன் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை பிரிவு விவசாயக் கமநல சம்மேளனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

காலபோக நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை ஆகியவற்றை மேற்கொள்ளும் நெற் செய்கையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஒரு லட்சம் ரூபா தொடக்கம் இரண்டு லட்சம் ரூபா வரை கடனாக வழங்கப்படவுள்ளது.

இந்தக் கடன் பெற விரும்புவோர் பிரிவு விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 3 ஆயிரம் கோடிக்கு பீரங்கிக் கொள்வனவு

## 27 வருடங்களுக்குப் பின் அனுமதி


புதுடில்லி, மே 14

இந்திய இராணுவத்தில் ஏற்பட்டுள்ள பீரங்கிகள் பற்றாக்குறையைத் தொடர்ந்து அமெரிக்காவிடமிருந்து ரூ.3 ஆயிரம் கோடிக்கு கொள்முதல் செய்ய பாதுகாப்பு அமைச்சகம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

இராணுவத்தின் பீரங்கிகள் உட்பட ஆயுத பலம் மிகவும் குறைவாக உள்ளது. பாகிஸ்தான், சீனா போர் தொடுத்தால் கூட சமாளிக்க முடியாத நிலையில் எமது இராணுவம் உள்ளது என்று வி.கே.சிங் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து அவர் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஆயுதங்கள் வாங்கும் பொருட்டு கடிதம் எழுதினார்.

இதன் விளைவாக, மத்திய இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோனியின் தலைமையிலான குழு அமெரிக்காவிடமிருந்து பீரங்கிகளை வாங்க ஒப்புதல் அளித்துள்ளது.



அவற்றில் அமெரிக்க தயாரிப்பான 145 இலகு ரக எம் 777 பீரங்கிகளுக்காக மாத்திரம் ரூ. 3 ஆயிரம் கோடி செலவிடப்படவுள்ளது.

ரேடார்கள், பயிற்சிக் கப்பல்கள், கூட்டு விமானப் படைச் சானதங்கள் என கொள்முதல் செய்யப்படும் குறித்த ஆயுதத் தளபாடங்கள், அருணாச்சல பிரதேசம் உள்ளிட்ட மலைப்பாங்கான தரைப்பிரதேசத்திலும் பயன்படுத்த கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி தலைமையிலான பாதுகாப்புக்கான கொள்முதல் குழு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. சுவீடன் நாட்டின் போபர்ஸ் நிறுவன பீரங்கிகள் கொள்வனவு ஊழல் விவகாரம் காரணமாக, கடந்த 27 வருடங்களுக்கு பின்னர் வெளிநாடொன்றிலிருந்து பீரங்கிகள் வாங்குவதற்கு தற்போதே அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பீரங்கிகள், தேவை ஏற்படும் போது சீன எல்லையில் உள்ள லடாக் பகுதிகளிலும் பயன்படுத்த முடியும். இதேவேளை இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களைக் கொண்டு செல்ல வசதியாக வீதி மற்றும் ரயில் பாதை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மத்திய பாதுகாப்பு அமைச்சரவை குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. (வ)

# புலிகளுக்குத் தடை விதித்தவர் ஜெ. இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கிறார்

## சாடுகிறார் சுப.வீரபாண்டியன்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட பின் விடுதலை புலிகள் என்று பேசுவதற்கே தடை செய்யப்பட்டிருந்தது. இந்தத் தடையை விதித்தவர் தான் ஜெயலலிதா. இப்போது அவர் நீலிக் கண்ணீர் வடிக்கிறார் என்று பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தெரிவித்தார்.



கோவை சவுரிபாளையத்தில் தி.மு.க. பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்காக கடந்த 20 ஆண்டுகளாக ஆதரவுக் குரல் கொடுத்து வருபவர் கருணாநிதி. ஈழத்துக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி. தமிழகத்தில் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதற்கு பின் விடுதலைப்புலிகள் என்று பேசுவதற்கே தடை செய்யப்பட்டிருந்தது. இந்தத் தடையை விதித்தவர் தான் ஜெயலலிதா. இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கிறார்.

விடுதலை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயாருக்கு தமிழகத்தில் சிகிச்சை அளிக்க வந்தால் அவருக்குச் சிகிச்சை செலவை தமிழக அரசு ஏற்கும் என்று சொன்னவர் கலைஞர் என்பதை மறந்து விடக்கூடாது. பிரபாகரனின் தாயார் அதற்கு நன்றி தெரிவித்து கலைஞருக்கு ஒரு கடிதம் எழுதினார். கடிதத்தின் முடிவில் உங்கள் உடன் பிறப்புக்களில் நானும் ஒருவர் என்று குறிப்பிட்டிருந்தார்.

சிங்களவர்களுக்கும் புலிகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டிருந்தால் புலிகள் எப்போதோ வென்று இருப்பார்கள். ஆனால் சிங்களவர்களுக்கு ஆதரவாக இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இருந்தன. இதனால் புலிகளால் வெற்றி பெற முடியவில்லை. இதற்கு தமிழ் ஈழம் ஒன்று தான் தீர்வாகும், அது விரைவில் அங்கு மலரும்-என்றார் அவர்.

### நித்தியானந்தாவை வெளியேற்ற வேண்டும்

# மதுரை ஆதீன மீட்புக் குழு மாநாட்டில் தீர்மானம்

மதுரை, மே14

மதுரை ஆதீனத்திலிருந்து நித்தியானந்தாவை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று மதுரை ஆதீன மீட்புக்குழு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மதுரை ஆதீனம் மீட்புக்குழு மாநாடு நேற்று மதுரையில் நடைபெற்றது. இதில் வேளக்குறிச்சி ஆதீனம், நெல்லை கண்ணன், இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சைவ, சமயத் துறவிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மதுரை ஆதீனத்திலிருந்து நித்தியானந்தாவை உடனடியாக வெளியேற்ற வேண்டும். புதிய ஆதீனத்தை தமிழகத்தின் ஏனைய ஆதீன மடங்களை கலந்தாலோசித்து நியமிக்க வேண்டும். புதிய ஆதீனத்துக்கு தமிழக அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (வ)



இந்தியா வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி முகமது வாகீத் ஹசன் தனது மனைவியுடன் டில்லியில் ஜனாதிபதி பிரதீபா பாட்டீலைச் சந்தித்துப் பேசினார்.

## ஊட்டியில் மலர் கண்காட்சி

ஊட்டியில் 11 ஆவது மலர் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியது. இதனைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். மாவட்ட ஆட்சியாளர் அர்ச்சனா பட்நாயக் ஆரம்பித்து வைத்தார்.

தோட்டக்கலைத்துறை சார்பில் 12 ஆயிரம் ரோஜா மலர்களால் 15 அடி நீளம், 13 அடி உயரம் கொண்ட பஞ்சவர்ணகிளி அலங்காரம், கோவை மாவட்ட தோட்டக் கலைத் துறை சார்பில் 7 ஆயிரம் மலர்களால் ஆன 11 அடி உயரம் கொண்ட பாண்டா கரடி, தர்மபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் ரோஜா மலர்களாலான புலி மற்றும் புலிக் குட்டி, ஒட்டக சிவிங்கி ஆகியவை சுற்றுலாப் பயணிகளை பரவசப்படுத்தின.

# ஓடுபாதையில் நின்று படம் எடுக்க முயன்றவர் விமானம் மோதி சாவு

மீரட், மே14

சொந்தமாக வாங்கிய சிறிய ரக விமானம் தரை இறங்குவதை புகைப்படம் எடுக்கும் ஆர்வத்தில் ஓடுதளத்துக்குச் சென்ற டில்லியைச் சேர்ந்த தொழிலதிபர் அந்த விமானம் மோதியதில் பரிதாபமாக உயிரிழந்தார்.

டில்லியைச் சேர்ந்த தொழிலதிபரான யோகேஷ் கார்க்குச் சொந்தமாக சிறிய ரக பயிற்சி விமானம் ஒன்று உள்ளது. இந்த விமானம் உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் உள்ள டாக்டர் அம்பேத்கர் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த விமான நிலையத்துக்கு பயணிகள் விமானம் எதுவும் இயக்கப்படுவதில்லை. பயிற்சி விமானங்களும், தொழிலதிபர்களின் தனி விமானங்களும் மட்டும் வந்து செல்லும். நேற்று முன்தினம் காலை நண்பர்கள் 2 பேருடன் மீரட் விமான நிலையத்துக்கு



யோகேஷ் வந்தார். யோகேஷின் விமானத்தில் நண்பர்கள் சென்றனர். சிறிது நேரத்தில் விமானம் தரை இறங்கத் தயாரானது. விமானம் இறங்குவதை புகைப்படம் எடுக்கத் திட்டமிட்ட யோகேஷ் ஆர்வக்கோளாறால் ஓடுபாதையின் நடுப்பகுதிக்குச் சென்றார்.

விமானம் தரை இறங்குவதை யோகேஷ் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது, எதிர்பாராதவிதமாக யோகேஷ் மீது விமானத்தின் இறக்கை மோதியது. இதில், படுகாயம் அடைந்த யோகேஷ் சுருண்டு விழுந்து இறந்தார். யோகேஷ் மீது மோதியதில் விமானத்தின் டயர் மற்றம் இறக்கை சேதமடைந்தன. இதனால், விமானம் கவிழ்ந்தது. இதில், விமானி அனில் குப்தா மற்றும் அதில் பயணம் செய்த பூர்வி ஆகியோர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினார்.

## ஆந்திர சட்ட சபைக்கு இடைத்தேர்தல்

ஹைதராபாத், மே14

ஆந்திர சட்டசபையில், வெற்றிடமாக உள்ள 18 தொகுதிகள் மற்றும் நெல்லூர் லோக்சபா தொகுதிக்கு, இடைத் தேர்தல் நடக்க இருப்பதை ஒட்டி, முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, முன்னாள் முதல்வர்கள் என்.டி. ராமராவ் மற்றும் ராஜசேகர ரெட்டி ஆகியோரது சிலைகளை மூடும்படி, தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில், சட்டசபைத் தேர்தல் நடந்தபோது, அங்கு முதல்வராக இருந்த மாயாவதி அமைத்த, கன்ஷிராம், மாயாவதி மற்றும் யானை என, ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலைகளை மூடும்படி, தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டது. அதேபோல், தற்போது ஆந்திர மாநில சட்டசபையில், வெற்றிடமாகவுள்ள, 18 தொகுதிகள் மற்றும் நெல்லூர் லோக்சபா தொகுதிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது.

# அருணாச்சலம், அசாம் எல்லை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## சிதம்பரம் நம்பிக்கை

இடாநகர், மே 14

அருணாச்சல பிரதேசம், அசாம் இடையிலான எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் சுமுகத் தீர்வு காணப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.



அருணாச்சல பிரதேசத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிதம்பரம், இடாநகரில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

அசாம், அருணாச்சல பிரதேசங்களுக்கு இடையே பல ஆண்டுகளாக எல்லைப் பிரச்சினை உள்ளது. இதற்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராயும்படி, நீதிபதி தருண் சாட்டர்ஜி தலைமையிலான ஆணையகத்தை உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது. இந்த ஆணைய, எல்லைப் பிரச்சினை பற்றி பேசுவதற்காக இரு மாநில முதல்வர்களின் கூட்டத்தை அடுத்த மாதம் கூட்டியுள்ளது. இந்தப்பிரச்சினைக்கு விரைவில் சுமுகமான தீர்வு காணப்படும். வடகிழக்கு மாநிலங்களின் அமைதியை சீர்குலைக்க மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் முயற்சிக்கின்றனர். இதில், சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தமாநிலங்களில் மாவோயிஸ்ட்டுகள் ஆதிக்கம் தலை தூக்குவதை சகித்துக் கொள்ள முடியாது. இவர்களைக் கடுமையாகக் கையாளும்படி வடகிழக்கு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு செய்யும்-என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வெடிக்குமா? பதற்றம் நீடிப்பு

## ஆனால் மறுக்கிறது சீனா



பீஜிங், மே 14

தென் சீனக் கடல் பகுதியில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டப் போருக்குத் தயாராகவில்லை என்று சீனா கூறியுள்ளது. ஆனால் உண்மையில் போருக்கான சூழலும் பதற்றமும் நிலவுகிறது.

தென் சீனக் கடல் பரப்பில் பாரம்பரியமாகத் தங்களுக்கு மட்டும்தான் உரிமை உள்ளது என்றும் பிற நாடுகள் அங்கு வருவதும் எண்ணெய் துரப்பணப் பணிகள், ஆய்வுகள் போன்றவற்றைத் தங்களிடம் அனுமதி பெறாமல் மேற்கொள்வதும் கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் சீனா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாடு தென் சீனக் கடலில் உள்ள ஹுவாங்யான் தீவு தங்களுக்கே உரியது என்றும் அதன் பெயர் பனடாக் ஷால் என்றும் கூறி வருகிறது.

''இந்த இடம் எங்களுடையதுதான், உங்களுக்கு ஏதாவது நேருவதற்கு முன்னால் இடத்தை விட்டுப் போய் விடுங்கள்'' என்று சீனா நேரடியாகவும் மறைமுகமாகவும் பிலிப்பைன்ஸை எச்சரித்து வருகிறது. சீனாவுடன் ஒப்பிடுகையில் பிலிப்பைன்ஸ் மிகப்பெரிய நாடு அல்ல. ஆனால் அது அமெரிக்காவுக்கு நெருங்கிய நட்பு நாடாக இருப்பதால் சீனாவுக்குச் சவால் விட முடிகிறது. அமெரிக்காவும் பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொண்டு மறைமுகமாக சீனாவை எச்சரித்து வருகிறது.

சர்ச்சைக்குரிய இடம் தங்களுடையதே என்று காட்ட இரு நாடுகளுமே போருக்குப் பயன்படாத சரக்குக் கப்பல்களையும் இதர கப்பல்களையும் அங்கே கொண்டு போய் நிறுத்தி உரிமை கொண்டாடிவருகின்றன.

இந்த நிலையில்தான் போருக்குத் தயாராவதாகத் தங்களைப் பற்றி வரும் தகவல்கள்எல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்று சீனா மறுத்துள்ளது.

அப்படியும், மக்கள் விடுதலை செஞ்சேனையும் (பி.எல்.ஏ.) சீனக் கடற்படையும் போர் செய்வதற்கான கருவிகள், ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியவற்றுடன் களம் புகத் தயாராகிவிட்டன என்று பீஜிங் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தென் சீனக் கடல் பகுதியில் செல்லநேரும் பயணிகள் கப்பலும் சரக்குக் கப்பலும் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று அஞ்சியபடியேதான் செல்கின்றன. ஆனால் அப்படி ஏதும் நேராது என்று சீன இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய தீவில் மக்கள் வசிப்பதில்லை. ஆனால் அங்கு இயற்கை எரிவாயுவும் எண்ணெயும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

சர்வதேசக் கடல் சட்டப்படி தன்னுடைய சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அந்தத் தீவு இருப்பதாக பிலிப்பைன்ஸ் கூறுகிறது.

சீனாவோ அந்தத் தீவு தன்னுடைய கடலோரத் தைச் சேர்ந்த பகுதி என்றும் பல நூற்றாண்டுகளாக அது தங்கள் தீவாகவே இருந்து வருகிறது என்றும் தெரிவிக்கிறது. தங்கள் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் யாரும் பிலிப்பைன்ஸ் செல்லக் கூடாது என்று சீனா தடை விதித்துள்ளது.

அத்துடன் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து பழங்கள் உள்ளிட்ட பொருள்களை இறக்குமதி செய்யவும் கட்டுப் பாடுகளைக் கடுமையாக விதித்திருக்கிறது. கிட்டத் தட்ட தடை என்றே சொல்லும் அளவுக்கு இந்தக் கட்டுப்பாடு இருக்கிறது.

## இஸ்ரேலில் நிலநடுக்கம்



ஜெருசலேம், மே 14

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனப் பகுதிகளில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.

டெல் அவிவ், ஜெருசலேம், ரமலா, ஜெனின் உட்பட பல்வேறு நகரங்களில் இருந்த கட்டடங்கள் அதிர்ந்தன. பல இடங்களில் விரிசல் மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின. நள்ளிரவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால், உறக்கத்தில் இருந்த மக்கள் விழித்து அலறியபடி வெளியில் ஓடினர்.

சைப்ரஸ் கடல் பகுதியில் கடலுக்கு அடியில் 19.8 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டதாகவும், 5.5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாகவும் அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

## விநியோகப் பாதைகள் திறக்கப்படல் வேண்டும்



ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படையினருக்கான விநியோகப் பாதைகளை பாகிஸ்தான் மீண்டும் திறக்கவேண்டுமெனநேட்டோ அமைப்பின் செயலாளர் அண்டர்ஸ் போக் ரஸ்முசேன் வலியுறுத்தியுள்ளார்.

விநியோகப் பாதைகளை திறக்காதபட்சத்தில் ஆப்கானின் எதிர்காலம் குறித்த முக்கிய பேச்சுவார்த்தைகளைப் பாகிஸ்தான் தவறவிடலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் அமெரிக்காவின் சிக்காகோவில் நேட்டோ மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நேட்டோ படையினர் எல்லை தாண்டி நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தான் படையினர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, இந்தப் பாதைகளை பாகிஸ்தான் மூடியிருந்தது.


இந்த நிலையில், விநியோகப் பாதைகளை திறந்து விடுமாறு பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளிடம் நேட்டோ மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது என்று நேட்டோ அமைப்பின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமெரிக்க தொழிலதிபருக்கு 'டைனோசர்'பெயர்

அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலதிபர்ஒருவர்டைனோஸர் ரகமொன்றின் பெயரைத் தனது பெயராக சட்டபூர்வமாக மாற்றிக்கொண்டுள்ளார்.

டைலர் கோல்ட் எனும் 23 வயதான இந்தத் தொழிலதிபர் ட்ரைனோஸரஸ் ரெக்ஸ் என்று தமது பெயரை மாற்றிக் கொண்டுள்ளார். இது டைனோஸர் விலங்கு ரகமொன்றின் பெயராகும். தனது முந்தைய பெயரைவிடப் புதிய பெயர் மிகவும் சிறப்பாக உள்ளதென அவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

''ஒரு தொழிலதிபரின் பெயரானது நன்கு பிரபல்யமடைந்திருக்க வேண்டும். பெயர் அங்கீகாரம் மிகவும் முக்கியமானது. தற்போதைய எனது இந்தப் புதிய பெயரானது எல்லோராலும் அறியப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



நெதர்லாந்துக்கு பயணம் செய்திருக்கும் பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் வில்வித்தையில் ஈடுபடுகின்றார்.

## யேமனில் ஆளில்லா விமானத் தாக்குதல்

சனா:

யேமனில் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் 11 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கு யேமனில் இரு முறை ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 11 அல்குவைதா தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக யேமன் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் முதல் தாக்குதல், சானாவிலிருந்து தென் கிழக்கு மரிப் மற்றும் சப்வா ஆகிய இருஇடங்களில் நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## கிரேக்கத்தில் உடனடி அரசமைக்க முயற்சி



கிரேக்கத்தில் உடனடி அரசைஅமைக்கும்பொருட்டு, அந்த நாட்டு ஜனாதிபதி கரோலோஸ் பெப்பவ்லியாஸ் கட்சித் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின்கூட்டணி அரசை அமைக்கும் சோசலிசக் கட்சியின் முயற்சி தோல்வி கண்டதை அடுத்து இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த முயற்சி தோல்வியடையும் பட்சத்தில் பெரும்பாலும் அடுத்த மாதம் புதிய தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டி ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வரவு - செலவு திட்டத்தில் அதிக செலவீன குறைப்பை மேற்கொள்வதற்கு எதிராக செயற்பட்ட கட்சிகளுக்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வாக்களித்திருந்தனர்.

கிரேக்கத்தின் கடன் நெருக்கடி அந்த நாட்டில் மீண்டும் அரசியல் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

செலவீனக் குறைப்பை மேற்கொள்ளாத பட்சத்தில் ஐரோப்பிய வலயத்தில் இருந்து கிரேக்கம் வெளியேற்றப்படும் ஆபத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தேசிய அரசை ஏற்படுத்துவதற்கான முயற்சியை ஜனாதிபதி மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், அவரின் முயற்சி வெற்றியளிக்கும் வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன என்றும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

## பிரிட்டனில் அதி உயர சிற்பக் கோபுரம்

பிரிட்டனின் மிக உயர்ந்த சிற்பக் கோபுரத்தை, இந்தியாவைச் சேர்ந்த கலைஞர் அனிஷ் கபூர் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். பிரிட்டனில் உருக்குத் தொழிலில் இந்தியாவைச் சேர்ந்த ஆர்ச்சலர் மிட்டல் கொடிகட்டிப் பறக்கிறார். அவர் பிரிட்டனில் உருக்கிலேயே மிக உயர்ந்த சிற்பக் கோபுரத்தை உருவாக்க, 20 மில்லியன் பவுண்ட் நிதியுதவி அளித்தார். இதன் மூலம் சிற்பக் கலைஞர் செசில் பால்மாண்ட் கோபுரத்தை வடிவமைத்துள்ளார். இந்தக் கோபுரம் பிரிட்டனிலேயே மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. கிழக்கு லண்டனில் உள்ள ஒலிம்பிக் மைதானத்துக்கு அருகில் இந்தக் கோபுரம் அமைந்துள்ளது. மொத்தம் 455 சுழற்படிக்கட்டுகள் அமைந்துள்ளன. 2 தளங்கள் அமைந்துள்ளன. கோபுரத் தில் உள்ள லிப்டில் சென்று லண்டன் அழகைப் பார்த்து விட்டு படிக்கட்டுகளில் இறங்கி வரலாம். இந்தக் கோபுரத்தை இந்தியாவைச் சேர்ந்த கலைஞர் அனிஷ் கபூர் நேற்று முன்தினம்திறந்து வைத்தார்.

இவர் கூறுகையில், இந்தக் கோபுரம் பார்ப்பதற்கு அழகற்றதாக இருக்கும். ஆனால், அது தான் அழகு என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் வெள்ளப்பெருக்கு

## 40 பேர் சாவு






தென்மேற்கு சீனாவில் பெய்துவரும் கடும் மழை மற்றும் புயல் காரணமாக 40பொது மக்கள் உயிரிழந்துள்ள னர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கன்சூ மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை வீசிய கடும் புயல் காரணமாக 10 பேர் காணாமற் போயுள்ள னர் என்று அந்த நாட்டு ஊடக மொன்று செய்தி வெளி யிட்டுள்ளது. இந்தப் புயல் காரணமாக சுமார் 350,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் சுமார் 30,000 பேர் தங்களது வீடுகளி லிருந்து வெளியேறியுள்ள னர் என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

மழை மற்றும் புயல் காரணமாக வீதிகள் தடைப் பட்டுள்ளன. வீடுகள் பல சேதமடைந்துள்ளதுடன், வயல் நிலங்கள் அழி வடைந் துள்ளன என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித் துள்ள னர்.

பாதிக்கப்பட்ட பகுதிக ளிலுள்ள மக்களுக்கு உதவி யளிப்பதற்காகப் போர்வை கள் உள்ளிட்ட உதவிப் பொருள்களை வழங்குவதற் காக சுமார் 2,000 அதி காரி களும் 800 படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

### கடற்கொள்ளையர்கள் கைவரிசை

சோமாலியக் கடற்கொள் ளையர்களினால் எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று கடத் தப்பட்டுள்ளது.


கிறீஸ் நாட்டிலுள்ள நிறுவனமொன்றுக்குச் சொந்த மான இந்தக் கப்பலில் 15 ஊழியர்கள் இருந்தனர் என வும் அவர்களில் பெரும் பாலானோர் இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லைபீரிய கொடி தாங் கிய, ஸ்மைர்னி எனப் பெய ரிடப்பட்ட, இந்தக் கப்பல் 135,000 தொன் எண்ணெ யுடன் சென்றுகொண்டி ருந்ததாகத் தெரிவிக்கப்படு கிறது.

கடந்த வியாழனன்று பிற் பகல் இந்தக் கப்பல் ஊழி யர்களுடனான தனது தொடர்பு களை இழந்துவிட்டதாக மேற்படி நிறுவனம் தெரிவித் துள்ளது.

ஓமானிலிருந்து 630 கிலோமீற்றர் தொலைவில் இந்தக் கடத்தல் இடம்பெற்றி ருக்கலாம் என கருதப்படு கிறது.

# பாகிஸ்தானில் தொலைக்காட்சி செய்தியாளர் மீது தாக்குதல்



பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் தீவிர வாதிகள் நடத்திய தாக்கு தலில் தொலைக்காட்சி செய்தி யாளர், அவரது சகோதரர் உட் பட 3 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழ மைக் காலை இந்தத் தாக்கு தல் சம்பவம் நடத்தப்பட் டுள்ளதென பாகிஸ்தானிலி ருந்து வெளியாகும் டன் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கே.டி.என் தொலைக் காட்சி நிறுவனத்தில் செய்தி யாளராகப் பணிபுரிப வர் ஔ ரங்கசீப் டுனியோ. இவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை அலுவலகத்தில் இருந்த போது அடையாளம் தெரியாத 20 பேர் கொண்ட கும்பல் அலுவ லகத்துக்குள் நுழைந்து துப் பாக்கியால் சுட்டது.

இதில் அங்கிருந்த ஔ ரங்கசீப், அவரது சகோத ரர் ருஸ்தம் துனியயோ மற் றும் கஷ்கேலி ஆகியோர் கொல் லப்பட்டனர்.

முகிரி எனும் சமூகத் தைச் சேர்ந்தவர்கள் தான் இந்தப் படுகொலையைச் செய் திருப்பார்கள் என்று குடும் பத்தினர் தெரிவித்தனர்.

முகிரி இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை தன்வீர் துனியோ திருமணம் செய்து கொண்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்தச் சமூ கத்தினர் கூலிப்படை மூலம் இந்தச் செயலைச் செய்திருக் கலாம் என்று நம்பப்படு கிறது. இருப்பினும் கொலை யாளிகளைக் கண்டுபிடிக் கத் தனிப்படை அமைக்கப் பட்டிருக்கின்றதென பொலி ஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த மாதம் பாகிஸ்தான் தலை நகர் பகுதியில் ஒரு ஊடக வியலாளர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். அவ ரின் கொலை தொடர்பான மர்மம் நீடித்து வரும் நிலை யில் இப்போது இரண்டாவது ஊடக வியலாளரும் கொலை செய்யப்பட்டிருப்பதால் அங்கு ஊடகவியலாளர் மத்தியில் அச்சநிலை காணப்படுகி றது.

# சர்ச்சைக்குரிய அபேய் பிராந்தியத்திலிருந்து திரும்பினர் தென்சூடானியப் பொலிஸார்

சர்ச்சைக்குரிய அபேய் பிராந்தியத்தில் இருந்து தமது பொலிஸாரை தென் சூடான் திருப்பி அழைத்துள்ளதென ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

தொடரும் எல்லை மோதல்கள் அபேய் பிராந்தியத்தில் போரைத் தோற்றுவிக்கும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியி ருந்ததாக சர்வதேசத் தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதனிடையே, குறித்த பிராந்தியத்தில் அமைதிப் படையினரின் பிரசன்னத்தை நீடிப்பது குறித்து எதிர்வரும் 16 ஆம் திகதி ஐ.நா பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

தென்சூடானின் இந்த நகர்வை வரவேற்றுள்ள அமெரிக்கா, குறித்த பிராந்தியத்தில் இருந்து சூடானும் தமது துருப்பினரைத் திருப்பி அழைக்க வேண்டுமென வலி யுறுத்தியுள்ளது.

எண்ணெய் வளமிக்க அபேய் பிராந்தியத்தை இரண்டு சூடான்களும் உரிமை கோரி வருகின்ற நிலையில், இருதரப்பு மோதல்கள் அண்மைக்காலமாக வலுவடைந் துள்ளன.


**திருமண மண்டப மேற்பார்வையாளர் தேவை**

மேற்படி பதவிக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்,
கொக்குவில்.
T.P: 021 222 3003 / 0770388421


**நீங்கா நினைவில் பதினைந்து ஆண்டுகள்**



தோற்றம் 07 ★ 12 ★ 1926

மறைவு 14 ★ 05 ★ 1997

திருமதி **புவனேஸ்வரி அரியதுரை**

கண்ணின் கருமணியாய் காத்த எம்மை - இன்று
கண்ணீர் மல்க விட்டு சென்றதேனோ !
விண்ணின் விடிவெள்ளியாய் போன பின்பும் - எங்கள்
விழியில் ஈரம் தனை தந்ததேனோ!

என்றும் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

வேலப்பர் ஒழுங்கை,
அரியாலை

## ஸ்பெயினில் மக்கள் கிளர்ச்சி



ஸ்பெய்ன் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று ஓராண்டுப் பூர்த்தியை அந்த நாட்டு மக்கள் அனுஷ்டித்துள்ளனர்.

மத்திய மெட்ரிட் பகுதியிலுள்ள சதுக்கத்தை ஆக்கிரமித்து ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடியுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பல தசாப்த காலத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டது.

ஸ்பெய்னின் வேலைவாய்ப்பின்மை வீதம் கடந்த ஏப்ரல் மாதம் உயர்ந்த பெறுமானத்தை பதிவு செய்ததுடன், செலவீனக் குறைப்புத் தொடர்பான அறிவிப் பையும் வெளியிட்டி ருந்தது.

குறித்த பகுதி யில் இருந்து கலைந்து செல்லுமாறு ஸ்பெய்ன் அதிகாரிகள் உத்தர விட்டிருந்த போதி லும், மக்கள் குறித்த பகுதியில் தொடர்ந் தும் நிலைகொண் டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு தொடக்கம் ஐரோப் பிய மற்றும் வட ஆபி ரிக்க நாடுகளில் மக் கள் கிளர்ச்சிகள் வெற் றியடைந்து வரு கின்ற நிலையில் இந்த மக்கள் போராட் டம் சர்வதேச ஊடகங் களின் கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

**கண்ணீர்க் காணிக்கை**



காலம் கணக்கினை எழுதும்
மனதில் துயர் நிலை கவியும்

**ஆறுமுகம் கேதீஸ்வரன்**

அப்பப்பாவின் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சங்கத்தானை, சாவகச்சேரி.

திருக்குமரன் (மகன்),
விரிப்பிரியா (மருமகள்), சங்கவி (பேர்த்தி)

துப்பிளான் கர்க்கரைப் பிள்ளையார் துணை

**18 ஆவது நினைவுப் பிரார்த்தனை**



தவப்பேறு
11★01★1960

சிவப்பேறு
03★06★1994

திருமதி **ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**

[B.A (HONS) (ஆங்கில ஆசிரியர் - Eng. Trd)]

திதி: 14.05.2012

அன்புருவாய் அவனிக்குவந்து அனைவரையும் இன்சொல்லால் இணைத்து ஞான ஒளியாய் விளங்கிய ஞானா இமைப்பொழுதும் எம்நெஞ்சில் நீங்கா அன்பே... இனி எப்பிறப்பில் சந்திப்போம்?

திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கணவர்)
அன்பு மாமா, மாமி, சகோதரி,
மைத்துனர், மருமக்கள்,
பெறாமக்கள், உறவினர்.

28, கைலாச பிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(15)

அவர் அப்படி வேலை பார்த்தார். நள்ளிரவில் களைத்து சோர்ந்து வீடு திரும்புவார். அடித்துப் போட்டாற் போல் உறங்கி விடுவார். அவருடைய கவலைப்படுகிற பழக்கம் விலகியது. உறங்கி விடுவார். உறக்கமின்மை என்கிற அவதியும் நீங்கியது. அதன்பிறகு வழக்கமான வேலை நேரத்தில் பணிபுரியலானார்.

மனம் ஒரு குரங்கு. அது உங்களைச் சும்மாயிருக்கவிடாது. செயல்படாதிருக்கும் நேரங்களில் அது நேர்மறையாக எதையாவது சிந்திக்கலாம் தானே ஆனால். அது எதிர்மறை சிந்தனைகளில் அலைபாயும். மகிழ்ச்சிக்குரியவைகளைத் தேடாமல் வருத்தத்திற்கான காரணிகளையே அது தேடிக் கொண்டிருக்கும். எனவே மனதின் போக்கில் இழுபடாமல் மனதை உங்கள் கட்டுப்பாட்டில் வைக்கப்பாருங்கள். முடியாத பட்சத்தில் ஏதேனும் ஒரு வேலையில் எப்போதும் பிஸியாகி விடுங்கள். அதைவிடச் சிறந்த மலிவான சிகிச்சை முறை இருப்பதாய் தெரியவில்லை.

### சூரியனும், பனித்திரையும்

''வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்'' என்பார்கள். நோய்க்கு காரணமான கவலையும் விட்டுப்போகும் என்று சேர்த்துக் கொள்ளலாம்.

கவலையை உள்ளே வைத்துக்கொண்டு புன்னகை செய்ய முடியுமா? முடியும் ஆனால் அது சோகத்தைச் சுமந்திருக்கும். கவலையை விரட்டியடிக்க ஒரு நல்லவழி உரக்கச் சிரிப்பது.

*'நீங்கள் மனம் விட்டுச்*
*சிரிக்கும் நேரங்கள்*
*உங்கள் வாழ்க்கையின்*
*இனிய தருணங்கள்'*

மலர்ந்து சிரிக்கும் ஒரு பெண்ணின் முகத்தை குழந்தையின் முகத்தை உங்களால் மறக்க முடியுமா? முடியாது. அந்தச் சிரித்த முகம் மகிழ்ச்சியைப் பிரவகிப்பதை உங்களால் மறக்க முடியாது. நிலைக்கண்ணாடி முன்பாய் நின்று சிரித்துப் பாருங்கள். திருப்தியாக உணர்வீர்கள்.

உளவியல் நிபுணர் ஜேக்கப் லெவின் கூறுவார். 'நம்பிக்கையில்லாத நிராசையுற்ற பேர்வழிகள் தான் நகைச் சுவையுணர்வே இல்லாதிருப்பர்' என்று நம்பிக்கையோடு சிரியுங்கள். சிரிப்பதன் மூலம் உங்கள் நம்பிக்கை கூடினால் கவலை குறையும்.

உங்களால் சிரித்துக் கொண்டே அழ முடியாது. மகிழ்ச்சியாய் இருந்து கொண்டே கவலைப்பட முடியாது.

கவலை நரம்புகளைச் சோர்வடையச் செய்யும் மனதை இறுக்கத்திற்குள்ளாக்கும். உங்கள் உடல் மற்றும் மூளையின் இயக்கங்கள் சீர்கெடும். காரணம் களைப்பு, கவலையால் உண்டாகிற பலவீனம். விடுபட ஒரே வழி சிரிப்பு, அது உங்களைச் சுறுசுறுப்பாக்கி விடும்.

### மன இறுக்கத்தைப்போக்கும் நகைச்சுவை

கல்பனா ஒரு குடும்பத் தலைவி. ஏகப்பட்ட பிரச்சினைகளை இழுத்துவிட்டுக் கொண்டு அடிக்கடி மன இறுக்கத்திற்குள்ளாகி விடுவாள்.

எனக்கு பி.பி எகிறுது. சுகர் இருக்கும் போலிருக்கு என்று இல்லாத நோயெல்லாம் இருப்பதாக எண்ணிக் கவலைப்பட்டாள். ஒரு கட்டத்தில் உடல் நிலை பாதிப்புற்று மருத்துவமனையில் சேர்க்கும்படி ஆயிற்று. மருத்துவர் அவளைச் சோதித்து;அவளுடைய திருப்திக்காக மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார். அவருடைய கணவனை அழைத்து, 'உங்கள் மனைவிக்கு நோய் எதுவும் இல்லை, மன இறுக்கந்தான். அவர் நகைச்சுவையுணர்வை அதிகரித்துக் கொள்ள வேண்டும்' என்றார்.

நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ள புத்தகங்கள், தொலைக்காட்சி, ஸி.டிக்கள், சிநேக வட்டம் என்று எத்தனை இருக்கிறது!

உம்மணா மூஞ்சிகளை விட சிரித்துப் பேசக் கூடியவர்களுக்குத் தான் நண்பர்கள் அதிகம்.

நாலு பேர் கூடி அரட்டையடிக்கிற இடத்தில் கவலை எட்டிப் பார்க்காது. மிக மோசமான சூழ்நிலையைக் கூட ஒரு சின்ன 'ஜோக்' மாற்றிவிடுமே.

சிரிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. உங்களுக்கும், உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும்.

### முட்டாளும் புத்திசாலியும்

மிஸ்டர் எக்ஸ். ரொம்பவும் உற்சாகமாய் விவாதம் பண்ணுகிறவர். அவருடைய மனைவியோ எப்போதும் தன்கைதான் ஓங்கியிருக்க வேண்டும் என்று எண்ணுகிறவள். சமயத்தில் கோபாவேசமாகி 'நான் போகிறேன்' என்று பிறந்த இடத்துக்கு மூட்டை கட்டி விடுவாள்.

அவளை உடனே அமைதிப் படுத்தாவிட்டால் தன்பாடு திண்டாட்டமாகி விடும் என்பது மிஸ்டர் எக்ஸிற்கு தெரியும். அவளை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்பதையும் அவர் அறிவார்.

'கண்ணு நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே நீ ரொம்ப புத்திசாலி. இப்போ என்னோட புத்திசாலித்தனமும் உன்னண்டை வந்துடுத்து' என்பார்.

'ஓ, அப்படின்னா, உங்கள்ட்ட மிச்சமிருக்கிறது முட்டாள் தனந்தான்!' என்று, திருமதி கைகொட்டிச் சிரிப்பாள். சூழ்நிலை .இறுக்கம் தணிந்து, ஒரே நொடியில் இலேசாகி விடும்.

-சி.எஸ்.தேவநாதன் *(தொடரும்)*

# மாணவர்களின் வரவில் வீழ்ச்சி; பெற்றோரின் அசமந்தமே காரணம்

## தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**தீவுப் பகுதி பாடசாலைகளில் நாளாந்தம் 30 வீதமான மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை. பெற்றோர்கள் தங்கள் சிறு தேவைகளுக்குக் கூட பிள்ளைகளைப் பாடசாலைக்குச் செல்ல விடாது தடுக்கின்றனர். இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மிக மோசமாகப் பாதிப்படைகின்றன.**

காரைநகர்,மே 14

மாணவர்களின் வரவு தீவகப் பகுதிப் பாடசாலைகளில் நாளாந்தம் மிகக் குறைவாகக் காணப்படுவது இந்தப் பகுதி பாடசாலைகள் எதிர் நோக்கும் மிகப்பெரிய சவாலாக காணப்படுகின்றது. பாடசாலைக்கு பிள்ளைகள் வரவு குறைந்தமைக்குப் பிரதான காரணம் பெற்றோர்களின் அசமந்தப் போக்கே. எனவே பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இவ்வாறு தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச கல்வி அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய நடராசா மண்டபத்தில் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

தீவுப் பகுதி பாடசாலைகளில் நாளாந்தம் 30 வீதமான மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை. பெற்றோர்கள் தங்கள் சிறு தேவைகளுக்குக் கூட பிள்ளைகளைப் பாடசாலைக்கு செல்ல விடாது தடுக்கின்றனர். இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மிக மோசமாகப் பாதிப்படைகின்றன.

தீவுப்பகுதி பாடசாலைகளைச் சென்று பார்வையிடுகின்ற போது எழுபது வீதத்திற்கும் குறைவான மாணவர்களே பாடசாலைகளுக்கு நாளாந்தம் சமுகமளிக்கின்றனர். இது தீவகப் பகுதிகளின் கல்விப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணியாக அமைகின்றது.

எனவே பெற்றோர்கள் பிள்ளைகளை நாளாந்தம் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் விரும்பி மகிழ்வாக கற்கும் சூழலை பாடசாலைகளில் ஏற்படுத்த வேண்டும் .

பாடசாலை வளாகத்தில் கற்குவியல் போன்று பல்வேறு பொருள்கள் காணப்படுவதால் அவற்றில் இருக்கும் விஷஜந்துகள் மாணவர்களைத் தீண்டும் அபாயம் காணப்படுவதால் பாடசாலை வளாகங்களை சுத்தமாக வைத்திருப்பது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

இன்றும் பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளுக்கே முன் உதாரணம் கொடுக்கின்றனர். அவர்களையே விரும்பி தலைவர்களாக மாணவர் தலைவர்களாக முதன்மைப் படுத்துகின்றனர். வீடுகளில் ஆண் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் பாடசாலைகளிலும் தொடர்கின்றது. இந்த நிலை மாறவேண்டும் இருபாலாரையும் சமமாக மதிக்க வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் காரைநகர் பிரதேச அனைத்துப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவப் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், பெற் றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

( எ-250)

# வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு

**பிரிவு-1**

**ஆக்கம்-எழுத்து**

முதலாமிடம் -அ. வெற்றிதரன்-பண்ணாகம் மெ.க.ம.வி, இரண்டாமிடம்-யுயூலன்-மானிப்பாய் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் -சு.ஸனோஜா-ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வி.

**பிரிவு-2**

**கட்டுரை வரைதல்**

முதலாமிடம்-இ.ஜதுசா-சுதுமலை சிந்மயபாரதி வித்தி, இரண்டாமிடம்- சி.பிருந்தாயினி- மானிப்பாய் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் -வெ. கெபின்-வயாவிளான் ம.ம.வி.

**பிரிவு-3**

**கட்டுரை வரைதல்**

முதலாமிடம்- த.கேசிதா- உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்-க.யசோதா-சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, மூன்றாமிடம் -சி.வர்ஷிகா- அருணோதயக்கல்லூரி.

**பிரிவு-4**

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

முதலாமிடம் இடம் -ம.சங்கவி - வட்டு மத்திய கல்லூரி, இரண்டாமிடம் -இ.இலாவண்யா- சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, மூன்றாமிடம்- அ.கோபிதா- கந்தரோடை த.க.வித்தி.

**பிரிவு-5**

**தமிழியற் கட்டுரை, இலக்கியம் நயத்தல்**

முதலாமிடம் இடம்-சொ.தருமதன்-யூனியன் கல்லூரி, இரண்டாமிடம்- து.மேதுஷா- மகாஜனக்கல்லூரி, மூன்றாமிடம்-சி.கோகுலவர்த்தனி-இணுவில் மத்திய கல்லூரி.

**பிரிவு-4**

**இலக்கணப்போட்டி**

முதலாமிடம்- இ.கீர்த்தனி- கந்தரோடை த.க.வி, இரண்டாமிடம்- ஜெ.சுதாகரன்- அருணாசலம் வித்தி, மூன்றாமிடம்- ச.கௌசி- பண்ணாகம் மெ.க.வித்தி.

**பிரிவு-5**

**இலக்கணப்போட்டி**

முதலாமிடம்- சி.செவ்வந்தி- பண்ணாகம் மெ.க.வித்தி, இரண்டாமிடம்- தே.பில்கிளின்ரன்- புனித ஹென்றியரசர் கல்லூரி, மூன்றாமிடம்-சி.கௌதமி-மல்லாகம் ம.வி.

**பிரிவு-5**

**திறனாய்வுப்போட்டி**

முதலாமிடம்- சி.துளசி- ஸ்கந்தவரோதயக்கல்லூரி, இரண்டாமிடம் - வ.துவாரகன் - இணுவில் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- ம.கோகுலசாயி-யூனியன் கல்லூரி.

**பிரிவு-4**

**குறுநாடக ஆக்கம்**

முதலாமிடம்- தே.உமையாளினி-அருணோதயக்கல்லூரி, இரண்டாமிடம்-சி.யதர்சிகா-ஏழாலை ஸ்ரீமுருகன் வி, மூன்றாமிடம்- தி.சிந்துஜன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, சி.தர்சிகா-வட்டு மத்திய கல்லூரி.

**பிரிவு-5**

**குறுநாடக ஆக்கம்**

முதலாமிடம்- ஹ.விதூ சனா- ஸ்கந்தவரோதயக்கல்லூரி, இரண்டாமி டம்-மு.தர்சனா-மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம்-கேந்திரன்- யூனியன் கல்லூரி.

**பிரிவு-4**

**கவிதை ஆக்கம்**

முதலாமிடம்-வா.விதுஷா- மகாஜனக்கல்லூரி, இரண்டாமிடம்- து.ஜெகநாதன்- மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்-சி.நவநீதா-மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**பிரிவு-5**

**கவிதை ஆக்கம்**

முதலாமிடம்-போ.கஜவதனி- மகாஜனக்கல்லூரி, இரண்டாமிடம்- பி.வர்ணுஜா-இளவாலை கன்னியர்மடம் ம.வி, மூன்றாமிடம்- பா.தனுஜா-பண்ணாகம் மெ.க. ம.வி, சி.மைதிலி-மானிப்பாய் மகளிர் கல்லூரி. *(தொடரும்)*

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

வலி.வடக்கு,மே 14

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவு ஜே/ 117 இல் குமர கோட்டம் பகுதியில் ஆரம் பிக்கப்பட்ட கிறீன் கிறாஸ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நடப்பாண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் - சோ.சுஜீபன், உப தலைவர் - ம.யதுர்சன், செயலாளர் - ப.காந்தன், பொருளாளர் - தே.ராஜீவ், அமைப்பாளர் என்.நிரஞ்சன், விளையாட்டுச் செயலாளர் - தே.ராஜீவ், கலாசார செயலாளர் - ப.நிரோஷ், தொழில் முயற்சி செய லாளர் - ப.சிவசங்கர், ஊடகமும் தகவலும் செயலாளர்- தே.சன்சீவ், தேசிய சேவைகள் செயலாளர் - த.கஜன், கல்வி, பயிற்சி தொழில் வழிகாட்டல் ஆலோசனை செயலாளர் - ப.சஜீவன், கணக்குப் பரிசோதகர் - சி.விமல்ராஜ், ஒழுக் காற்றுக்குழு - யோ.டினேஸ்வரன், சி.நிலக்ஷன், பா.மதீசன்.

**ஆலோசனைச் சபை**

சி.விஜிதரன், ம.மதன்ராஜ், பு.கங்காதரன், ஞா.மகிந்தன், ப.சிவசங்கர். மேற்படி உறுப்பினர் கள் தெரிவு தேசிய இளைஞர்கள் சேவை அலுவலர் ஆர்.யுவராஜ் கிராம அலுவலர் என். சர்வகுணசீலன் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது.

(எ-86)

***

காரைநகர் சத்திரத்தை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன.

பரிபாலன சபையின் தலைவராக வே. தியாகராசா, உபதலைவராக ந.பாலசுப்பிரமணியம், செயலாளராக பா.கருணாகரன், பொருளாளராக சு.இராஜகுமாரன், உபசெயலாளராக க.கிருவானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ந.சிவபரன், வே.சிவசுப்பிரமணியம், வே. கணேசபிள்ளை, ஆ.பாலசுப்பிரமணியம், அ.நீலகண்டன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(எ-250)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மூன்றாம் ஆண்டைத் தொடும் முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்கால் பேரவலம் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் நிறைவுறும் நாள்நெருங்குகின்றன. உலகத்தின் மிக மோசமான இராணுவ வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்ட இடமாக இன்னமும் உலகத்தவரால் பதிவுசெய்யப்பட்டிருக்கும் அந்த அவலப் பெருவெளி தமிழர் வாழ்வில் மறக்காத, மறையாத வடுக்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இறுதிப்போரை முள்ளிவாய்க்காலில் முடித்ததோடு இலங்கை மீள்சுதந்திரம் அடைந்துவிட்டதாக பிரகடனப்படுத்திய சிங்கள பேரினவாத அரசு, இன்னமும் அந்தவெற்றிக் கொண்டாட்டத்தை கொண்டாடிக்கொண்டே இருக்கின்றது. அத்தோடு அதனை வைத்தே வங்குரோத்து அரசியலையும் வெற்றி நோக்கி நகர்த்துகிறது.

இந்த அவலம் பற்றிய சர்வதேச நோக்குகள் சில சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்கு சாதகமான பக்கங்களை திறந்து விட்டாலும் பல வேளைகளில் அது முள்ளிவாய்க்கால் போலவே மௌனித்த வெளியாகவே இருக்கின்றது. இலங்கை அரசின் கழுத்தை நெரிக்கக் கூடிய போர்க்குற்றம் தொடர்பான ஆதாரம் சர்வதேசத்தின் கைகளில் இருக்கின்றபோதிலும் தண்டிக்க திராணியற்ற சட்டத்தராசை அது வைத்திருக்கின்றமை அவலத்தின் மேல் எழும் அவலமாக இன்னமும் தமிழர் மனங்களில் இருக்கின்றது.

அனைத்தையும் அரசியல் நோக்கோடும் தமது நலன் சார்ந்த விடயங்களுக்காகவும் பார்க்கும் இந்த சர்வதேச சமுகம் தர்மத்தின் பாற்பட்ட தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கும் அவர்கள் சிந்திய குருதிக்கும் இன்றுவரை ஒரு நியாயமான பதிலை தராமலேயே காலம் கடத்துகின்றது.

எப்போதும் தமிழர்கள் ஏக்கத்தோடு எதிர்பார்க்கும் இந்தியா முள்ளிவாய்க்காலை மூடி மறைக்கவே இன்றும் முயற்சித்து வருகின்றது. அதிலிருந்து எழும் அவலக்குரல் அந்த நாட்டின் இதயத்தை உலுக்கினாலும் அது செவிடாகவும் குருடாகவும் இருக்கவே தன்னை தயார்செய்து வைத்திருக்கிறது. ஒரு போதும் மறைமுகமாகத் தான் நிகழ்த்திய அநீதிகளுக்காக வாவது ஒரு தீர்வைத் தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் எந்தவித அக்கறையும் இல்லாத இடத்தில் இருந்து கொண்டே இந்தியா ஈழப்பிரச்சினையை அணுகப்பார்க்கின்றது. இதன் பிரதி பலிப்பை கடந்த மாதத்திலும் தமிழர்கள் உணர்ந்திருந்தனர். வெறுங்கையோடு வருகைதந்த இந்தியக் குழு வெறுங்கையுடனேயே திரும்பிப் போனது.

தொப்புள் கொடி உறவுகளாக இருக்கும் தமிழக மக்கள் ஈழத்தவர்களின் முள்ளிவாய்க்கால் இழப்புக்குப்பின்னர் இந்த விடயத்தில் பெரும் அக்கறை எடுத்துக்கொண்டனர். இதயபூர்வமான தமது ஆதரவையும் எந்தக் கணத்திலும் வெளிப்படுத்த அவர்கள் தயாராகவே இருந்தனர். உயிர்கொடுத்தும் உதிரம் கொடுத்தும் ஈழத்து மக்களின் விடுதலைக்காக இப்போதும் குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் "தொப்புள் கொடி உறவு" என்ற சொல்லை ஈழ - தமிழக மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்திய கலைஞர் மட்டும் தொடர்ந்தும் தன் நாடகத்தை ஆடிக்கொண்டுதான் இருக்கிறார். இப்போதும் சரிந்துபோன தன் அரசியல் ஆசனத்தை நிமிர்த்தி வைக்கவே ஈழத்தமிழர் ஆதரவுநிலையை எடுத்துப் பேசி வருகிறார். இவரின் இந்தப் போக்கை சமாளிப்பதற்காகவும் தனது அரசியல் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவுமே ஜெயலலிதா எடுத்திருக்கும் ஈழ ஆதரவு நிலை அவலப்படும் மக்களின் நல்வாழ்வுக்கு வெளிச்சம் தரும் ஒளியாக மாறுமாயின் அவர் இந்த மக்களால் என்றும் மறக்க முடியாத ஒருவராகவே இருப்பார். அல்லாதுவிடின் காலம் காலமாக தமிழர்கள் கண்டுவந்த அரசியல் துரோகிகளின் வரிசையில் அவர் இடம்பிடித்துக்கொள்வார்.

மூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் முள்ளிவாய்க்காலில் வாழ்ந்த ஈழத் தமிழ் மக்களின் அரசியல் இப்படித்தான் எல்லோராலும் அணுகப்படுகின்றது. எந்தவொரு நம்பிக்கை தரும் பிடிமானங்களற்ற மாயைக்கு இந்த மக்களின் அரசியல் அடித்துச் செல்லப்படுகின்றது. வாழ்வுக்கு அடிப்படையானவைகள் கூட நிவர்த்தி செய்யப்படாத நிலையில் அவர்கள் மீளக்குடியேற்றம் என்ற பெயரில் வேறொரு புனர்வாழ்வு நிலையத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்சொன்ன அனைத்துத் தரப்பினருக்கும் அதனை மிகச் சிறந்த மீள்குடியேற்ற செயற்திட்டம் என விளங்கப்படுத்தி இலங்கை அரசு வெற்றிபெற்றும் வருகின்றது.

இப்படியே ஏமாற்றங்களும் ஏக்கங்களும் தொடர்கதையாக நிலையில் தற்காலிக வீடுகளுக்குள் முடங்கிப்போயுள்ள அந்த மக்களின் வாழ்க்கை இன்னமும் அவலங்களை அதிகமாக்கிக் கொண்டே போகின்றது.

# பழிதீர்க்கப்படும் ராஜதந்திரிகள்





ஜெனிவாத் தோல்விக்குப் பின்னர் இலங்கை அரசு அதனை மூடி மறைக்கும் வேலைத் திட்டங்களில் இறங்கியுள்ளது.

ஜெனிவாவில் ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங்கும் விதத்தில் இலங்கை அரசு, தம்மை ஐ.நா. சபையின் இலங்கைக்கான தூதுவர் பதவியினின்றும் விலக்கி மீண்டும் லத்தீன் அமெரிக்காவுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளதாக தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார். இலங்கை அரசின் அத்தகைய தீர்மானத்துக்குத் தாம் ஒரு போதும் உடன்படப் போவதில்லை எனவும் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸுக்கு அவர் அனுப்பி வைத்தள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

மிகக் குறுகிய கால முன்னறிவித்தலில் ஜெனிவாவிலிருந்து வெளியேறத் தயாராக இருக்குமாறு தமரா குணநாயகத்துக்கு வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த மாதம் 29 ஆம் திகதியன்று தொலைபேசித் தொடர்பு மூலம் தெரிவித்திருந்தார். தமரா விரும்புவாரானால் கியூபா அல்லது பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவராக அவரை நியமிக்க இயலும் எனவும் அமைச்சர் பீரிஸ் அப்போது தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக தமரா குணநாயகம் கடும் முயற்சி எடுத்துக் கொண்டார். அந்தக் கூட்டத் தொடரில் இலங்கை அரசு சார்பில் கலந்து கொண்ட அமைச்சர்கள், அரச உயரதிகாரிகள் குழுவின் இடையூறுகளுக்கு மத்தியிலும் அவர் தமது முயற்சியை அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொண்டதாகவும், ஆனால் இலங்கைக்கு அங்கு ஏற்பட்ட தோல்விக்கான முற்றுமுழுதான பொறுப்பை தமராவின் தலையில் சுமத்தி அவரை அந்தப் பதவியிலிருந்து வெளியேற்றிவிடத் தற்போது சதி மேற்கொள்ளப்படுவதாகவும் தமராவுக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தனைக்கும் தமரா குணநாயகம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பூரண ஆசீர்வாதத்துடன் அந்தப் பகுதிக்கு நியமிக்கப்பட்ட ஒருவராவார். ஐ.நா.சபையின் பல கிளை அமைப்புகளின் மனித உரிமைகள் பிரிவுகளில் கடமையாற்றிய அனுபவம் மிக்கவர் அவர். முன்னர் ஒரு வேளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட சந்தர்ப்பத்தில் ஐ.தே.கட்சி அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து முறையிடுவதற்கான வாய்ப்பை ஜனாதிபதிக்கு ஏற்படுத்திக் கொடுத்தவரும் அவரே. அத்தகைய தமரா மீதே ஜெனிவாவில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்விக்கான பொறுப்பைச் சுமத்திவிடும் எத்தனங்கள் இன்று முன்னெடுக்கப்படுகின்றன.

தமராவை இந்த விதம் அவரது பதவியிலிருந்து அகற்றிவிடச் சதி மேற்கொள்வோர் நிச்சயமாகத் தமராவை விட அரசியற் செல்வாக்கும் பலமும் மிக்கவர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் கிடையாது.

தமராவுக்கு ஏற்பட்டுள்ள இன்றைய இக்கட்டு நிலை குறித்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பலதரப்பட்ட விமர்சனங்கள் வெளியாகிவருகின்றன. அமைச்சர் ஜீ.எல் பிரிஸை ஒரு கருவியாகப் பயன்படுத்தி தமராவை ஐ.நா அமைப்பிலிருந்து அப்புறப்படுத்தும் சதியில் வெளிவிவகார அமைச்சின் இரு உயர் மட்டப் பிரமுகர்கள் முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களில் ஒருவர் தமராவை விட ராஜதந்திர சேவையில் பல மடங்கு கூடிய அதிகாரமும் அரசின் செல்வாக்கும் மிக்கவர் என்பதுடன் மற்றையவர் ஜெனிவாவின் பதவிச் சுகபோகங்களை நன்கு அனுபவித்த ஒரு பெண்மணி எனவும் தகவல்கள் கசிந்துள்ளன.

எது எவ்வாறன போதிலும் தமக்கு எதிராகச் செயற்படும் அந்தத் தரப்பினரைச் தற்போது தமரா தெளிவாக இனங்கண்டு கொண்டுள்ளதாகவும், தமக்கான பதவிமாற்ற உத்தரவை இரத்துச் செய்துகொள்ளும் முயற்சியில் அவர் தற்போது தீவிரமாக இறங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இடம்பெற்று முடிந்த ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வின் போது கூட தமராவின் மதிப்பையும் பிரபல்யத்தையும் மலினப்படுத்திவிடும் முயற்சியில் அவருக்கு எதிராக அந்தக் குழுவினர் ஈடுபட்டனர். அமர்வில் கலந்து கொண்ட இலங்கைத் தரப்பினரின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக அமைந்ததன் காரணமாக, இலங்கை அரசின் சார்பில் பதிலளிக்கும் முக்கிய பொறுப்பைக் கொண்டிருந்த தமராவுக்கு அந்த மண்டபத்தில் உரிய ஆசனமொன்றில் அமர இயலாத நிலையும் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இத்தனைக்கும் .இலங்கையைத் தாய் நாடாகக் கொண்ட தமரா, இலங்கையின் மதிப்பையும் கௌரவத்தையும் பேணிக் காக்கும் விதத்தில் .இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவிப்பிள்ளை முன்வைத்த குற்றச்சாட்டுக் கருத்துகளுக்குப் பொறுப்புடனும் உறுதியுடனும் பதிலளித்திருந்தார் .

தனது பதவிக்கான பணியை பொறுப்புடன் மேற்கொண்ட தன்னை ஐ.நா. சபையின் இலங்கைக்கான தூதுவர் என்ற பதவியிலிருந்து அகற்றிவிட இலங்கை அரசு மேற்கொண்ட தீர்மானம் தமராவுக்கு கடும் கவலையையும், கோபத்தையும் ஏற்படுத்தியிருந்தது. வெளியுறவு அமைச்ருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலும் தனது கவலையை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு தோல்வி கிட்டியிருந்தாலும்,இலங்கை அரசுக்கு ஆதரவாக தமரா முன்னெடுத்த சாதகமானப் பிரசார நடவடிக்கைகளே அவரது இந்தப் பதவி மாற்றத்துக்கான பின்னணிக் காரணமாக இருக்கக் கூடும் என்பது தமராவுக்கு நெருக்கமான தரப்பினரின் ஊகமாகும். அதேவேளை சர்வதேச ரீதியில் நெருக்கடிகளுக்கு இலங்கை முகம் கொடுக்க நேர்ந்துள்ள இன்றை நிலையில், தனது ராஜதந்திர சேவை ஜெனிவா மனித உரிமைகள் சபைக்கே மிக்க அவசியமானது என்பது தமராவின் நிலைப்பாடு ஆகும் .

வெளிநாடொன்றில் இடம்பெற்ற ஐ.நாவின் வர்த்தக மற்றும் அபிவிருத்திக்கான மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு ஜெனிவாவுக்குத் திரும்பிச் சென்ற வேளையிலேயே தமராவுக்குத் தனது பதவி மாற்றத் தீர்மானம் குறித்தத் தகவல் தெரிய வந்தது.

சர்வதேச ரீதியல் இலங்கை பெரும் இக்கட்டில் சிக்கியுள்ள இந்த வேளையில் ராஜதந்திர மற்றும் வெளியுறவு போன்ற துறைகளில் நீண்ட அனுபவமும் ஆற்றலும் மிக்க தமரா போன்றோரின் சேவை இலங்கைக்கு மிக அவசியமாகும்.

சர்வதேச ரீதியில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிரான போக்கு அதிகரித்து வரும் நிலையில், தமராவின் பதவி மாற்றம் இலங்கை மீது மேலும் அவப்பெயரை உண்டாக்கும். அத்துடன் இலங்கையின் அரசியல் பிரதிபிம்பதிலும் இது மாசுஏற்படுத்தவும் வாய்ப்புண்டு.

ஒரு நாட்டின் ஐ.நாவுக்கான தூதுவர் ஒருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசின் இத்தகைய அரசியல் அதிரடி மாற்றம் செயலுருப்பெறுமானால்,தமராவுக்குப் பதிலாக அந்தப் பதவியை ஏற்பவருடன் சேர்த்து ஒரு பதவிக்கால இடைவெளிக்குள் ஐ.நா அமைப்பில் கடமைபுரிந்த நான்கு பிரதிநிதிகளைக் கொண்டதொரு நாடே இலங்கை, என்ற விபரீதமான பதிவொன்றுக்கு இந்த நாடு முகம் கொடுக்கவும் நேரக்கூடும்.

தற்போது பிரசல்ஸ்ஸின் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுவராகச் செயல்படும் ரவிநாத ஆசிய சிங்க, தமராவுக்குப் பதிலாக ஐ.நா. சபையின் இலங்கைக்கானப் புதிய தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எது எவ்வாறன போதிலும், இலங்கை அரசின் இத்தகைய பழிதீர்க்கும் போக்குக்கு இலக்கான முதலாவது ராஜதந்திரி தமரா அல்ல என்பது , இதற்கு முன்னர் பிரான்சில் இலங்கைக்கான தூதுவராகப் பணியாற்றிவந்த தயான் ஜயதிலகவும் பதவியிலிருந்து அகற்றப்படும் நிலைக்கு முகம் கொடுத்தார். தயான் ஜயதிலகவுக்கு எதிராக அந்த வேளையில் பல குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. மிகுந்த சிரமப்பட்டு தம்மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபிப்பதில் தயான் ஜயதிலக வெற்றி கண்டார். அண்மையில் நாடு திரும்பிய அவர் தம்மீதான குற்றச்சாட்டுக்கள் தவறானவை என ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கிக் கூறித் தெளிவுபடுத்தியதின் பேரில், அவர் தொடர்ந்தும் தமது தூதுவர் பதவியை வகிக்கும் விதத்தில் பிரான்ஸுக்குத் திரும்பிச் சென்றனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் கண்காட்சி - 2012 "சுக வாழ்வை நோக்கி....

# புற்று நோயியல் காட்சிக் கூடம்

இன்றைய நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்குப் போட்டியாக மனிதனின் பிரதான உயிர்க் கொல்லியாக புற்று நோய் மாற்றமடைந்து வருகிறது. புற்று நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையானது இலங்கை உள்ளிட்ட வளர்முக நாடுகளில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கணிசமான புற்றுநோயாளிகள் பிந்திய நிலையிலேயே இனங்காணப்படுவதால் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் சிகிச்சையின் பயனும் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு முழுப்பலனையும் கொடுப்பதில்லை. இதற்குக் காரணம் புற்றுநோய் பற்றியும் அதற்குரிய சிகிச்சை முறைபற்றியும் மக்களிடையே போதிய அளவு விளக்கமின்மையும், விழிப்புணர்வின்மையுமேயாகும். இதன் காரணமாக இன்னமும் பலர் புற்று நோய் என்றால் விரைவில் மரணம் என்பது நிச்சயம் என்று நினைக்கின்றனர். தற்கால மருத்துவ உலகில் பல நவீன சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறியவும் அவற்றை குணப்படுத்தவும் உதவுகின்றன.

**இலங்கையில் ஆண்களில் வாய், தொண்டை களப் புற்றுநோய் அதிகளவிலும் நுரையீரல் புற்றுநோய் இரண்டாவதாக அதிகளவிலும் காணப்படும் அதே வேளை, பெண்களின் மார்பகப் புற்றுநோய் முதலாவதாக அதிகளவிலும் கருப்பை, கழுத்து புற்றுநோய் இரண்டாவதாகவும் வாய், தொண்டை களப் புற்றுநோய் மூன்றாவது அதிகளவிலும் காணப்படுகிறது.**

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஒரு விழிப்புணர்வு நிகழ்வாக மருத்துவக் கண்காட்சியினை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தக் கண்காட்சியானது பல பிரிவுகளைக் கொண்டது. இதில் ஓர் அங்கமாக புற்றுநோயியல் விளங்குகின்றது. புற்றுநோய்ப் பிரிவிலே, புற்றுநோய் பற்றிய அறிமுகமும், இலங்கையில் பிரதானமாகக் காணப்படும் புற்றுநோய்களின் விரிவான பகுதிகளும் இடம்பெறவுள்ளன. புற்றுநோயின் அறிமுகப் பகுதியிலே புற்றுநோய் என்றால் என்ன? புற்றுநோய் எவ்வாறு உருவாகிறது? உலகளாவிய ரீதியிலும், இலங்கையிலும் புற்றுநோயின் பரம்பல் எவ்வாறு காணப்படுகிறது? புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள், புற்றுநோயின் ஆரம்பக் குறிகள். அவற்றை எவ்வாறு ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெறுவது? புற்றுநோய் ஆபத்தை ஏற்படுத்துகின்ற மற்றும் குறைக்கும் உணவுகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

இலங்கையில் ஆண்களில் வாய், தொண்டை களப் புற்றுநோய் அதிகளவிலும் நுரையீரல் புற்றுநோய் இரண்டாவதாக அதிகளவிலும் காணப்படும் அதே வேளை, பெண்களின் மார்பகப் புற்றுநோய் முதலாவதாக அதிகளவிலும் கருப்பை, கழுத்து புற்றுநோய் இரண்டாவதாகவும் வாய், தொண்டை களப் புற்றுநோய் மூன்றாம் நிலையிலும் காணப்படுகிறது.

எனவே, இந்தக் கண்காட்சியில் நாம் வாய்க்குழி தொண்டை களப் புற்று நோய், மார்பகம் மற்றும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் என்பவற்றை பிரதான பகுதிகளாக உள்ளடக்கியுள்ளோம். இந்தப் பிரிவுகளில் குறிப்பிட்ட புற்று நோய்கள் எவ்வாறு உருவாகின்றது. இவை ஏற்படுவதற்கான காரணங்கள், அவற்றின் அறிகுறிகள், இவற்றின் ஆரம்பநிலைகளை எவ்வாறு கண்டறிந்து அவற்றிற்கு எவ்வாறான முறையில் சிகிச்சையை நாடுவது? எவ்வாறு இந்தப் புற்றுநோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது?, இவை எவ்வாறு ஏனைய இடங்களிற்கு பரவிச் செல்கின்றன? போன்ற விடயங்களை விளக்கவுள்ளோம்.

இவற்றை அனைத்துத் தரப்பினருக்கும் விளங்கக்கூடிய வகையில் மாதிரி உருக்கள், மாதிரிப் பொருள்கள், விளக்கப்படங்கள், விளக்கக் குறிப்புக்கள் மற்றும் வீடியோக் காட்சிகளூடாக விளக்கவுள்ளோம். எனவே இந்தக் கண்காட்சியைப் பாடசாலை மாணவர்கள் மாத்திரமின்றி அனைத்து மக்களும் வருகைதந்து பார்வையிட்டு பயன்பெற வேண்டும் என எதிர்பார்க்கிறோம். புற்றுநோய்ப் பிரிவைபப் பார்வையிடுவதன் மூலம் எவ்வாறு புற்றுநோயைத் தடுக்கலாம்?, எவ்வாறு எமது பழக்கவழக்கங்களை மாற்றலாம்?, எவ்வாறு புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து அதற்கு உரிய சிகிச்சை பெறுவதன் மூலம் நீண்ட காலம் வாழலாம் போன்ற அறிவை பொதுமக்கள் பெற்று, அதிகரித்து வரும் இந்தப் புற்று நோய்க்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

■ கி.ஆரூரன்
நான்காம் வருட மருத்துவ பீட மாணவன்

**ஊடக அனுசரணை:** உதயன்

---

■ எஸ்.எஸ்.திருச்செந்தூரன்
முதுகலை மாணவன்
சர்வதேச உறவுகள் கற்கைநெறி

# மேற்கிலிருந்து கிழக்காக நகரும் அதிகாரப் பலம்

21 ஆம் நூற்றாண்டிலிருந்து உலகின் அதிகார பலமானது மேற்கிடமிருந்து கிழக்கு நோக்கி நகர்கின்றது. அதாவது அமெரிக்கா, ஐரோப்பாவிடம் இருந்து உலக அதிகாரப் பலம் சீனா, ஆசியாவுக்கு மாற்றம் பெற்று வருகின்றது. அமெரிக்காவும் ஐரோப்பிய அரசுகளும் அரசியல், பொருளாதார இராணுவ ரீதியில் பலவீனம் அடைந்து செல்கின்றன. மறுபுறம் சீனா ஆசிய நாடுகளும் அரசியல், பொருளாதார இராணுவ ரீதியில் மிகப்பலம் அடைந்து செல்வதே இதற்கான காரணமாகும். இதனால் அமெரிக்காவும் ஐரோப்பிய அரசுகளும் தத்தமது கண்டத்திலும் உலகிலும் பெற்று வந்த செல்வாக்கை இழக்க அந்த இடத்தை சீனாவும் பிற ஆசிய நாடுகளும் பிடித்து வருகின்றன.

இவ்வாறு உலகில் ஏற்பட்ட அதிகார மாற்றம் அமெரிக்காவாலும் ஐரோப்பிய நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வேறு ஒரு வகையில் கூறுவதாயின் தாம் உலக அதிகாரப் பலத்தினை இழந்து விட்டதாக அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர். அமெரிக்காவின் தற்போதைய இராஜாங்கச் செயலாளரான‌க் கிளாரி கிளிங்டன், "பொருளாதார, அரசியல், இராணுவ ரீதியில் ஆசியாவின் பால் உலகின் அதிகாரப் பலம் திரும்பியுள்ளது. இதனால் 2020 ஆம் ஆண்டளவில் உலக அதிகாரப்பலத்தின் புவியீர்ப்பு மையமாக ஆசியா மாற்றம்பெறும்" என 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வொஷிங்டன் நாளிதழுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். இதனால் அமெரிக்கா தான் கொண்டிருந்த உலக அதிகாரத்தினை இழந்து விடுகின்றமை வெளிப்படுகின்றது எனலாம். எனினும் எப்போது இந்த மாற்றம் ஆரம்பமானது என்பது பற்றி அமெரிக்காவும், ஐரோப்பிய அரசுகளும் வெளிப்படுத்தவில்லை. அரசியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி 2008 ஆம் ஆண்டு அமெரிக்கா எதிர்கொண்ட பெரும் பொருளாதார வீழ்ச்சியுடனேயே இந்த அதிகாரமாற்றம் ஆரம்பித்ததாகக் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில், அதாவது 1652 ஆம் ஆண்டு வெஸ்போலியா உடன்படிக்கையிலிருந்து 1948 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உலகில் பல்துருவ உலக ஒழுங்கே காணப்பட்டு வந்தது. இந்தக்காலப் பகுதியில் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன், ஸ்பெயின் போன்ற நாடுகள் வல்லரசுகளாகக் காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1945-1989 ஆம் ஆண்டு வரையான பனிப்போர் காலப்பகுதியில் இருதுருவ உலக ஒழுங்கு உருவானது. இந்தக் காலப்பகுதியில் அமெரிக்காவும் முன்னாள் சோவியத் யூனியனும் உலக வல்லரசுகளாக மாறின. 1989 ஆம் ஆண்டு முன்னாள் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன், அமெரிக்கா ஒற்றை மைய அரசியல் தலைமையினை ஏற்று, உலக அதிகார ஒழுங்கில் கால்பதித்தது. ஆனால் இன்று ஐரோப்பிய அரசுகளும், அமெரிக்காவும் அதிகாரப்பலம் வீழ்ச்சியுற்ற நிலையில் காணப்படுகின்றன. ஜப்பானின் ஒக்கினாத் தீவிலிருந்து அமெரிக்கா தனது விமானப்படைத் தளத்தினை அகற்றி வருகின்றமை, கிழக்காசியாவில் செல்வாக்கு இழந்து வரும் நிலையைக் காட்டுகின்றது. பாகிஸ்தான், ஈரான், வட கொரியா ஆகியவற்றினால் அமெரிக்காவிற்கும், ஐரோப்பாவிற்கும் விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள் போன்றன மேற்கின் சரிவை துரிதப்படுத்துவதாக அமைகின்றது.

இது ஒருபுறமிருக்க, சீனாவும் ஆசிய நாடுகளும் தத்தமது கண்டத்திலும், உலகின் ஏனைய அரசுகளிலும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டன. அந்த நாடுகள் அரசியல், பொருளாதார, இராணுவரீதியில் அடைந்துவரும் அபரீத வளர்ச்சியே இதற்குக் காரணமாக அமைகின்றது. அத்தோடு இவ்வளவு காலமும் மேற்கின் கைகளில் இருந்த சர்வதேச நிறுவனங்களில் ஆதிக்கம் பெற ஆசிய நாடுகள் முயற்சிக்கின்றன. ஐ.நாவின் பாதுகாப்புச்சபையில் ஜப்பான், மற்றும் இந்தியா என்பன நிரந்தர உறுப்புரிமையைக் கோரி வருகின்றன. சர்வதேச நிதி நிறுவனங்களான உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றில் சீனாவும் ஆசிய நாடுகளும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டன. தற்போது இரு நிதி நிறுவனங்களிலும் அமெரிக்கா கொண்டுள்ள 18 வீத மான பங்குகளுக்கு அடுத்தபடியாக 15வீத மான பங்குகளை சீனா கொண்டுள்ளது. இந்த இரு நிதிநிறுவனங்களில் மட்டுமல்லாது ஐக்கிய நாடுகள் சபையிலும் தீர்மானம் மேற்கொள்வதில் ஆசிய நாடுகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. 2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்வுத் திட்டத்தினை ஆசியா நாடுகள் தோல்வியுறச் செய்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. மறுபுறமாகப் பொருளாதார ரீதியாக வும் ஜப்பான், சீனா, என்பன அமெரிக்காவுக்கு அடுத்தபடியான வல்லமையுடன் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் சீனா உலகப் பொருளாதாரத்தின் முதல் இடத்தினை எட்டிவிடும் என 'உலகப் பொருளியல் நோக்கு' சஞ்சிகை சுட்டிக் காட்டியிருக்கின்றது. இந்த இரு நாடுகளும் ஆசியாவிலும் உலக பொருளாதாரத்திலும் அதிக செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

BRIC எனும் பொருளாதார அமைப்பில் ஆசிய நாடுகளான பிரேசில்,சீனா, இந்தியா, ரஷ்யா ஆகியவை ஒன்றிணைந்து செயற்படுகின்றமை ஆசியாவிற்கு மேலும் வலுச் சேர்க்கின்றது. இராணுவ ரீதியாகவும், உலகில் பலம் பொருந்திய நாடுகளின் பட்டியலில் முதல் பத்து இடங்களில் அமெரிக்கா தவிர்ந்த ஒன்பது இடங்களை ஆசிய நாடுகள் பிடித்திருக்கின்றன. உலகில் அதிகூடிய அணுஆயுதப்பலம் பெற்றுள்ள நாடுகளில் ஆசிய நாடுகள் ஐந்து என்பது இந்தப் பிராந்தியத்தின் பலத்தினை இராணுவ ரீதியில் முன்னிலைப்படுத்துகின்றது. 2025 ஆம் ஆண்டளவில் அமெரிக்காவினதும் சீனாவினதும் பாதுகாப்புச் செலவுகள் சமப்பட்டுவிடும் என ஸ்ரொக்கொம் சர்வதேச சமாதான ஆய்வு நிலையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையில் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆசியாவில் மட்டுமல்லாது உலகிலும் அமெரிக்க ஐரோப்பிய அரசுகளின் அதிகாரப்பலம் நலிவுற்றுச் செல்கின்றது. மறுபுறம் சீனாவினதும் ஏனைய ஆசிய நாடுகளினதும் அதிகாரப் பலம் அதிகரித்துச் செல்கின்றது. அரசியல், பொருளாதார, இராணுவரீதியில் அமெரிக்காவும் ஐரோப்பாவும் பலவீனமடைந்து சீனாவும் ஆசிய நாடுகளும் இந்த விடயத்தில் பலமடைந்ததன் காரணத்தால் உலக அதிகாரப்பலம் மேற்கிலிருந்து கிழக்குக்கு நகர்ந்துள்ளது. ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய மூன்று பிராந்திய வல்லரசுகளினதும் முக்கோண வளர்ச்சி இந்த அதிகார மாற்றத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தியது எனலாம்.

இவ்வாறு இனி எழப்போகும் அதிகார பலமானது, ஒற்றை மையத்தைத் தகர்த்து பல்மைய உலக ஒழுங்கை மறுபடியும் கட்டமைக்கப் போகின்றது. அதனை ஆசியாவைச் சேர்ந்த நாடுகள் முன்னெடுக்கப்போகின்றன. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமே ஏழையா?

"பணக்காரன் ஆவது எப்படி?" என்று நண்பர்கள் நான்கைந்து பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான யோசனை சொன்னார்கள்.

ஒருவர் மட்டும் "நமது தேவைகளை எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் பணக்காரன்" என்று பொறிதட்டியதைப் போன்று சொன்னார். அது முற்றிலும் உண்மையே. தேவை பெருகப் பெருக நாம் ஏழைகள். தேவை சுருங்கச் சுருங்க நாம் தனவான்கள்.

பண்டாரம் என்கிற சொல் தமிழிலே துறவிகளையும் குறிக்கும். பணம் வைக்கும் அறையையும் குறிக்கும். எதுவுமற்ற பண்டாரங்களே எல்லாம் உடையவர்கள் என்பது பொருள்.

நமது தேவைகளின் பட்டியல் அனுமார் வால் போன்று முடிவதே இல்லை. எவ்வளவு அதில் நிறைவேற்றினாலும் எப்போதும் அதில் எஞ்சியது இருந்துகொண்டே இருக்கிறது. நாம் வளர வளரத் தேவைகளும் வளர்ந்து கொண்டே போவதால் என்றைக்கும் நாம் ஏழைகளாகவே இருக்கிறோம்.

காந்தியடிகள், வினோபாஜி, காஞ்சி மகாசுவாமிகள் போன்றவர்கள் தங்கள் உணவு, உடை, உறைவிடம், வாழ்க்கை முறை எல்லாவற்றிலும் எப்போதும் எளிமையையே கையாண்டார்கள். அரசியலில் கூட. காமராசர் அவர்கள் மறைந்த பின்னர் அவர் அறையில் தேடியபோது சில்லறைக் காசுகளும், சில வேட்டி சட்டைகளும் மட்டுமே இருந்தன. பலர் திகைத்தனர்.

அறிஞர் அண்ணா முல்வராக இருந்தபோது, அவர் துணைவியார் 'வீடு கட்ட வேண்டும்' என்ற கோரிக்கையைத் தமது பேத்தி மூலம் சொல்லி அனுப்பியதும், பேத்தியிடம் ஒரு காகிதத்தில் வீட்டை வரைந்து அனுப்பியிருக்கிறார் அண்ணா. "இது வீட்டின் மாதிரிப்படமா?" என்று அவர் துணைவியார் கேட்ட போது, "ம்ஹூம்.. இதுதான் வீடு... நம்மால் இதைத்தான் கட்ட முடியும்" என்று சொல்லிச் சிரித்தாராம் அண்ணா. பதவிகள் பலரைப் பண வெறியர்களாக ஆக்கி உள்ளன. ஆனால் அறிவு தெளிந்தவர்கள் அப்படி ஆவதே இல்லை.

உலகச் சிந்தனையாளர்களில் ஒருவரான சோக்கிரட்டீஸ் பற்றிய ஓர் அருமையான செய்தி. சோக்கிரட்டீஸ் நாள் தோறும் கடைவீதிக்குப் போவார். ஒவ்வொரு கடையாக ஏறி இறங்குவார். எல்லாப் பொருள்களையும் உற்று உற்றுப் பார்ப்பார். ஆனால் எதையுமே-என்றைக்குமே வாங்கியதில்லை. தினந்தோறும் இந்தக் காரியம் நடந்தது.

ஒருநாள் அவரது சீடர்கள் சோக்கிரட்டீஸைப் பார்த்து இந்தச் சந்தேகத்தைக் கேட்டு விட்டார்கள். "நாள்தோறும் நீங்கள் கடைவீதிக்குப் போகிறீர்கள்; எதையுமே வாங்குவதில்லை; ஆனால் எல்லாப் பொருள்களையும் உற்று உற்றுப் பார்க்கிறீர்கள் ஏன்?"என்றார்கள்.

"எந்த எந்தப் பொருள்களின் உதவி இல்லாமல் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்கிற பட்டியலைத் தெரிந்து கொள்வதற்காகவே நான் நாள்தோறும் கடைக்குப் போய் பொருள்களைப் பார்த்து வருகிறேன்" என்றார் சோக்கிரட்டீஸ்.

பொருள்களைச் சார்ந்து வாழப் பழகிவிட்டால் நாம் எப்போதும் "இது இல்லை.. இது இல்லை.." என்று இல்லை பாட்டே பாடிக் கொண்டிருப்போம். நம்மிடம் இருப்பது தெரியாது. வடக்கே வாழ்ந்த ஏழைத் துறவி இராம தீர்த்தம் தம்மைப் 'பாதுஷாரம்' என்றே சொல்லிக் கொள்வார். பாதுஷா என்றால் சக்கரவர்த்தி என்று பொருள்.

"நீர் ஏழையல்லவா? உமக்கு இராச்சியம் ஏது? சொத்துகள் எங்கே? நீர் எப்படி பாதுஷா என்கிறீர்?" என்று கேட்டார்கள். "என்னைப் பாருங்கள். நான் ராஜா போன்றுதான் இருக்கிறேன். என் உடைமையை ஏன் பார்க்கிறீர்கள்?" என்பார் பாதுஷாரம்.

நதிக்கரைகளில் ஏழை இந்தியத் தமிழப் பெண்கள் குளிப்பதில் கூட நாம் பெருமிதப்படும் ஒரு விடயம் இருக்கிறது. அற்புதமான விடயம் இது. மாற்றுச் சேலை இல்லாமல் உடுத்திய சேலையுடன் குளிக்கப் போவார்கள். ஆனால் பாதிப் புடவையை உடம்பில் சுற்றியபடி மீதிப் பாதியைப் படிக்கல்லில் நசுக்கித் துவைப்பார்கள். பிறகு துவைத்த பகுதியை உடம்பில் சுற்றிக் கொண்டு மீதிப் பாதியைத் துவைப்பார்கள். பின் பாதிப் புடவையை மரத்தில் கட்டி காற்றில் காய விடுவார்கள். காய்ந்ததும் அதை உடுத்திக் கொண்டு மீதிப் பாதியைக் கையால் உலர்த்தியபடி நடந்து கொண்டே காயவைத்து விடுவார்கள்.

மாற்றுச்சேலை இல்லாத போதுகூட அவர்கள் முகத்தில் உள்ள சிரிப்பென்ன? கேலி என்ன? கிண்டல் என்ன? பத்தாயிரம் மதிப்புள்ள பட்டுப்புடவையைச் சுற்றியுள்ள உம்மணாமூஞ்சி அம்மணிகளிடம் அந்தச் சிரிப்பும் கலகலப்பும் பார்க்கவே முடியாது.

பல்வேறு பொருள்களைச் சார்ந்து வாழ்பவர்கள் ஒரு போதும் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. ரயிலில் மூட்டை முடிச்சுடன் ஓடிவந்து ஏறும் பயணிகளைக் கவனியுங்கள். "அது எங்கே? இது எங்கே?" என்று குடைவார்கள். வியர்க்க விறுவிறுக்க மூச்சிறைக்க விதவிதமான மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு தடுமாறுவார்கள். மாற்றி மாற்றிப் பைகளை, மூட்டைகளைப் பிரித்து எதையாவது குடைந்து குடைந்து தேடிக் கொண்டே இருப்பார்கள். தானும் வசதியாக இருக்க மாட்டார்கள். தங்கள் மூட்டைகளால் பிறரையும் வசதியாக இருக்க விடமாட்டார்கள். குன்றந்தளவான பொருள்களுடன் வருபவர்கள் என்ன ஆனந்தமாகப் பயணம் செய்கிறார்கள்.

அதனால்தான் ரயில் பெட்டிகளில் குறைந்த பொருள்கள் நிறைந்த வசதி'என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

ரயில் பயணத்தின் உண்மை, வாழ்க்கைப் பயணத்துக்கும் பொருந்தும்.



சுகி.சிவம்

# ஆரம்பக் கல்விக்கு வளம் சேர்க்கும் கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஊரே கூடி ஒன்று சேர்ந்து சைவத் தமிழ் பாரம்பரியத்தோடு கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற உயர்நோக்கோடு உருவாகிய கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை குறுகிய காலப் பகுதியில் வளர்ந்து சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு 1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1934 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஏழுவருட காலத்தில் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சி ஊர் மக்கள் பாடசாலை மீது கொண்டிருந்த நம்பிக்கையையும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் பாடசாலையின் வளர்ச்சியையும் குறித்த காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர்; ஆசிரியர் குழாம் ஆற்றிய கல்விச் சேவையையும் வெளிப்படுத்தி நின்றது.




ஞானி

பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் பல்வேறு வகையிலும் சிறந்து விளங்கியதோடு இன்று தமது கல்விக்கு வளம் சேர்த்த அறிவாலயத்தை மறந்து விடாமல் உதவி வருவதை பாடசாலை பரிசளிப்பு விழா முன்வைப்பில் அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆரம்பகாலத்தில் குறித்த சூழலோடு போட்டி போட்டு முன்னேறிய பாடசாலையின் கல்விப் பாரம்பரியம் தொடர்நிலையில் பாதுகாக்கப்படாமல் இடைக்காலத்தில் நலிவடைந்து தற்பொழுது தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையாக செயற்பட்டு வருகின்றது.

பலாலி இராணுவத் தளத்துக்கு அண்மையில் (2கிலோ மீற்றர்) அமைந்துள்ள பாடசாலை இராணுவ நடவடிக்கைகளினாலும் ஷெல்வீச்சுக்களினாலும் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகியது. 1980 களுக்கு பின்னர் குறித்த பாடசாலைச் சூழலில் உள்ள மக்களின் வாழ்க்கை இடம்பெயர்வு மற்றும் அச்சம் நிறைந்த நிலையில் இருந்தமையினால் மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகி பாதுகாப்புக் கருதி வேறுபாடசாலைகளுக்குச் சென்றனர். பாடசாலையும் காலத்துக்கு காலம் இடம் பெயர்ந்ததோடு 1990 ஆண்டு காலப்பகுதியோடு குறித்த சூழலில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையோடு இணைந்து செயற்பட்டது.

இடம்பெயர்ந்து செயற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் ஆளணிப்பற்றாக்குறை மற்றும் வளவசதிகள் பற்றாக் குறை என்பனவற்றினால் பாடசாலையின் செயற்பாடுகளை அதிபர் மட்டுமே முன்னெடுத்து வந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறித்த காலப்பகுதியில் அதிபர் தர நிலையில் உள்ளவர்கள் முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக இல்லாமல் கடமை நிறைவேற்று அதிபர்களே முகாமை செய்து வந்தனர். அந்த நிலையே இன்றுவரை காணப்படுகின்றது.

> பாடசாலைக்கான வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கல்வித்திணைக் களத்துடன் 'யுனிசெவ்', 'ஜீ.ரி.இசற்' போன்ற அமைப்புக்களும் காலத்தின் தேவையை அறிந்து பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகின்றன.

பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் வீ.கந்தையா, எஸ்.முருகுப்பிள்ளை, ச.சிவக்கொழுந்து, பொ.திருமேனி, எஸ்.சீவரத்தினம், மு.இராசநாயகம், இ.சிவஞானசுந்தரம், எஸ்.ஏ.யோகராசா, திருமதி த.நடராசா 2001.05.04 ஆம் திகதியில் இருந்து தற்போதைய அதிபர் த.உதயநாதனும் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். அதிபர்களின் சேவை நன்றியறிதலுடன் பாடசாலைச் சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றது.

பாடசாலைக்கான வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கல்வித்திணைக்களத்துடன் 'யுனிசெவ்', 'ஜீ.ரி.இசற்' போன்ற அமைப்புகளும் காலத்தின் தேவையை அறிந்து பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகின்றன.

தற்பொழுது மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து வருவதோடு ஆசிரியர் ஆளணியும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆரம்பப் பாடசாலையாக தற்பொழுது செயற்பட்டுவரும் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கல்வி வளவசதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருப்பதோடுஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான கவி நிலையுடன் பாடசாலை செயற்பட்டு வருகின்றது.

பாடசாலையின் ஆரம்ப காலம் மிக உயர் நிலையில் காணப்பட்ட போதிலும் அண்மைக் கால வளர்ச்சிப் போக்கு சராசரிக்குக் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளை வெளியிடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். இந்த வகையில் பாடசாலையில் ஆண்டு தோறும் தரம் ஒன்று மாணவர் அனுமதி ஒற்றை இலக்க எண்ணிக்கையிலேயே அமைந்து காணப்படுகின்றது.

பாடசாலையின் பழைய மாணவனும் கிராமத்தின் மூத்த பிரஜையுமான ஓய்வு பெற்ற பொதுச்சுகாதார பரிசோதகர் பொ.கந்தையா (வயது 88) கருத்து தெரிவிக்கையில்:


"பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கிராம முன்னோடிகள் கூறுவதைக் கேட்டு ஊரே ஒன்று கூடி கருமங்களை நிறைவு செய்தன. இன்று அந்த நிலை மாறிவிட்டது. இன்று பிள்ளைகளை தூர இடங்களுக்கு அனுப்பி கல்வி கற்பிக்க வேண்டும் என்ற மாயத் தோற்றம் உள்ளூர் பாடசாலைகளை மதிக்காத, புறக்கணிக்கின்ற நிலையை உருவாக்கியுள்ளது. ஊர்மக்கள் மத்தியில் மீண்டும் உள்ளூர் பாடசாலைகளை உயர்வடையச் செய்ய வேண்டும் என்ற கருத்தியல் மாற்றம் ஏற்படாத வரையில் கிராமப்புறப் பாடசாலைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும். இந்த நிலையை மாற்றி அமைப்பதில் கல்வி அதிகாரிகளும் தமது கடமைப்பொறுப்புக்களை உணர்ந்து ஆரம்பப் பாடசாலைகளை பாதுகாக்க முன்வரவேண்டும்" எனக் கூறினார்.

கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற புதிய கருத்தோற்றமும் அதற்கான முன்னெடுப்புக்களும் தற்பொழுது முனைப்புக் கொள்ளத் தொடங்கியுள்ளது. இந்த வகையில் சில கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அச்சுவேலிப் பகுதியில் உள்ள ஐந்து பாடசாலைகள் இந்த வகையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஒன்று வளலாய் சுப்பிரமணிய வித்தியாலயம். பாடசாலைகளின் வளர்ச்சியில் பாடசாலைச் சமூகம் அக்கறை கொள்ள வேண்டும். அந்த வகையில் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் மேலும் வளரவேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீனாட்சி அம்மன் ஆலய புற்றினுள் சிவலிங்கம்



அம்பாறை,மே14

அம்பாறை, மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயப் பகுதியில் பாம்புப் பொந்துக்குள் திடீரென சிவலிங்கம் ஒன்று தோன்றியது.

அம்மன் ஆலய வளாக பாம்புப் புற்றுக்குள் சிவலிங்கம் இருப்பதாக தான் கனவு கண்டதாக அக்கரைப்பற்றிலுள்ள கா.மல்லிகா என்ற பெண் கூறியதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் அதனை பார்வையிட்டனர்.

கல்லாறைச் சேர்ந்த குடைச்சாமி சித்தரின் உதவியுடன் புற்றினுள் இருந்த சிவலிங்கத்தை எடுத்து ஆலயத்தினுள் பிரதிஸ்டை செய்தனர்.

இந்த சிவலிங்கத்தை ஏராளமான மக்கள் பார்வையிட்டு வழிபாட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# விவசாயிகளுக்கு உரமானியம் இதுவரை வழங்கப்படவில்லை

## அம்பாறை மாவட்ட விவசாயிகள் கவலை

அம்பாறை,மே14

அம்பாறை மாவட்டத்தின் சவளக்கடை கமநல சேவை நிலையத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு சிறு போகத்துக்கான உரமானியம் இதுவரை வழங்கப்படவில்லை என்று பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விதைப்பு வேலைகள் நிறைவடைந்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் உரம் வழங்கப்படாததால் களைநாசினி விசிறப்பட்ட நெற்பயிர்கள் கருகி அழியும் நிலையேற்பட்டுள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டதற்கு இணங்க விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்படவில்லை.**

இதேவேளை மஹிந்த சிந்தனையின் படி 50 கிலோ கிராம் உரமூடை ஒன்று 350 ரூபாவுக்கு வழங்கப்படவேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 1197 ரூபா விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டும்.

எனினும் பிரதேச விவசாய அமைப்புக்களால் 1400 ரூபா வீதம் அறவிடப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

நுவரெலியா,மே14

வஸ்கமுவ தேசிய வனப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் வன பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்தவர் பக்கமூன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கமூன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## தம்புள்ள விவகாரம் கையெழுத்து வேட்டை

காத்தான்குடி,மே14

தம்புள்ள ஜும்-ஆ பள்ளிவாசல் அதே இடத்தில் இருக்க வேண்டும் என்றும் இலங்கையில் சகல சமயத்தவர்களினதும் மத உரிமைகளை பாதுகாக்கக் கோரியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றை அனுப்புவதற்காக காத்தான்குடியிலுள்ள ஜும்-ஆ பள்ளிவாசல்களில் பொதுமக்களிடமிருந்து கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் ஜனாதிபதிக்கு குறித்த கோரிக்கைகளை முன்வைத்து அனுப்பவுள்ள இந்த மனுவில் பொதுமக்கள் ஆர்வத்தோடு கையொப்பங்களை இட்டனர்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பான துண்டுப்பிரசுரமொன்றும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

## மிருகங்களின் உடற்பாகங்களை விற்பனை செய்தோர் கைது

மட்டக்களப்பு,மே14

மிருகங்களின் உடற்பாகங்களை விற்பனை செய்து கொண்டிருந்த இரண்டு இந்திய நபர்களை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து சட்டவிரோதமாக வியாபார நடவடிக்கையிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளதுடன், மிருகங்களின் உடற்பாகங்களையும் விற்பனை செய்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (ச)



சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## பொலிஸ் காவலரண் அகற்றப்பட்டு பஸ் நிலையம் இயக்க நடவடிக்கை

மட்டக்களப்பு,மே14

மட்டக்களப்பு விநாயகபுரம் பஸ் நிலையத்தில் இயங்கி வந்த பொலிஸ் காவலரண் அகற்றப்பட்டு குறித்த பஸ் நிலையத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன தெரிவித்தார்.

கடந்த 20 வருடங்களாக குறித்த பஸ் நிலையமானது பூட்டப்பட்ட நிலையிலிருந்த அதேவேளை, அந்தக் கட்டடத்தில் பொலிஸ் காவலரண் ஒன்று இயங்கி வந்துள்ளது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன மேற்கொண்ட முயற்சியின் காரணமாக குறித்த பொலிஸ் காவலரண் அங்கிருந்து அகற்றப்பட்டு பஸ் நிலையம் மீளவும் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த பஸ் நிலையத்தின் புனர்நிர்மாணப் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவின் நிதியின் கீழ் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பஸ் நிலையம் அக்கரைப்பற்று பேருந்துசாலையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவுடன் இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்கு மாகாண பிரதான பிராந்திய முகாமையாளர் எம்.என்.எச்.எம்.நசீர், கல்முனை பிராந்திய முகாமையாளர் எஸ்.கனகசுந்தரம், அக்கரைப்பற்றுசாலையின் உதவி முகாமையாளர் எம்.ஐ.எம்.ஹனீபா உட்பட பலர் பஸ் நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டனர். (ச)

## காட்டுக் குரங்கு தாக்கி பலர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு,மே14

மட்டக்களப்பு, வாழைச்சேனை துறைமுகப் பகுதியில் காட்டுக் குரங்கு ஒன்றின் தாக்குதலால் பலர் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதி பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தக் குரங்கு வாழைச்சேனை, ஆற்றங்கரைப் பகுதியில் உள்ள கண்ணாக் காட்டில் வசித்து வருகின்றது.

நாசிவன்தீவு கிராமத்துக்குச் செல்லும் பொது மக்கள், கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாண வர்கள், மீனவர்கள், பாதசாரிகள், ஆசிரியர்கள் எனப் பலரும் இந்தக் குரங்கின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையம், வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் கோறளைப்பற்று தவிசாளர் ஆகியோரிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் குரங்கின் தொல்லையில் இருந்து தங்களைக் காப்பாற்றுமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# மக்கள் எழுச்சியால் தான் அரசை மாற்ற முடியும்

## மட்டக்களப்பில் ரணில் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே14

மக்கள் எழுச்சியினால் தான் அரசை மாற்ற முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்கப்பு மாவட்ட பிரதேச முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சியடைய வேண்டும். அப்போது தான் அரசை மாற்ற முடியும். அரசை மாற்றும் நேரம் தற்போது வந்துள்ளது. இதை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை கிழக்கு மாகாணத்தில் வளர்ப்பதற்கு இங்குள்ள ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடி மட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற வேண்டும். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் அடையாளம் இல்லாமல் போய் விட்டது. ஒரு காலத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் முஸ்லிம் முக்கியஸ்தர்கள் இருந்துள்ளனர். இதே போன்றுதான் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு தேர்தல் தொகுதியிலும் முக்கியஸ்தர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்துள்ளனர்.

எதிர்காலத்தில் கிராம மட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை வளர்த்து அரசை மாற்ற நாம் அனைவரும் அணி திரளவேண்டும்.

கிழக்கு மாகாண சபை தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்ய வேண்டும். இதற்காக கட்சிக் கிளைகளை புனரமைத்து கட்சியை வளர்க்க வேண்டும்.

ஒருபோதும் ஐ.தே.க கிழக்கு மாகாண சபை கலைப்புக்கு எதிராக நீதிமன்றம் செல்லாது. எந்தத் தேர்தலையும் நாம் சந்திப்பதற்கு ஆயத்தமாகவுள்ளோம். வாக்களிப்பு நிலையங்கள் தோறும் ஐ.தே.க. ஆதரவாளர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு பின்னர் கிராம ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக கிளைகளை அமைக்க வேண்டும்- என்றார். (ச)



## ஆட்டிறைச்சி கைப்பற்றப்பட்டது

கண்டி,மே14

ஹற்றன், டயகம நகரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட ஆட்டிறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது.

40 கிலோ கிராம் ஆட்டிறைச்சி கைப்பற்றப்பட்டதாக தலவாக்கலை பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

ஆட்டிறைச்சியுடன் அதனை கொண்டு சென்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வழக்கமான காரியங்களை மட்டுமல்லாது குடும்ப சுபிட்சத்தை அதிகப்படுத்தக் கூடிய சீர்திருத்தங்களையும், வசதிகளையும்கூட செய்து கொள்வீர்கள். சில விடயங்களைத் திட்டமிடுவீர்கள். ஆனால், தாமதமான செயற்பாடுகளாகவே இருக்கும். உறவினர்களின் சந்திப்புகளால் மன உற்சாகம் கூடுதலாகும். பண நிலையில் பற்றாக்குறையே.

**இடபம்:** எதிர்ப்புகளை முறியடிக்கும் வகையில் உங்களின் செயற்பாடுகள் இருக்கும். உங்கள் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாக இருந்த போதும், மனதில் கவலைகள் இருக்கவே செய்யும். உடன்பிறப்புகளால் உதவிகளை எதிர்பார்க்கலாம். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியையும், செலவையும் கொடுக்கும்.

**மிதுனம்:** ஓய்வு எடுக்க எண்ணியபோதும், ஓய்வெடுக்க முடியாத வகையில் பணிகள் இருக்கும். சில வகையில், மனக்குறைகள் இருந்த போதும் சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. பண விடயமாக அலைச்சல் ஒன்று இருக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. குழந்தைகளிடம் அன்பான அணுகுமுறையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

**கடகம்:** மெதுவாகச் செயற்பட்டபோதும், அனைத்துக் காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். சில நபர்களின் செயற்பாடுகளில் அதிருப்தி ஏற்பட்டபோதும் வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள். தொழில் சம்பந்தப்பட்ட சந்திப்புகள் நிகழும். வெளியில் செல்லும்போதோ அல்லது பிரயாணங்களை மேற்கொள்ளும்போதோ கூடுதல் கவனம் தேவை.

**சிங்கம்:** உங்களுடைய காரியங்களில் முழுக் கவனத்துடன் செயற்படுவீர்கள். செய்தும் முடிப்பீர்கள். உங்களின் மகிழ்ச்சிகள் அடுத்தவர்களின் மனநிலையைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள். பெரியோரின் வார்த்தைகளுக்கும் மதிப்புக் கொடுங்கள். குடும்ப வகையில் மருத்துவ செலவுகள் இருக்கும்.

**கன்னி:** உங்கள் மனதில் போட்டி, பொறாமைகள் கூடுதலாக இருக்கும். போட்டி, பொறாமைகள் அவசியம்தானா என்பதனை யோசித்துக் கொள்ளுங்கள். முன் இருக்கும் பணிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுங்கள். உறவினர் ஒருவரின் தவறான தகவலால் அலைச்சல் இருக்கும். கடனாக கொடுத்த பணம் ஒன்று திரும்ப வரும்.

**நாளை**

வைகாசி 02 செவ்வாய்க்கிழமை 15.05.2012
திதி: தசமி மு.இ 09.26 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ 01.33 வரை
சுபநேரம்: 10.23- 11.53 வரை
ராகு காலம்: 02.53- 04.23 வரை

**துலாம்:** மனநிலை, உடல்நிலையில் உற்சாகம் கூடுதலாகும். புதியவர்களின் சந்திப்பும் ஏற்படும். சில விவகாரங்களை பற்றி, கூடுதலான சிந்தனை காணப்படும். புதிய தொழில் முயற்சி ஒன்றுக்காக, சிலரின் சந்திப்புகளும், அவர்களிடம் ஆலோசனையையும் பெறுவீர்கள். நண்பர்களின் பழக்க வழக்கங்களில், கவனம் இருக்கட்டும்.

**விருச்சிகம்:** உற்சாகமான சூழ்நிலை என்றபோதும் சில வகையில் மன சங்கடங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும். பெரிதுபடுத்திக் அதிகமாக யோசிக்க வைத்தாலும், அது உங்களின் நன்மைக்காகத்தான் என்பதனை மறந்து விடாதீர்கள். பயணங்களில் கவனம் தேவை. மாலையில் நண்பர் ஒருவரின் சந்திப்பு நிகழும்.

**தனுசு:** சந்தோஷத்துக்காக கணக்கில்லாமல் செலவுகள் மேற்கொண்டு, பின் கவலைப்பட்டுக் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில், தடை தாமதங்களை சந்திக்கலாம். முக்கியஸ்தர் ஒருவரின் நட்பு, மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும். வீட்டில், கூட்டு முயற்சியில் ஒரு காரியத்துக்கு திட்டம் போடுவீர்கள். எதிர்பார்த்த தகவல் ஒன்று, மாலைக்கு மேல் கிடைக்கும்.

**மகரம்:** ஓய்வை உடம்பு விரும்பியபோதும், மனம் சில பணிகளைச் செய்து முடிக்க எண்ணும். பழைய நண்பர் ஒருவரின் சந்திப்பு நிகழும். பல விடயங்களை நினைவுபடுத்திக் கொள்வீர்கள். வீடு சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு, தீவிர சிந்தனை மேற்கொள்வீர்கள். பெற்றோரின் வகையில் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** காலைப்பொழுதில் தேவையற்ற அலைச்சல் ஏற்பட்டபோதும், மாலையில் உபயோகமான விடயங்களை மேற்கொள்வீர் கள். இல்லறத் துணையோடு, வேடிக்கையாக சில விடயங்கள் பேசப் போய் வீண் சச்சரவை ஏற்படுத்திவிடக் கூடிய சூழ்நிலையே. புதிய தொழில் முயற்சிக்கான உங்களின் செயற்பாடுகள் வெற்றி அளிக்கும்.

**மீனம்:** தாமதமாகிக் கொண்டிருந்த காரியங்களை விரைவாக, வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பண நிலையில், சில மாற்றங்களை செய்து கொள்வீர்கள். குடும்பத்தில், தன்னை யாரும் புரிந்து கொள்ளவில்லையே என, அடிக்கடி மன சஞ்சலமடைவீர்கள். முதலில் நீங்கள் உங்களைப் புரிந்து கொள்ளுங்கள். நண்பர்களின் தொடர்புகள் தொந்தரவு தரலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 6 | | | | 2 | 9 | |
| | 9 | | | | 7 | 1 | | 4 |
| 7 | | | 5 | | 4 | 6 | | |
| 9 | | 5 | 4 | | | 3 | | |
| | | | 1 | | 3 | | | |
| | | 2 | | | 9 | 8 | | 1 |
| | | 9 | 6 | | 1 | | | 8 |
| 1 | | 8 | 9 | | | | 2 | |
| | 6 | 4 | | | | 7 | 1 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 9 | 2 | 4 | 5 | 1 | 6 | 3 |
| 5 | 2 | 4 | 6 | 1 | 3 | 9 | 7 | 8 |
| 1 | 6 | 3 | 9 | 7 | 8 | 5 | 4 | 2 |
| 4 | 8 | 5 | 7 | 3 | 1 | 6 | 2 | 9 |
| 7 | 1 | 6 | 8 | 2 | 9 | 4 | 3 | 5 |
| 3 | 9 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 1 |
| 2 | 5 | 8 | 1 | 6 | 4 | 3 | 9 | 7 |
| 9 | 4 | 1 | 3 | 8 | 7 | 2 | 5 | 6 |
| 6 | 3 | 7 | 5 | 9 | 2 | 8 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீங்கா நினைவலைகளில்....

**இரண்டாம் ஆண்டு** | **நான்காம் ஆண்டு**





துளிராய் 17.01.1989 | துளிராய் 14.02.1986

விதையாய் 27.05.2010 | விதையாய் 14.05.2008

செல்வன்
**சண்முகநாதன் சுஜீவன்**
(பொறியியல் பீட மாணவன்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

செல்வன்
**சண்முகநாதன் சஞ்சீவன்**
(மாணவன், கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி,
திருவையாறு மகா வித்தியாலயம்)

நேற்று எம்முடன் இருந்து
நெடுந்தூரம் காற்றிடை சென்றீரோ?
ஆற்றிடா துயரத்தால் அரற்றுகிறோம்—எம் செல்வங்களே
வற்றிடா நதியாய் எமக்கு அன்பு காட்டி
விழிநீர் சொரிய விதிவசத்தால் சென்றதெங்கே?
விம்மியழுதபடி விழிகளில் உமை சுமந்தபடி
நாம் ..........

முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
66/2, திருவையாறு, கிளிநொச்சி.

(18169) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெவ்வேறு விபத்தில் மூன்று பேர் சாவு

கொழும்பு,மே14

நாட்டில் இடம்பெற்ற வெவ்வேறு வாகன விபத்துக்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் காயமடைந்தும் உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

மெதிரிகிரிய பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி வாய்க்காலில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பஸ் விபத்து ஒன்றின் போது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை மதுருகிரிய பிரதேசத்தில் டிராக்டர் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பெண் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு,வெள்ளவத்தை, பாமன்கடை பிரதேசத்தில் ஓட்டோ - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.-என்றனர். அண்மைக் காலமாக நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு,மே14

தெமட்டகொட, கிராண்ட்பாஸ் பகுதியில் ஹெரோயின் விற்பனை செய்த நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்த இரண்டு கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)



ஜனசரண மற்றும் ஈ.ஏ.பீ ஊடக வலையமைப்பு ஆகியன இணைந்து இருதய நோயினால் பாதிக்கப்படைந்த நோயாளிகளைச் சுகப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் அறிமுகத்தை வலையமைப்பின் தலைவர் சோமா எதிரிசிங்ஹ மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவிடம் வழங்கினார். (14)

## 1500 ரூபா அபராதம்

தொலைபேசி அபகரிப்பு தொடர்பாக நீதிமன்றில் முன்னிலையான நபர் ஒருவரின் கைத்தொலைபேசி நீதிமன்ற அறையில் ஒலித்ததால் அவருக்கு 1500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கந்தப்பளையை சேர்ந்த நபர் ஒருவருக்கே நீதிமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச் சாட்டில் நீதிவான் கனிஷ்க விஜேரட்ண இந்த அபராதத்தை விதித்துள்ளார். காலி முகத்திடலில் 8 வயது சிறுவனொருவன் தனது பெற்றோருடன் நடந்து சென்று கொண்டிருந்த போது இந்தச் சிறுவனிடமிருந்து 20,000 ரூபா பெறுமதியான தொலை பேசியை அபகரித்ததாக இந்நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைக்க அரசு திட்டம்


கொழும்பு,மே14

இலங்கையில் உள்ள மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அரச உயர் மட்டத்தில் தற்போது விசேட பேச்சு நடைபெற்று வருகின்றது. இந்தப் பேச்சில் அரசின் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சகல மாகாணங்களுக்கும் கடல் பிரதேசம் ஒன்று வழங்கப்படும் வகையில் மாகாண எல்லைகள் பிரிக்கப்படவுள்ளன. அத்துடன் அனைத்து மாகாணங்களுக்கும் மலையக பிரதேசங்களின் பகுதிகளும் வழங்கப்பட உள்ளன. நிலைத் தொடர்பற்ற வகையில் இந்த எல்லைகள் நிர்ணயிக்கப்பட உள்ளன. நாட்டின் தேசிய வளங்கள் அனைத்து மாகாணங்களுக்குச் சமமான வகையில் பகிரப்படுவதற்கும், மாகாணங்களுக்கு இடையில் காணப்படும் சிக்கல் நிலைமைகளை குறைப்பதற்காகவும் இந்த புதிய எல்லை நிர்ணயிப்பு மூலம் தீர்வு கிடைக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது.

**சகல மாகாணங்களுக்கும் கடல் பிரதேசம் ஒன்று வழங்கப்படும் வகையில் மாகாண எல்லைகள் பிரிக்கப்படவுள்ளன.**




இவ்வாறு எல்லைகளில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் இன ரீதியான பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு வங்கியில் வைப்பு

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு ரூ.446 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு,மே14

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் அரசினால் சமுர்த்தி பயனாளிகளுக்காக அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு 15 லட்சத்து 83 ஆயிரத்து 961 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு வேலைத்திட்டம் மற்றும் கடந்த வரவு - செலவுத்திட்ட யோசனைகள் என்பவற்றுக்கு அமைவாக அதிகரிக்கப்பட்ட இந்த சமுர்த்தி நிவாரணம் நாட்டின் 1,044 சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஊடாக புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு கணக்குப் புத்தகங்கள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் சமுர்த்தி நிவாரணம் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்கும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்கும் புதிதாக பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. இதன் பிரகாரம் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்காக மட்டும் சமுர்த்தி பயனாளிகளுக்காக 446 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனைகளின் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்து சமுர்த்தி பயனாளிகளினதும் சமுர்த்தி நிவாரணத்தை அதிகரிப்பதாக அளித்த வாக்குறுதிக்கு அமைய புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அற்கமைய ஏப்ரல் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரணம் சமுர்த்தி பயனாளிகளின் வங்கிக் கணக்குக்கு வைப்புச் செய்யப்படுவதன் ஊடாக தமக்கு வேண்டிய பணத்தை மட்டும் பெற்றுக்கொள்ள பயனாளி களினால் முடியும். இதன்மூலம் எதிர்கால முதலீட்டுக்காக பயன்பெறவும் பண சேமிப்பு பழக்கத்தை பயனாளிகள் மத்தியில் ஏற்படுத்தவும் முடியும் .

இதுவரை சமுர்த்தி நிவாரணமாக 250, 350, 375, 415, 575 மற்றும் 615 ரூபா என்ற வகையில் வழங்கப்பட்ட சமுர்த்தி உதவிகள் பின்னர் 750 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதுடன் 900 ரூபா உதவி தொகை 1,200 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது எனவும் 1,500 ரூபா உதவித் தொகை அதேயளவில் வழங்கப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். (ச)

# சுதந்திரக் கட்சியின் அறிக்கை அடுத்த வாரம் கையளிப்பு

கொழும்பு,மே14

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அறிக்கை அடுத்த வாரத்தில் கையளிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த வாரம் கூடி கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கூட்டணி கட்சிகளின் யோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் ஏற்கனவே ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான தமது யோசனைகளை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழ்ப் பெண் அரசியல் கைதியைப் பொறுப்பேற்க எவருமில்லை

## மீண்டும் சிறைச்சாலையில் தஞ்சமடைந்த அவலம்

கொழும்பு,மே14

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி வெலிக்கடைச் சிறையில் கடந்த நான்கு வருடங்களாக தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ்ப் பெண் ஒருவர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் அவரைப் பொறுப்பேற்க எவரும் இல்லாததால் மீண்டும் சிறைச் சாலைக்கே அனுப்பி வைக்கப்பட்ட பரிதாப நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, செங்கலடியைச் சேர்ந்த சிவராணி சந்திரகுமார் (வயது 30) என்ற பெண்ணுக்கே இந்தப் பரிதாபம் நிகழ்ந்திருக்கின்றது.

2008 ஓகஸ்ட் 29 ஆம் திகதி குடும்பக் கஷ்ட நிலை காரணமாக கொழும்பில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டக்களப்பிலிருந்து பஸ்ஸில் வந்துகொண்டிருந்த போதே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர், வெலிக்கடை சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட் டிருந்தார். கடந்த நான்கு வருடங்களாக சிறையில் சித்திர வதைக்கும் மன அழுத்தங்களுக்கும் உள்ளாக் கப்பட்ட இவர், அதனால் தற்போது ஒரு மனநோயாளியாகியிருப்பதாக இவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்த நிலையில் கடந்த 27 ஆம் திகதி இவர் கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே அவரை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. அவரைப் பொறுப்பேற்பதற்கு எவரும் முன்வராததால் அவர் மீண்டும் சிறைச்சாலைக்கே அனுப்பப்பட்டார்.

இந்நிலையில் கடந்த 8 ஆம் திகதி குறித்த பெண்ணை [illegible] போது அவரது மனோநிலையைக் கருத்திற்கொண்டு அங்கொடை மனநோயாளர் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும் அவரது நலன்களைக் கவனிப்பதற்கு யாரும் முன்வராமையால் அவரை அனுமதிக்க மருத்துவமனை வட்டாரம் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவர் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். மட்டக்களப்பு, செங்கலடியிலுள்ள அவரது உறவினர்களைக் கண்டுபிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

எனவே குறித்த இந்தப் பெண் இயல்பு நிலைக்குத் திரும்பி மன நலத்துடனும் வாழ்வதற்கு சமூக பொதுநல அமைப்புகள், மனிதாபிமான தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டுமென அரசியல் கைதிகளின் வெலிக்கடை பெண்கள் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Herbal Health Care Centre


யாழ்ப்பாணத்து சித்தமருத்துவமுறைகள், இந்தியா கேரளா ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

தலைமுடியுதிர்தல், முகப்பருக்கள் ஏற்படல், பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் ஞாபகமறதி, கிரகித்தலில் ஏற்படும் பாதிப்புகள், வெண்குஷ்டம் (Leucoderma), மூட்டுக்களில் ஏற்படும் வீக்கம், நடக்க முடியாத நிலைமை, முள்ளந்தண்டுப் பாதிப்பு, பாரிசவாத நோயாளிகள், நாட்பட்ட ஒற்றைத் தலைவலி, வயிற்றுப்புண், ஈரல் நோய்கள், புற்றுநோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டல், நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் கால், கை விறைப்புத் தன்மை, இருதய அடைப்பு (அஞ்சியோபிளாஸ்டி அல்லது பைபாஸ் சிகிச்சை செய்ய முடியாத நிலையில் 100-150 நாள்கள் சிகிச்சையில் குணம் கிடைக்கிறது), புறஸ்ரேற் பாதிப்புகள் போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 2222537, 0750413579.

**Herbal Health Care Centre**
65, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (16.04.2012) திங்கட்கிழமை சிவபதப் பேறடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**சபாபதி பாஸ்கரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.05.2012) திங்கட் கிழமை முற்பகல் 9 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் - எதிர்வரும் (16.05.2012) புதன் கிழமை முற்பகல் 11 மணி யளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

23, கண்ணாபுரம்,
வில்லூன்றி பிள்ளையார்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 8449293

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
**சிவயோகம் சிதம்பரப்பிள்ளை**
(கனகம்மா)
(குடாரப்பு நாகர்கோயில்)
தோற்றம்: 20 ★ 12 ★ 1920
மறைவு : 14 ★ 04 ★ 2012



கடந்த (14.04.2012) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் மரணச் செய்தி அறிந்து வருகை தந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (14.05.2012) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சாரையடி வீரபத்திரர் கோயில் அந்தியேட்டி மடத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்.

## பிரேரணைகளை அனுப்புமாறு தெரிவிப்பு

வடமராட்சி, மே 14

பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்க யாழ். மாவட்ட சமாசப் பொதுக் கூட்டத்திற்கான பிரேரணைகளை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச இணைச்சங்கங்களை சமாசத்தின் செயலாளர் பொ.கமலநாதன் கேட்டுள்ளார்.

சமாசத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## துண்டி மயான எல்லை மீளமைப்பு

கொழும்புத்துறை, மே 14

கொழும்புத்துறை துண்டி இந்து மயான எல்லைகளை மீளமைக்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை யாழ்.மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாநகர சபை அதிகாரிகள் கடந்த வாரம் இந்த மயானப்பகுதியை சென்று பார்வையிட்டார்.

மயானத்தைச் சுற்றி முன்னர் அமைக்கப்பட்டிருந்த சுவர்கள் முழுவதும் போர் சூழலில் சேதமடைந்திருந்தன. இதனையடுத்துத் தற்காலிக வேலிகள் அமைப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மயானத்துக்குச் சடலங்களை எடுத்துச் செல்வோர் இளைப்பாறும் மயானமடம் முற்றாக சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-135)

## உபயகதிர்காம வீதி சேதத்தால் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மே 14

மந்திகையில் இருந்து உபயகதிர்காமம் செல்லும் வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த வீதி அம்பன், குடத்தனைக்குச் செல்லும் பிரதான வீதி என்பதால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களும், மணல் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களும், வல்லிபுர ஆலயத்துக்குச் செல்லும் வெளி மாவட்ட உல்லாசப்பயணிகளும் நாளாந்தம் நூற்றுக் கணக்கில் இதனூடாகப் பயணிக்கின்றனர்.

குறிப்பாக கனரக வாகனங்களின் போக்குவரத்து இந்த வீதியின் ஊடாக அதிகரித்தமை காரணமாக வீதி மேலும் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இந்த வீதி குன்றும் குழியுமாக காணப்பட்டு சில மாதங்களின் முன்னரே திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் முறையற்ற திட்டங்களற்ற திருத்தச் செயற்பாடுகளால் வீதி மீண்டும் அதே நிலைமையையே எதிர்கொண்டுள்ளது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து கனரக வாகனங்களின் பாவனையைக் கட்டுப்படுத்தி வீதியை உரிய முறையில் சீர்ப்படுத்தித்தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14-8)


# SPOKEN ENGLISH COURSE

5 மாதங்களில் ஆங்கில மொழியினை சரளமாக பேச நம்பிக்கையான நிறுவனம் E.CITY

**SPOKEN ENGLISH COURSE**

தொழில் புரிபவர்களுக்கான மாலை நேர பாடநெறி. திங்கள் / புதன் தினங்களில் மாலை 6.00 மணி முதல் 7.30 மணிவரை

ஆரம்பம்: 15.05.2012
மாலை 5.30 மணி

தொ.இல. 0774924166.

இடம்: குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.






உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing


## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 24 ★ 07 ★ 1932

ஆண்டவன் அடியில் 14 ★ 04 ★ 2012

அமரர்

**பொன்னையா செல்லத்துரை**

கடந்த 14.04.2012 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் பொன்னையா செல்லத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.05.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்பத்தாருடன் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டோர்க்கும் அவரது மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வபோக பவனம்,
நுணண்டி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்

குடும்பத்தினர்.


விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

DMI COMPUTER EDUCATION

Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Master Dip. in Multimedia & Animation
2D & 3D Animation
JAVA AutoCAD

Video Production & Multimedia
Int. to Digital Video, Adobe Premiere CS 5, Particlelllusion, Photoshop CS5
Pinnacle Studio HD 15, COOL 3D Studio, Adobe After Effects, & Nuendo,

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி. | சாவகச்சேரி | |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, | M.M.V. வீதி, | No.174, கண்டி வீதி. HNB அருகில் | NSB அருகில். |
| Tel.: 021-222 4403 | Tel. : 021-226 2470 | Tel.:021-227 0243 | Tel.:021-224 1970 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இலங்கையின் தமிழினப் படுகொலை சென்னையில் மே 20 இல் பேரணி

## சுயாதீன விசாரணையை வலியுறுத்தி

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட தமிழினப் படுகொலை தொடர்பாக சர்வதேச அளவிலான சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழகத்தின் தலைநகரான சென்னை மெரினா கடற்கரையில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஒன்று திரளுமாறு மே17 இயக்கம் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் சபைக்கு தமிழீழம் தொடர்பான தமிழர்களின் நிலைப்பாட்டை கொண்டு செல்வதற்காக கடந்த ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி பெரும் எண்ணிக்கையில் மெரினா வில் திரண்டு உணர வைத்தோம்.

ஒன்றிணைந்த இலங்கைக்குள் தீர்வை திணிப்பார்கள் என்று கடந்த ஆண்டு மே மாதம் குறிப்பிட்டதைப் போலவே தற்போது நடைபெறுகின்றது. இதை உடைக்க வேண்டும்.

ஐ.நா. தீர்மானத்தை நம் மீது உலகம் திணித்து, ஏற்றுக்கொள்கிறாயா என்ற போது ஏற்க வேண்டுமா? மறுக்க வேண்டுமா? என்ற விவாதம் வந்தது. இதற்குப் பதிலாக, ''தமிழீழ விடுதலைக்கான வாக்கெடுப்பும், சுதந்திர சர்வதேச விசாரணையும்'' தான் எங்களுக்குத் தேவை என்று மார்ச் 18 ஆம் திகதி சென்னை மெரினாவில் கூடினோம். ஊடகங்கள் மக்களின் கவனத்துக்கு இந்தக் கோரிக்கைகளைக் கொண்டு சென்றன.

இன்று இந்தக் கோரிக்கைகள் தமிழகத்தில் மையம் கொள்ள ஆரம்பித்து இருக்கின்றன. தற்போது மக்களிடத்தில் பொது விவாதத்திற்கு ஐ.நா. வாக்கெடுப்பு தேவை என்ற நிலைவந்துவிட்டது. ஆனால் இது சாத்தியமாக வேண்டுமென்றால் இனப்படுகொலை உள்ளிட்ட இன அழிப்பு நடந்ததாக அங்கீகரிக்கப்பட்டு சர்வதேச சுதந்திர விசாரணை அறிவிக்கப்பட்டாக வேண்டும்.

ஐ.நாவில் தீர்மானம் வருவது மட்டுமே தீர்வை ஏற்படுத்தாது. சர்வதேச மக்கள் சமுகம் தமிழீழ விடுதலையின் நியாயத்தை அறியும் போது எமது போராட்டம் பல அடிகள் முன்னகரும்.

இதனால் எமது கோரிக்கைகள் மேலும் உரத்துக் கேட்க, எதிர்வரும் 20 ஆம் திகதி சென்னை மெரினாவில், நீதி கேட்ட கண்ணகி சிலையின் அருகில், பெரும் திரளாய் ஒன்று கூடுவோம். எமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம்-என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)




வடமராட்சி, மே 14

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகா கும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும், பாற்குட பவனியும், அன்னதானமும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு அல்வாய் குமிழடி விநாயகர் கோயிலில் இருந்து பாற்குட பவனி புறப்பட்டு வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலை வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து 1008 சங்காபிஷேகம் நடைபெற்று அன்னதானம் இடம் பெறும். பிற்பகல் அம்பாள் திருவூஞ்சல் மணவாளக் கோலத் திருவிழா நடைபெறும்.

உற்சவம் நிறை வுற்று அம்பாள் பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன் சகிதம் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.

(வ-8)

* * *

சுன்னாகம், மே14

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து, 13 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

### வைத்தியசாலையில் பாம்பு தீண்டிய இருவர்

தென்மராட்சி, மே 14

பச்சைப் பாம்பினால் கடியுண்ட ஒருவரும் சுருட்டைப் பாம்பினால் கடியுண்ட ஒருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கந்தன் சண்முகம் (வயது-57) என்பவர் பச்சைப் பாம்பினாலும், கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை யோகரத்தினம் (வயது-40) என்பவர் சுருட்டைப் பாம்பினாலும் கடியுண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ-9)

## தென்மராட்சியில் புனரமைப்பின்றி புதர்களாக இந்து மயானங்கள்

### மக்கள் கவலை

தென்மராட்சி, மே 14

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இந்து மயானங்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

அனைத்து மயானங்களிலும் எரியூட்டும் இடங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் மக்கள் நடமாட முடியாத அளவுக்கு பற்றைக்காடுகளாக மாறி விட்டன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான இரண்டு இந்து மயானங்களும் பிரதேச சபைக்குச் சொந்தமான 27 இந்து மயானங்களுமே இந்த நிலையில் உள்ளன என்றும் இவற்றை புனரமைத்து வழங்க அந்தந்த உள்ளூராட்சி சபைகள் முன்வரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

### கணினிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே14

நல்லூர் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தில் கணினிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதற்கான விண்ணங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு சுயவிவரக் கோவை, சான்றிதழ்கள், பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் இல.36, செல்லர் வீதி, நல்லூர் எனும் முகவரியில் இடம் பெறவுள்ள நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளமுடியும். (வ-14)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை
திருமதி கலாமாலினி சிவானந்தம்
அவர்களின் அன்புத் தாய்
சுப்பிரமணியம் செல்லக்கண்டு
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, கரந்தன், நீர்வேலி விலாசமிடப்பட்ட கணபதிப்பிள்ளை சபாநாயகம் என்பவரது வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் (Srilanka Driving Licence - DL No- A 009206159) கடந்த 11.05.2012 வெள்ளிக்கிழமை கரணவாய் மண்டான் - யார்க்கரு பிரதான வீதியில் கரணவாய் வெற்றிகாட்டுப்பிள்ளையார் ஆலயத்துக்கு தென்கிழக்குப் பக்கமாகவுள்ள பகுதியில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் வெற்றிகாட்டுப்பிள்ளையார் ஆலய பிரதம குருக்களிடம் ஒப்படைத்து உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்பு: 077 3777 475, 071 4405 299

## பிரியங்கா எக்ஸ்பிறஸ்



நீங்கள் விரும்பிய இடங்களுக்கு குறைந்த கட்டணத்தில் பயணம் செய்ய மீற்றர் டெக்ஸி வாடகைக்கு விடப்படும். மற்றும் உள்ளூர் சேவைகளுக்கு வான் சேவையும் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
இல.140, கந்த புராண வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
T.P: 0779757539 / 0775430746.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 20 ★ 06 ★ 1927
இறைவன் அடியில் 14 ★ 04 ★ 2012

அமரர் நமசிவாயம் நல்லையா

கடந்த (14.04.2012) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.05.2012) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அவரது பிரிவுத் துயரில் பங்கு கொண்டு நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் கூறி எல்லா வழிகளிலும் உதவிகள் நல்கிய எம் இனிய உறவுகள் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

கோவில் வாசல்,
இணுவில் மேற்கு (17922)(6-8)
குடும்பத்தினர்

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர்-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 16.05.2012 விநியோகிக்கப்படும். விலை - 80/=
றாஜீவ், நவாலி வீதி,
ஆனைக் கோட்டை.

## விற்பனைக்கு

LH-xxxx தொடரிலக்கமுடைய TATA டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0772807272

## காணி விற்பனைக்கு

மன்னார் கீரி ஐஸ் பக்ரரிக்கு அருகில் 125 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு. கடைகளும் கட்டலாம்
தொடர்புக்கு: 0755732271

## மரண அறிவித்தல்

சின்னத்தம்பி வீரசிங்கம்
13.05.2012 உதயன் பத்திரிகையில் 18ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி மரண அறிவித்தலில் 'ஐக்கிய வியாபார சங்க முன்னாள் [illegible] ஐக்கிய வியாபார [illegible] எனவாசிக்கவும்.

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
01.12.1949
மறைவு
14.05.2010

பண்ணாகத்தைச் சேர்ந்த
அமரர் இராமலிங்கம் சிவபாக்கியநாதன்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி காசாளர்)

அன்பு காட்டி அறிவு ஊட்டி
சொந்தமான எம் உறவுகளை கூட்டி
சொத்துக்களுடன் சுகங்கள் சேர்த்து
தத்துவமாய் எம்மை புவியில் வாழவைத்த தந்தையே...
விசவத்தனை வேலவன் பாதத்தில் இத்தனை அந்தரமாய்
நித்திய நித்திரைக்கு சென்றீரோ?
நீங்கள் உடலால் பிரிந்தாலும் எம் உள்ளத்தில்
உம் திருநாமம் என்றும் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கும்...

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பண்ணாகம்,
சுழிபுரம்.
உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை மாய்த்தல் தீர்வாகுமா?

மு.சுகந்தினி
அச்சுவேலி.



## வாடகை வீட்டில் தங்கிப் படிக்கும் பெண்களின் அவலம்

சூர்யா

தனியார் விடுதி ஒன்றில் தங்கிப் படிக்க வந்த பெண்ணுக்குச் சேர்ந்த முதல் நாளே தேனீரில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, மயக்கமடைய செய்திருக்கின்றனர் சில பெண்கள்.

மயக்க நிலையில் இருந்த பெண்ணை, அந்த விடுதியில் தங்கியிருக்கும் ஏனைய பெண்கள் படம் எடுத்து அவளை மிரட்டி விபசாரத்துக்கு சம்மதிக்க வைத்திருக்கின்றனர். இன்னும் இப்படி எத்தனைப் பெண்கள் மாட்டியிருக்கிறார்களோ? பெண்களே பெண்கள் மீது இழைக்கும் இந்த அநீதியை எப்படித் தடுப்பது?

ஒரு பெண்ணை படம் எடுத்துவிட்டால் அவளை அடிமைப்படுத்திவிடலாம் என்ற அவல நிலை என்றுதான் மாறும். எல்லாமே வியாபாரமான இன்றைய சமுகச் சூழலில் இன்றைய பெண்களை இந்த சிக்கலில் இருந்து எப்படி பாதுகாப்பது?

இதை ஒவ்வொரு பெண்ணுக்கும் சமுக நிறுவனமோ, அமைப்போ சொல்லித் தர முடியாது. கல்வி கற்கும் ஆசிரியரும், பெற்றோருமே சொல்லி விளங்க வைக்க வேண்டும். ஏனென்றால் இன்றைய கலாசார சீரழிவில் இருந்து ஒவ்வொரு பெண்ணையும் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

ஒரு பெண் இப்படிப்பட்ட சிக்கலில் சிக்கிக் கொண்டால், ஏமாற்றும் நபர் சொல்வதற்கெல்லாம் தலையாட்ட வேண்டும் என்றில்லை. பக்குவமாக யோசியுங்கள். அவர்களால் எடுக்கப்பட்ட தவறான படம் ஒன்றும் உங்கள் கற்பையோ, மானத்தையோ நிர்ணயிக்கவில்லை. எனவே அதை வைத்து ஏமாற்றுபவர் பெண்ணாக இருந்தாலும் சரி ஆணாக இருந்தாலும் சரி நீங்கள் பயப்படத் தேவையில்லை. நீங்கள் பயந்தால் உங்களை மென்மேலும் பயன்படுத்திக் கொள்வார்கள். எனவே துணிவுடன் செயற்பட்டு இது போல் மாட்டிக் கொள்ளும் பெண்களுக்கு வழிக்காட்டியாக இருங்கள். விரைவில் இப்படி செய்யும் மிருகங்கள் எல்லாம் புற்றீசல்களாக மறைந்துவிடுவர்.

பெண்களே புறத்தால் அறியாமையைக் கலைந்து விட்டீர்கள். அகத்தால் அறியாமையை எப்பொழுது கலைப்பீர்கள். பெண்களே உங்கள் அகம் அச்சம் தவிர்ப்பது எப்போது.



பெண்மையும் மென்மையும் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு தூரம் இலக்கணமாக அமைந்தாலும் சமகாலப் பெண்மையின் மனோபாலம் தற்கொலை என்னும் கொடூர மனோபலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பது யாவரும் கண்கூடு காண்கின்ற ஒரு வெளிப்படை. இது சமகால யாதார்த்தத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் தினசரி நிகழ்வாகி விட்டது. இந்த நிலை ஏன்? இந்த மாற்றம் எவ்வாறு வந்தது? எப்படி நிகழ்கின்றது. ஓர் ஆத்மாவுக்கு இவ்வாறு விலைமதிப்பற்ற தன்மை உருவானது எங்ஙனம்? இதன் பின்னணிதான் என்ன? உறங்கிக் கொண்டிருக்கும் அந்த ரங்கம்தான் என்ன என்பதை சற்று வெளிப்படுத்தி நோக்குவோம்.

மனித குலவர்க்கத்தின் குலவிளக்காகக் கருதப்படுவர் பெண். இதனால்தான் 'ஆவதும் பெண்ணாலே மனிதன் அழிவதும் பெண்ணாலே' என்று கூறுவர். ஒரு பெண்ணின் ஜனன காலம் முதல் பிராண வாயுவின் இறுதி நேரம் வரை அவளது வாழ்க்கை வட்டத்திலே எத்தனையோ சண்டைகளையும் சச்சரவுகளையும் சவால்களையும் நெருடல்களையும் சகித்துக் கொண்டு வாழ்வதால்தான் பெண் பூமாதேவிக்கு இணையாகக் கருதப்படுகின்றாள். இத்தகைய பெரும் சக்தி வாய்ந்தவளைத் தற்கொலை என்னும் கொடிய இயமன் தன் பிடியிலே தத்தெடுத்து தாண்டவமாட வைப்பது ஏன்?

எதிர்பாராத ஏமாற்றம், தாழமுடியாத வேதனை, தாங்க முடியாத தோல்வி, சகித்துக் கொள்ளமுடியாத வார்த்தையின் ரணங்கள், கோடு கீறி கிழிக்கப்பட்ட செயற்பாடுகள், வாழ்வில் அடக்கமுடியாத ஆசைகள், பொறுக்க முடியாத எரிச்சல்கள், நிரந்தரமாக நிர்மூலமாக்கப்பட்ட பந்தபாச அறுப்புக்களை இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் கணநேரப் பொழுதில் ஏற்படுகின்ற ஜீரணிக்கமுடியாத வலி, அந்த வலியின் அதிர்வு ஒரு பெண்ணின் ஆழ்மனதை ஊடுருவி இதயத்தின் அதிர்வெண்களை மீடிறன்களாக மாற்றும்போது அம் மீடிறன் அதியுச்ச உணர்வை மாற்றியமைக்கின்றது.

பெண்கள் சமூகத்தில் எவ்வளவுதான் சாதனைகள் படைத்தாலும் ஏதோ ஒரு மூலையில் ஒடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள். சில விடயங்களைச் சமுகத்தின் மத்தியில் வெளிக்கொணர முடியாமல் ஒதுக்கப்படுகின்றார்கள். அதையும் மீறி வெளிக்கொணர்ந்தால் தாம் சமுகத்தில் பெற்றிருக்கின்ற மதிப்பும் மரியாதையும் இழக்கப்பட்டு விடுமோ என்று ஏங்குகின்றார்கள். அதன் விளைவால் முடிவெடுக்க முடியாது தற்கொலை நோக்கி திணிக்கப்படுகின்றார்கள்.

சமுதாயத்திலே அநேகமாகத் திருமணமான பெண்களும் திருமண வயதை அண்மித்திருக்கும் பெண்களுமே தற்கொலை நிலையை தம்வசமாக்கிக் கொள்கின்றார்கள். காதல், பாலியல் வன்புணர்வு, கல்விநிலை தோல்வி, காணாத அடைவுகள், காட்சிப்படாத திகைப்புக்கள் இவைகளாலும் கணவனை இழந்த பெண்கள், கணவனால் தினசரி சாகடிக்கப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் பெண்கள் தற்கொலை செய்யத் துணிகின்றார்கள்.

பெண்களே! சற்றுச் சிந்தியுங்கள். தற்கொலைதான் உங்கள் பிரச்சினை ஒவ்வொன்றுக்கும் தீர்வென்றால் இந்தத் தேசத்தில் எஞ்சியிருப்பவை என்புக் கூடுகளும் சாம்பல் குவியல்களுமாகத்தான் இருக்கும். பெண் என்ற இனவர்க்கத்தின் நாமமே அழிந்து போயிருக்கும். எத்தனை பிரச்சினைகளையும் மனதுள் அடக்காமல் மனம்விட்டுப் பேசுங்கள். தீர்வுகள் கிடைத்தாலும் கிடைப்பெறா விட்டாலும் மனம் திறந்து பேசுங்கள். உண்மையைப் பேசுங்கள் அது உங்கள் வாழ்வை இன்ப மூட்டச் செய்யும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# ஆண்களின் பிடியில் சிக்கித் தவிக்கும் பெண்கள்







பெண் எனப்படுபவள் பூவினைப் போன்றவள், மென்மையானவள், ஆண்களின் சேவைக்காகவே பிறந்தவள் என்ற எரித்துப்போட வேண்டிய கொள்கைளும், சில இலக்கியங்களும், பாடல்களும், இன்றும் பெண்மை பேதலித்துப்போய் ஓரிடத்தில் உற்கார வைக்கப்படுவதற்கு காரணங்களாக அமைந்துள்ளன .

ஒரு குடும்பத்தில் பெண் குழந்தை ஒன்று பிறந்தால் அந்த குடும்பத்திற்கு அது தேவதையின் பரிசாகவும், தங்கள் குடும்ப குல விளக்காகவுமே பெற்றவர்களும், உறவினர்களும் அந்தப் பெண்ணை கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகின்றனர்.

தாய், தந்தை, பெரியதந்தை, சிறியதந்தை, மாமன் என்ற உறவுகள் அவளின் வளர்ச்சியிலும், அவளின் பாதுகாப்பிலும் பங்குகொண்டு அவளை சீரிய குணங்கள் உடைய ஒரு நற்குணவதியாக சமுகத்துக்குத் வழங்க தம்மாலான அத்தனை உதவியையும் அவளுக்கு தந்து அவளை சமுகத்தில் உயர்ந்தவளாக்குகின்றனர்.

ஆனால் இன்று பெண்கள் அனுபவிக்கும் வக்கிரகங்கள், கொடுமைகள் எத்தனை! எத்தனை. முன்னேறத் துடிக்கும் பெண்களுக்குப் பெரும் சவாலாக இருப்பது பாலியல் ரீதியான அதிகாரத் துஷ்பிரயோகமே என்று கூறலாம்.

கல்வி நிலையங்களில் இருந்து பல்கலைக்கழகம் வரையும், சிறிய வியாபார நிறுவனங்களில் இருந்து பெரிய பெரிய நிறுவனங்கள், திணைக்களங்களிலும் ஒரு சில அதிகாரிகளால் பெண்கள் மீதான பாலியல் ரீதியான அதிகாரத் துஷ்பிரயோகங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

எம் சமுகத்தில் இன்று தொழில்புரியும், உயர்கல்வி கற்கும் பெண்களின் ஒரு சில தற்கொலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. ஆனால் அவை பற்றிய தீரமான விசாரணைகள் முழுமையாக நடத்தப்படுவதில்லை. அந்தத் தற்கொலைகளின் பின்னால் இது போன்ற சில அதிகாரத்தைப் பயன்படுத்தி பாலியல் ரீதியான தொல்லைகள் கொடுக்கப்பட்ட தகவல்கள்கூடத் தொழில் புரிபவர்கள், அல்லது கூடகல்வி கற்பவர்களால் கதை வழியாக காதுகளை எட்டுகின்றன.

ஆனால் அவற்றுக்கு காரணமானவர்கள் சர்வ சாதாரணமாக வழமை போலவே சமுகத்துக்குத் தங்கள் அப்பாவி முகத்தை காட்டிக்கொண்டுதான் உள்ளனர். தமது அதிகாரத்தையும், அபிமானத்தையும் இப்படியான கேவலமான நோக்கத்துக்குப் பயன்படுத்த எத்தனிப்பது ஒரு வகையான மனோவியாதி என்று உளவியல் சொல்கின்றது. ஆனால் இப்படியான செயல்களில் ஈடுபடுபவர்கள் சமுகத்தின் முன்னால் துயிலுரியப்படுவதே இந்த மனோவியாதிக்கு சிறந்த மருந்தாக அமையும்.

## சூழல் வட்டம்

வந்தனா,
கரவெட்டி.



கோழை ஆண்களுக்கோ
பாலை மனங்கள்
பாவம் பாவைகள்...
மணமுடிப்பு வேண்டின் அங்கே
பணமுடிப்பு வேண்டும்
கன்னி மனங்களில்
கனவுகள் கரைந்தோட
வேலிக் கரையோரம்
விழிக்கறை பூக்கும்
ஏக்கமும் தாக்கமும்
ஏமாந்துபோகும்
இயலா மனங்களோ

மௌனத்தால்
தலைகுனியும்
ஊமை உள்ளங்களோ
உயிரின்றி ஓலமிடும்
பாவையரோ நாளும்
பாலைவனம் நோக்கி
பரிதாப யாத்திரைகள்
சீதன வேட்கை
கொல்லாத பெண்ணில்லை
நில்லாத மண்ணில்லை
அது ஒரு சூழல்வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபையைக் கலைத்தபின்பே தேர்தல் பற்றி தீர்க்கமான முடிவு

## கூட்டமைப்பு எம்.பி.அரியநேத்திரன் கூறுகிறார்

**முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட விருப்பம் தெரிவித்தால் அது தொடர்பாக எமது கட்சி பரிசீலிக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு,மே14

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத் தேர்தலில் எவ்வாறு முகம்கொடுக்கப் போகின்றது என்பதைக் கூறமுடியும். அதேவேளை, கிழக்குத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட விருப்பம் தெரிவித்தால் அது தொடர்பாக எமது கட்சி பரிசீலிக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவிருக்கின்றது எனவும், மாகாணசபைத் தேர்தல் செப்டெம்பரில் நடக்கவிருக்கின்றது எனவும் தகவல் வந்துகொண்டிருக்கும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றது என்று பல தரப்பினரும் எம்மிடம் கேள்விகளைக் கேட்டு வருகின்றனர். ஆனால், கிழக்கு மாகாண சபைகலைக்கப்பட்ட பின்னர்தான் அத் தேர்தலில் கூட்டமைப்பு எவ்வாறு முகம்கொடுக்கப் போகின்றது என்பதை எம்மால் தெளிவுபட கூற முடி யும்.

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர் தான் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி தேர்தல் தொடர்பாக தீர்க்கமான முடிவெடுப்பார்கள். அதன் பின்னர் தான் எமது நிலைப்பாட்டை அனைவருக்கும் தெரியப்படுத்துவோம்.

இதேவேளை,கிழக்குத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன்இணைந்து போட்டியிடவிருப்பம்தெரிவித்தால் அது தொடர்பாக நாம் பரிசீலிப்போம். முஸ்லிம் காங்கிரஸும் வடக்கு, கிழக்குப் பிரச்சினை தொடர்பில் எம்முடன் கடந்த காலங்களில் சேர்ந்து குரல்கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது - என்றார்.

## புதுக்குடியிருப்பு சிவநகர் மக்கள் 20 ஆம் திகதி மீள்குடியமர்வு

வவுனியா,மே 14

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாமில் உள்ளவர்களில் ஒரு தொகுதியினர் எதிர்வரும் 20 ஆம் திகதி தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இறுதிப் போர் நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து ஆனந்தகுமாரசுவாமி மற்றும் கதிர்காமர் ஆகிய நலன்புரி முகாமில் வசிக்கும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சிவநகர் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த மக்களே மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.


இதன் அடிப்படையில் கதிர்காமர் நலன்புரி முகாமிலுள்ள 48 குடும்பங்களைச் சேர்ந்த 131 பேரும் ஆனந்தகுமாரசுவாமியிலுள்ள 64 குடும்பங்களைச் சேர்ந்த 186 பேருமாக மொத்தம் 112 குடும்பங்களை இவ்வாறு மீளக் குடியமர்த்துவதற்குரிய பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை மந்துவில், மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு ஆகிய பிரிவுகளில் உள்ள மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களை எதிர்வரும் ஜூன் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீளக் குடியமர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசால் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-400)

## விசித்திர ஆட்டுக்குட்டி



மன்னார்,மே 14

மன்னாரில் விசித்திரமான தோற்றத்துடன் ஈன்ற ஆட்டுக்குட்டி இறந்து விட்டது. மன்னார் கீரிமுருகன் ஆலய வீதியிலுள்ள ஜெகநாதன் என்பவரது வீட்டிலேயே இந்தப் 'பிரசவம்' நடந்தது.

இந்த ஆட்டுக்குட்டிக்குக் கண், மூக்கு என்பன காணப்படவில்லை. வாய்ப்பகுதி வித்தியாசமான தோற்றத்துடன் காணப்பட்டது. ஆனால் ஈன்ற சிறிது நேரத்திலேயே ஆட்டுக்குட்டி இறந்துவிட்டது. (க-12)

### மட்டக்களப்பு மாவட்டத்தின்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி கூட்டமைப்புடன் இணையத் தீர்மானம்

மட்டக்களப்பு,மே14

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இயங்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியுடன் இணைந்து கொள்ள தீர்மானித்துள்ளது. இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பலப்படுத்த முடியும் என்று அந்த அணியின் தலைவர் இரா.துரைரத்தினம் தெரிவித்தார்.

எமது சமூகத்தை கடந்த கால'இழப்புக்களில் இருந்து கட்டியெழுப்ப வேண்டும். தமிழர் ஒருவரை முதலமைச்சராக்குவதற்கும் அதிகாரப்பரவலாக்கலை உறுதியாக செயற்படுத்துவதற்கும் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் செயற்பட முடிவெடுத்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரத்தினத்தை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலை அடுத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## கழிவுப் பொருளால் நோய் பரவும் அபாயம்

மட்டக்களப்பு,மே14

சாய்ந்தமருது பிரதான வீதிக்கு அண்மையிலுள்ள பொது நூலக வீதியின் ஓரங்களில் கழிவுப் பொருள்கள் போடப்பட்டு அகற்றப்படாதுள்ளமையால் நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கழிவுப் பொருள்கள் குவிக்கப்படும் இடத்துக்கு அண்மையில் பாடசாலை, வைத்தியசாலை, பொதுநூலகம், சமுர்த்தி அலுவலகம், தொழில் பயிற்சி நிலையம், முன்பள்ளி பாடசாலை போன்றன காணப்படுகின்ற போதிலும் இதனைத் தடுப்பதற்கான முறையான நடவடிக்கைகள் எதுவும் மாநகர சபையினால் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கழிவுப் பொருள்களை உடன் அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## கிணறுகளில் டெங்கு நுளம்பு 6 பேருக்கு எதிராக நடவடிக்கை

மட்டக்களப்பு,மே14

மட்டக்களப்பு சுகாதார அலுவலகப் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா மற்றும் மஞ்சந்தொடுவாய் பகுதிகளில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட டெங்கு பரிசோதனை நடவடிக்கையின் போது ஆறு வீடுகளிலுள்ள குடிதண்ணீர் கிணறுகளில் டெங்கு நுளம்புகளை பரவும் வகையிலான சூழல் காணப்பட்டது தெரியவந்துள்ளது. அதை அடுத்து அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி கே.ரஞ்சன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நபர்களுக்கு எதிராக எதிர்வரும் 15ஆம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படவுள்ளது. தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சுகாதார அலு வலகர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார அலுவலகமும், மட்டக்களப்பு மாநகர சபையும் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் மட் டக்களப்பு கிளையும் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு சுகாதார அலுவலகப் பிரிவிலுள்ள பகுதிகளில் டெங்கு அதிகமாக இனங்காணப்பட்ட பகுதியான நாவற்குடா பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச)

## வாகனம் தடம் புரண்டு ஐந்து பேர் படுகாயம்



கிண்ணியா,மே.14

கிண்ணியா - மட்டக்களப்பு ஏ- 15 வீதியில் பார ஊர்தி பாதையை விட்டு விலகி குடை சாய்ந்ததில் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு மீன்வாடி ஒன்றிலிருந்து சுமார் 35 மீன் பெட்டிகளோடு இன்னொரு மீன் வாடிக்குக் கொண்டு சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இ[illegible] பொலிஸார் தெரிவித்தனர்.

[illegible] வாடியில் பின்புறமாக இருந்து பயணித்தவர்களே காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

## சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் தொடர்பான செயலமர்வு

வவுனியா,மே 14

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு ஒன்று தெற்கு வலயத்திலுள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்குக்கல்வி வலயம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மூன்று நாள் செயலமர்வில் முப்பது பாடசாலைகளைச் சேர்ந்த 60 ஆசிரியர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

வடமாகாண உளவளத்துணைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எ.ஆனந்த நடேசன் மற்றும் இதற்கென விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் வீ.பரஞ்சோதி, வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் சி.சுபாஸ்கரன் மற்றும் கனேடிய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் உட்படப் பலரும் வளவாளர்களாகச் செயற்படவுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா கேட்டுள்ளார்.

(க-400)

## காணிப் பிரச்சினை; தீர்க்க விசேட குழுக்கள்

கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற காணிப் பிரச்சினைகள் குறித்து விசாரணை மேற்கொள்வதற் காக மூன்று விசேட குழுக் கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கியுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவே இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டமைக்கான முக்கிய நோக்கம் என்று கிழக்கு மாகாண காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்தார்.

காணிப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை இந்தக் குழுக்கள் தற்போது ஆரம்பித்துள்ளன. மாகாணத்தில் நிலவுகின்ற காணிப் பிரச்சினை குறித்து இந்தக் குழுக்களிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டுபிடி இலக்கைக் கண்டுபிடி.....**



காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் யாழ்ரன் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் தயிர் முட்டி அடிக்கும் போட்டியில் இலக்கை நோக்கி நகரும் வீரர். (ங-250)

# கபடிப் போட்டியில் கலக்கிய ஹென்றியரசர் சம்பியன்



**6 புள்ளிகள் வித்தியாசத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பருத்தித் துறை றோ.க. ஆண்கள் பாடசாலையை வீழ்த்தி மாவட்ட மட்டக் கபடிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.**

பண்டத்தரிப்பு, மே 14

யாழ்.மாவட்ட 19 வயதிற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று மாவட்ட மட்டத்தில் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறை கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலையை எதிர்த்து விளையாடிய இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்றதன் மூலமே மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

முன்னதாக நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து விளையாடிய புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் பருத்தித்துறை கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் வெற்றி பெற்ற பருத்தித்துறை கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இவற்றின் அடிப்படையில் புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் பருத்தித்துறை கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலைக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டி மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது. முதல்பாதியில் இரு அணி வீரர்களும் சமபலத்துடன் விளையாடிய போதும் ஹென்றியரசர் கல்லூரி 18 புள்ளிகளைப் பெற பருத்தித்துறை றோ.க. ஆண்கள் பாடசாலை 20 புள்ளிகளைப் பெற்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலே ஹென்றியரசர் வீரர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாட இரண்டாவது பாதி முழுவதும் ஹென்றியரசர் கல்லூரியின் கை ஓங்கியிருந்தது. இதிலே புனித ஹென்றியரசர் கல்லூரி 20 புள்ளிகளைப் பெற பருத்தித்துறை றோ.க. ஆண்கள் பாடசாலை 12 புள்ளிகளை மட்டுமே பெற முடிந்தது.

இதனால் 38 : 32 என்ற புள்ளி அடிப்படையில் 6 புள்ளிகள் வித்தியாசத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பருத்தித்துறை றோ.க. ஆண்கள் பாடசாலையை வீழ்த்தி மாவட்ட மட்டக் கபடிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. (ங-130)

## தேசிய மட்டத்திலான கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

# உயரம் பாய்தலில் யாழ்.இந்து மாணவன் செந்துரன் சாதனை



யாழ்ப்பாணம், மே 14

தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் புதிய சாதனையை நிலைநாட்டி உள்ளார்.

கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 16 வயதுக்குட்பட்டோருக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் இரட்ணசிங்கம் செந்துரன் 192 சென்ரி மீற்றர் உயரத்தைக் கடந்து இந்தப் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

முன்னைய சாதனையான 190 சென்ரிமீற்றர் உயரம் (2004) முறியடிக்கப்பட்டு 191 சென்ரி மீற்றராக இருந்தது. அதன் பின் அந்தச் சாதனை 2007 ஆம் ஆண்டு சமன் செய்யப்பட்டிருந்து. சுமார் ஐந்து வருட காலமாக முறியடிக்கப்படாமல் இருந்த இந்தச் சாதனையை நேற்றைய தினம் யாழ்.இந்து மாணவனான செந்துரன் முறியடித்திருக்கிறார்.

பாடசாலை மட்டத்திலும், வலய, மாகாண மட்டங்களிலும் ஏற்கனவே சாதனைகள் பலவற்றை நிலைநாட்டியிருக்கிறார் செந்துரன். வருடா வருடம் தனது சாதனைகளை தானே முறியடித்து புதிய சாதனைகளை இவர் நிலைநாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ)

# பெரு விளையாட்டுப் போட்டிக்கான நிரல் ஒழுங்குகள் வவுனியாவில்

வலி.வடக்கு, மே 14

வடமாகாண பாடசாலை அணிகளுக்கு இடையே அடுத்த மாதம் நடைபெறவுள்ள பெரு விளையாட்டுப் போட்டிகளுக்கான நிரல் ஒழுங்கு சம்பந்தமான கலந்துரையாடலும் நிரல் ஒழுங்கு செய்தலும் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் வுனியாவில் நடைபெறவுள்ளன.

இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி வலயங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி சிரேஸ்ட பொறுப்பாசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தமுறை பெரு விளையாட்டுப் போட்டிகள் மூன்று மாவட்டங்களில் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளமையாலும் நிரல் ஒழுங்குகளைச் சீரான முறையில் மேற்கொள்ளும் முகமாகவும் இந்த வதிவிட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ங-86)

# பற்றீசியன்ஸிடம் பணிந்தது கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி.

வலி.வடக்கு, மே 14

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகமும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

லிவின்டன், கிளின்ரன் ஆகியோர் தலா 37 ஓட்டங்களையும் ரியுடர், ஜெகன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கிருபவன் 3 இலக்குகளையும் சாம்பவன் 2 இலக்குகளையும் பிரதீப், ரம்மியராகுலன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. அணி 29 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனுதாஸ் 30 ஓட்டங்களையும் சத்தியன் 26 ஓட்டங்களையும் கிருபவன் 21 ஓட்டங்களையும் பிரதீப் 19 ஓட்டங்களையும் சிலோஜன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன. பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சுஜீவன் 3 இலக்குகளையும் லிவிங்ரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (86)

## மாவட்ட மட்ட சுற்றுப் போட்டியில்

# வவுனியா சைவப்பிரகாச மகளிர் வலைப்பந்தில் மாவட்ட சம்பியன்

**முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் மாகாணப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.**

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும் மாவட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 19வயதுப் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாவட்ட சம்பியனாகியது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக் கிழமை சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக போட்டியிட்டன இடைவேளைக்காக ஆட்டம் இடை நிறுத்தப்பட்ட போது சைவப்பிரகாச மகளிர் கல்லூரி 7:5 என்ற பேறுகள் அடிப்படையில் முன்னிலை பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கியது சைவப் பிரகாச மகளிர் அணியினரின் கையே மேலோங்கியிருந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் சைவப் பிரகாச மகளிர் அணியினர் மேலதிகமாக 14 பேறுகளையும், நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய அணியினர் 9 பேறுகளையும் பெற்றுக் கொண்டனர்.

இறுதியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் அணி 21:14 என்ற பேறுகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

இந்தப் போட்டியில் மூன்றாமிடத்தை தவசியார் குளம் வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணியினர் மாகாணப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-400)

# உடையார்கட்டு ம.வி. பெண்கள் பிரிவில் சாதனை

முல்லைத்தீவு, மே 14


முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப்போட்டிகளில் உடையார்கட்டு மகா வித்தியாலயம் முன்னிலை பெற்றுள்ளது.


19 வயது பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் உடையார்கட்டு மாகாவித்தியால்ய வீராங்கனைகள் அபாரமாக விளையாடி வெற்றியீட்டியுள்ளனர்.

இதன் மூலம் குறித்த நான்கு போட்டிகளிலும் மாகாணமட்டத்தில் பங்கு பற்ற இந்தப் பாடசாலை தெரிவாகியுள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு அடுத்த வெற்றி







இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 59ஆவது போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது. புள்ளிகளின் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ள அணியான டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கெதிராக இடம்பெற்ற இந்தப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 28 பந்துகள் மீதமிருக்கையில் 9 இலக்குகளால் வெற்றி பெற்றது.

சென்னை, சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அவ்வணியின் வீரேந்தர் சேவாக் முதலாவது பந்துப்பரிமாற்றத்திலும், டேவிட் வோர்ணர் 3ஆவது பந்துப்பரிமாற்றத்திலும்,நமன் ஓஜா 5ஆவது பந்துப்பரிமாற்றத்திலும் பென் ஹில்பன்ஹோஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

அதன் பின்னர் மஹேல ஜெயவர்த்தனவும் 6ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழக்க டெல்லி டேர்டெவில்ஸ் அணி கடுமையான அழுத்தத்தை எதிர்கொண்டது.

துடுப்பாட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக யோகேஷ் நாகர் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், வேணுகோபால் ராவ் 24 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக பென் ஹில்பென்ஹாஸ் 4 பந்துப்பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அல்பி மோர்க்கல் 4 பந்துப்பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், ரவிச்சந்திரன் அஸ்வின் 4 பந்துப்பரிமாற்றங்களில் 17 ஓட்டங்களுக்கு ஒருஇலக்கையும் கைப்பற்றினர்.

115 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15.2 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அந்தஅணி சார்பாக முதலாவது இலக்குக்காக மைக்கல் ஹசி, முரளி விஜய் இருவரும் 10.1 பந்துப் பரிமாற்றங்களில் 75 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக முரளி விஜய் 40 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 32 பந்துகளில் 38 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக இர்பான் பதான் 2 பந்துப்பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் முதல் 3 இலக்குகளையும் ஆரம்பத்திலேயே கைப்பற்றி சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கான வெற்றி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த பென் ஹில்பென்ஹாஸ் தெரிவானார். (ங)

# கவிழ்ந்தது கங்குலி கப்பல்



ஐ.பி.எல். சுற்றுக்கான வாய்ப்பை தக்க வைப்பதற்கு வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, புனேயை 45 ஓட்டங்களால் இலகுவாக தோற்கடித்தது. ராஜஷ்தானின் சார்வில் ரஹானே, வொட்ஸன் அரைச்சதம் விளச பந்து வீச்சில் அஜிர் சன்டிலா 'ஹற்றிக்' எடுக்க கங்குலியின் படையணி, ராஜஸ்தானிடம் சரண்டராகியது. புனே அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்த கங்குலி மீண்டும் அணியில் நேற்றைய தினம் இணைத்துக் கொள்ளப்பட்ட போதும் தோல்வியை தவிர்க்க முடியாமல் போய்விட்டது.

ஐ.பி.எல். தொடரின் 60 ஆவது ஆட்டம் நேற்று ஜெய்பூரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

டிராவிட், ரஹானே ஜோடி களமிறங்கியது. டிராவிட் ஆரம்பத்திலிருந்து பவுண்டரிகள் அடித்து ஓட்டங்களைச் சேர்த்தார். மறுமுனையில் ரஹானேயின் துடுப்பு தடுத்தாடிக் கொண்டிருந்தது. டிராவிட்டின் ஆட்டத்துக்கு ஐந்தாவது பந்துப் பரிமாற்றத்தில் நெஹ்ரா முற்றுப் புள்ளி வைத்தார். அணி 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 21 ஓட்டங்களுடன் டிராவிட் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து நுழைந்த வொட்ஸன் அதிரடியாக துடுப்பெடுத்தாட, மறுமுனையில் ரஹானே சிறப்பாக ஒத்துழைப்புக் கொடுத்து துடுப்பெடுத்தாடினார். ரைடர் வீசிய ஆட்டத்தின் 13 ஆவது பந்து பரிமாற்றத்தில் பவுண்டரிகள், சிக்ஸர்களாக வெளுத்து வாங்கிய வொட்ஸன் 26 பந்துகளில் தனது அரைச்சதத்தைக் கடந்தார். இரண்டாவது இலக்குக்கான இணைப்பாட்டம் சதத்தை நெருங்கிய வேளையில் வொட்ஸன் 58 (31 பந்துகள்) ஓட்டங்களுடன் நெஹ்ராவின் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

அதன் பின்னர் 40 பந்துகளில் ரஹானே தனது அரைச்சதத்தை கடந்தார். ஆட்டம் இறுதிக்கட்டத்தை எட்ட அதிரடிகளும் அதிகமாகியது. ஹொட்ஜ் 14 ஓட்டங்களுடனும், ரஹானே 61 ஓட்டங்களுடன் (47 பந்துகள்) ஆட்டமிழந்தனர். இறுதிப் 10 பந்து பரிமாற்றங்களில் 93 ஓட்டங்கள் விளாசப்பட, ராஜஸ்தான் அணி 20 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. நெஹ்ரா மாத்திரம் 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.

சவாலான இலக்கை விரட்டத் தொடங்கிய புனேக்கு முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி அடி கொடுத்தது ராஜஸ்தான். அஜிர் சன்டிலா முதல் பந்துப் பரிமாற்றத்தின் இறுதி இரண்டு பந்துகளிலும் ரைடர் (1), கங்குலி (2) பவிலியனுக்கு அனுப்பி வைத்தார். தொடர்ந்து தனது அடுத்த பந்துப் பரிமாற்றதின் முதலாவது பந்தில் உத்தப்பாவை (6) வீழ்த்த ஐ.பி.எல். அரங்கில் 'ஹற்றிக்' எடுத்தார். தொடர்ந்தும் அசத்திய அவர் மஜ்முடரையும் 9 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்ப புனே 26 ஓட்டங்களுடன் 4 இலக்குகளை இழந்து அந்தரித்தது.

அதன் பின்னர் மத்திய வரிசையில் பேர்குசன், ஸ்மித், மத்தியூஸ் தாக்குப்படித்து இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க புனே அணி ஓரளவு கௌரவமான இலக்கை அடைந்தது. பேர்குசன், மத்தியூஸ் தலா 23 ஓட்டங்களுடனும், ஸ்மித் 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க புனேயின் தோல்வி உறுதியானது.

இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் புனே வாரியர்ஸ் அணி 9 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது. அஜிர் சன்டிலா 13 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை சரித்ததுடன் ஆட்டநாயகனாகவும் தேர்வானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

**வாரநாள் புதிய பிரிவு**
**14.05.2012 திங்கள் (இன்று)**

பிரிவு 1 : காலை 9.00 – 10.00
பிரிவு 2 : மாலை 3.00 – 4.00

காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளலாம்.

பயிற்சி பற்றி அறிந்துகொள்ள முதல் வகுப்பில் இலவசமாக கலந்துகொள்ளலாம்.

14.05.2012 திங்கட்கிழமை பதிவுசெய்வோருக்கு ரூபா 500 பெறுமதியான புத்தகம் இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456



# தேவை

சிறிய ஹோட்டல் ஒன்றுக்கு நன்கு சமைக்கத் தெரிந்த, அனைத்து வேலைகளும் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு:
**0771258072, 0773572290**



**தகவல் தொழினுட்பமாணி பட்டக்கற்கை**
**BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT**

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 10 வருடங்களாக மாணவர்களை தயார்படுத்துகின்றோம். Call Us: 0718474239 , 0776577359

A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம். ஏனையவர்கள் FIT சித்தியடைவதன் மூலம் விண்ணப்பிக்கலாம். சிறந்த வேலை வாய்ப்பினைப் பெறுவதற்காக.....

MIS Open Source College

74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m


# பதவி வெற்றிடம்

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

**1. உதவி விடுதி மேற்பார்வையாளர்:**

க.பொ.த. சாதாரணதரம் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும். இப் பணியில் முன் அனுபவம் இருப்பின் அது மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
விடுதியில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவர்களாகவும், நற்பண்பும் சேவை மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்

**2. விசேட ஆசிரியர்:**

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருப்பதுடன் ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
சுய விவரங்களுடன் விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 21.05.2012 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(C11582) (6-8) **தலைவர்**




# சரவணா ரெக்ஸ்

வாடிக்கையாளருக்கான விசேட சலுகை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட SPECIAL OFFICE WEAR சாறிகள் இந்தியா விலைக்கே இன்று 14.05.2012 தொடக்கம் விற்பனை செய்ய உள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். (கையிருப்பு முடியும் வரை)

இடம் – சரவணாரெக்ஸ் களஞ்சியசாலை
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

**காலம்– 14.05.2012 தொடக்கம்**
**கையிருப்பு முடியும்வரை**
நேரம்– காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 9.00 மணி வரை
**1 சில்க் சாறி- 500/=**
**1 கொட்டன் சாறி- 500/=**





**விற்பனையாகின்றன**

சனிக்கிழமை நடைபெற இருக்கும் வட மாகாண பரீட்சைக்கான பொது அறிவு, பொது உளச்சார்பு வழிகாட்டி விலை 300/=
தொகுப்பு:
த.தவசேகர்

பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை புத்தக நிலையங்களில்.



**வடக்கு மாகாண நூலக, ஆய்வுகூட பணியாளர் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு**

ஆரம்பம்:
செவ்வாய் (15.05)
மாலை 2.00 மணி
செவ்வாய், புதன்
2.00-5.00 வரை
வியாழன் 10.00-5.00 வரை

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு.
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)



# மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 22,500/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499



# நீங்கள் ஆஸ்திரேலியா குடும்பத்துடன் செல்லும் எண்ணம் 30.06.2012 அன்றைய தினத்துடன் நிறைவேறாமல் போகலாம்...

**நாம் "வெள்வெருட்டுக்காட்டவில்லை" ஜூன் 30 உடன் ஆஸ்திரேலியாக் குடிவரவுக் கொள்கையில் பாரிய மாறுதல்கள், இறுக்கங்கள். இதனை அவர்களது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்த்தும் உறுதி செய்யலாம்.**

**எனவே தாமதம் வேண்டாம். இம்மாதம் 18ற்கு முன் ஆலோசனை பெற விரைந்து வாருங்கள்**

**விசேடமாக காலை 7 மணிமுதல் இரவு 7 மணிவரை எமது ஆலோசனைக் கருமபீடம் உங்களுக்காக இன்றிலிருந்து 18ஆம் திகதி வரை இயங்கும்**

# திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்

**(PV 82703)**

இல. 37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 221 9016 / 075 6574136



(18178) (6,10)

**கிளைகள்**

115A, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544.

22A, பிராங்பெட் பிளேஸ்,
பம்பலப்பிட்டி.
0112508443.

504, Hampton Street,
Melborn, Australia.
0061390437100,
0061412479209.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# டெக்கானைத் துரத்தி அடித்தது பஞ்சாப்

டேவிட் ஹசியின் அதிரடி ஆட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் மீண்டும் ஒரு தோல்வியைச் சந்தித்தது சங்காவின் டெக்கான் சார்ஜஸ்.


ஐ.பி.எல். ஐந்தாவது பருவத்தின் 61ஆவது போட்டி நேற்று மொஹாலியில் நடைபெற்றது. டெக்கான் சார்ஜஸ் அணியும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் இதில் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் அணித் தலைவர் குமார் சங்ககார முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இந்த வருட ஐ.பி.எல். தொடரில் கடைசி நிலையில் இருக்கும் டெக்கான் அணி அண்மைக்காலமாக தொடர் தோல்விகளால் தவித்து வந்தது. இந்த நிலையில் வாங்கியதையெல்லாம் வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்கும் வெறியுடன் டெக்கான் துடுப்பாட்ட வீரர்கள் களத்தில் ஆக்ரோசத்துடன் இறங்கினார்கள். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான தவானும், பட்டேலும் பட்டையைக் கிளப்பினார்கள். இருவரும் இணைந்து 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றபோது அசார் மொஹமட்டின் பந்தில் பட்டேல் பறந்தார். தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் சங்ககார வழமைபோல ஒரு ஓட்டத்துடன் அவன்னாவின் பந்தில் சங்காரமானார். பின்னர் வந்த கமரூன் வைட்டும், தவானும் இணைந்து பஞ்சாப் அணியின் பந்து வீச்சை பதம் பார்த்தனர். இருவரும் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 145 ஆக இருந்த போது பிரவீன் குமாரின் பந்தில் தவான்(71) வீழ்ந்தார்.

அதன்பின்னர் களமிறங்கிய டானியல் கிறிஸ்ரைன் பேயாட்டம் ஆடினார். பத்துப் பந்துகளில் 24 ஓட்டங்களை அவர் விளாசினார். இதில் 2 சிக்ஸர்களும் அடங்கும். ஆட்ட நிறைவில் டெக்கான் அணி நான்கு இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. கமரூன் வைட் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களை டெக்கானுக்குப் பெற்றுக் கொடுத்தார். பஞ்சாப் அணி சார்பில் அசார் மொஹமட் இரண்டு இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.

190 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை பஞ்சாப் அணி துரத்தத் தொடங்கியது. எனினும் அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சைனி 3 ஓட்டங்களுடன் வெளியேறினார். மன்டீப் சிங் 28 ஓட்டங்களை விளாசினார். மார்ஸ் 11 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். பந்து வீச்சில் கலக்கிய அசார் மொஹமட் துடுப்பாட்டத்திலும் வெளுத்து வாங்கினார். ஒரு சிக்ஸர் அடங்கலாக 31 ஓட்டங்களை எடுத்து பஞ்சாப் அணிக்கு நம்பிக்கை ஊட்டினார். அவரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இணைந்து கொண்ட அணித் தலைவர் டேவிட் ஹசியும் சிட்னிஸும் அணியை தூக்கி நிறுத்த முற்பட்டனர். ஹசியின் துடுப்பில் பட்ட பந்துகள் எல்லைக் கோட்டுக்கு அடிக்கடி பறந்தன. எனினும் சிட்னிஸும், சாவ்லாவும் அடுத்தடுத்து ஸ்ரெய்னின் பந்தில் சரணாகதி அடைய பஞ்சாப்பின் நிலை சிக்கலானது. எனினும் ஒரு புறத்தில் ஹசி புயலாக மாறி போராடிக் கொண்டிருந்தார்.

கடைசி நேரத்தில் ஹசியுடன் கை கோர்த்த குர்கீரட் சிங்கும் அதிரடியில் கலக்க 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 194 ஓட்டங்களை எடுத்து 4 இலக்குகளால் டெக்கானை பஞ்சாப் அணி வீழ்த்தியது. இந்த வெற்றி மூலம் அடுத்த சுற்றுக்குள் நுழைவதற்கான வாய்ப்பை பஞ்சாப் அணி தக்கவைத்துக் கொண்டது. அணியின் வெற்றிக்கு மூலகர்த்தாவான டேவிட் ஹசி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ங)




## மரண அறிவித்தல்



### கந்தையா நாகராசா

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகராசா நேற்று (13.05.2012) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், ஜீவஜோதீஸ்வரியின் அன்புக் கணவரும், லிங்கேஸ்வரன் (தீசன்-சுவிஸ்), கங்கைஅமரன் ஆகியோரின் தந்தையும், ரெமித்தாவின் (சுவிஸ்) மாமனும், டிலுஜா, ஜீசால் (சுவிஸ்) ஆகியோரின் அப்பப்பாவும், தனபாலசிங்கம், காலஞ்சென்ற கமலாவதி மற்றும் சம்பந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலாவதியின் மருமகனும் ஜீவகுணரஞ்சிதத்தின் மைத்துனரும், மகேந்திரவரதனின் சகலனும்,சுமதி, சுகந்தி, சுபா (லண்டன்), சுதர்சினி (கொழும்பு) ஆகியோரின் சித்தப்பாவும், நிறஞ்சனா, நளாயினி, வாசுகி (சுவிஸ்), சியாமினி ஆகியோரின் மாமனும், சுதாகர், சுதர்சன் (பிரான்ஸ்), சுகந்தன், தர்சி, தர்மினி, சுதர்சன் (ஜேர்மனி), அகிலன் (ஜேர்மனி), சிவானி (அமெரிக்கா), திவாகர் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (14.05.2012) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

151, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து பாலசுந்தரம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து பாலசுந்தரம் நேற்று (13.05.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து-நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சகுந்தலாதேவியின் பாசமிகு கணவரும், சுரேந்திரன், சுதர்ஷினி, சுபத்திரா, காலஞ்சென்ற பகீரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற தங்கத்துரை மற்றும் விஜயரட்ணம் (கனடா) ஆகியோரின் சகோதரரும், அகல்யாசிவானி, நடேசமூர்த்தி ஆகியோரின் மாமனும், ஹரிஷ், சௌமியா, பிருந்தவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வவுனியா தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

332B, முதலாம் ஒழுங்கை,
உக்குளாங்குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 26 | | 16 |
| ★ | | ★ |
| 05 | | 05 |
| ★ | | ★ |
| 1950 | | 2005 |



### அமரர் நகுலேஸ்வரி குகேந்திரன்

06, சென்.அன்ஸ் லேன்,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
14.05.2012

அன்புள்ள அம்மாவுக்கு...
நலம் நலம் அறிய ஆவல்...

அம்மா இன்றுடன் 07 ஆண்டுகள் ஆகிவிட்டன. நீங்கள் எங்களை விட்டு கார் மேகன் பாதம் சென்றடைந்து. அங்கே உங்கள் தனிமையைக் கண்டோ என்னவோ அம்மம்மாவும் உங்களிடம் துணையிருக்க வந்து 01 வருடம் ஆகிவிட்டது. உங்கள் இருவரிடம் இருந்து இதுவரை எவ்வித தொடர்பும் வரவில்லை.

கனவில் என்றாலும் உங்களுடைய திருமுகம் வராதா என்ற பேராசையில் விழித்திருப்பதைவிட நாங்கள் உறங்கி இருப்பதே அதிகம்...

என்றாவது ஒருநாள் கார் மேகனின் பாதத்தில் இருந்து. இம்மடலைப் பார்த்து பதில் எழுதுவீர்கள் என்ற நப்பாசையில் விடாது முயற்சி செய்கிறோம்.

இப்படிக்கு
உங்கள் அன்புக்காக ஏங்கும் குடும்பத்தினர்.

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 14

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

(ங-16)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
By : ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி , சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். தொ.பே.: 077 6751649

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1978 புனர்பூசம் 2 இல் செவ்வாய் (சூரியனுடன்), நியூசிலாந்து P.R, கம்பியூட்டர் எஞ்ஜினியர் மண மகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை.

தொடர்பு : 077 6794215

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சின்னம்மா (தங்கரியம்)



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னம்மா நேற்று முன் தினம் (12.05.2012) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகேசுபிள்ளை ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் விஜயானந்தன் (சுவிஸ்), சற்குணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தனலட்சுமி, சுசீலா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், பவளமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் விஜயகலா, விதுசன், சசிரேகா, சிவசங்கர், சிவசூரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலகாடு,
காரைநகர்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

### செல்லத்துரை யோகநாதன்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகநாதன் (இளைப்பாறிய உப அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி) நேற்று (13.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111




**Let's Experience and Promote**
**Your Professional Skills through English**

*A skills integrated, learner centered participatory English Course for Adults*

**Classes will start on 19.05.2012 Saturday at 10.30 am**




**Available @ Jaffna, Nellady & Chavakacheri Branches**

**Photoshop CS5**
*A Job oriented Course for Job Seekers*



**Classes will start on 19.05.2012 Saturday at 03.30 pm**

For more details :

*Gateway Language & ICT Centre*
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

Branches :
01, New Market Building,
Chavakacheri.
Phone : 0215 567 0266 / 021 227 0323

Pointpedro Road,
Nelliady (Near HNB).
Phone : 0215 567 7606 / 021 226 2395

## மரண அறிவித்தல்

### திருமதி அக்னேஸ் இராசம்மா அந்தோனிப்பிள்ளை



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், கரம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட அக்னேஸ் இராசம்மா அந்தோனிப் பிள்ளை 09.05.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம்-மரியமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளையின் (றெபேட்) அன்பு மனைவியும், ஜெஸ்லிறாஜன் (அமெரிக்கா), ஜெயறஞ்சன் (லண்டன்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஜெயசீலன் றெபேட் (கத்தோலிக்க குரு-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மிக்கேல்றாஜா மற்றும் சூசைமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகலா (அமெரிக்கா), ஜீடி (லண்டன்), பாமதி (பிரான்ஸ்), றமேஸ் ஆகியோரின் அன்பு மாமியும், நிசாந்தி, றஜீவன், நர்மதா, சரோன், றெபேட்சன், நிலுசா ஆகியோரின் பேர்த்தியும், நிமல்றாஜ், காலஞ்சென்ற விமல்ராஜ் மற்றும் விஜியராஜ், அனிற்றா, ஜெயராணி ஆகியோரின் அன்புப் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (14.05.2012) பி.ப 3.00 மணிக்கு ஊர்காவற்றுறை, மரியன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்ட பின்னர் ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, கரம்பன் கிழக்கு,
கரம்பன்

(18181) (6,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=

கடலுணவு வகைகள், மருந்துப்பொருட்கள், குறிப்பிட்ட சில பழவகைகளையும் அனுப்பிக்கொள்ளலாம்.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் வி... பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

**Arrul Global Express**
International Courier & Cargo Service

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org